


**சங்குகன்ன**

# பாலசித்தர்

சமுதாயப் பணியே சமயப்பணி

**வீரசைவ சமய - சமுதாய மேம்பாட்டு மாத இதழ்**

திருவள்ளுவராண்டு 2057 ஜூலை 2026 பராபவ - ஆனி

மலர் : 10 இதழ் : 05


## ஆதீன முதற்குரவர் ஸ்ரீ பாலசித்தர் குருபூசைச் சிறப்பிதழ்

**புரவலர்**

மயிலம் - பொம்மபுர ஆதீனம் இருபதாம் பட்டம் குருமகா சந்நிதானம்

**சீர்வளர் சீர் சிவஞான பாலய சுவாமிகள்**


**ஆசிரியர்**

**நல்லாவூர்**

**முனைவர் ச. திருநாவுக்கரசு**

***9443906003***

**ஆலோசனைக் குழு**

**முனைவர் போ. சத்தியமூர்த்தி**

**முனைவர் இரா. பன்னிருகைவடிவேலன்**

**இதழ் அமைப்புக் குழு**

முனைவர் உ. சிவசுப்ரமணியன்

திரு. இரா. குமார்

முனைவர் நீ. காஞ்சனா

கண்ணியம் முனைவர் அ. சதீஷ்

முனைவர் க. இலட்சுமிதேவி

வெளியீடு

மயிலம் பொம்மபுர ஆதீனம்

மயிலம் 604 304

**குருமரபு வாழ்த்து**

**பரசிவமார் திருக்கயிலைப் பரம்பரையின்**
**வீரசைவ பரமே காட்டப்**
**பரனருளால் பொம்மபுரக் கடலுதித்த**
**சங்குகன்னப் பால சித்தர்**
**வரமயிலார் முருகனுப தேசமுடன்**
**வந்துகுரு வாகி யாண்ட**
**திரமிகுபேர் சிவஞான பாலயநற்**
**குருமரபு சிறந்து வாழி!**

*இவ்விதழ் பராபவ ஆண்டு ஆனி திங்கள் 29ஆம் நாள் (13.07.2026) திங்கள் கிழமை அன்று திருக்கயிலாய பரம்பரை* **மயிலம் பொம்மபுர ஆதீனம் ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் திருமடத்தில் நடைபெற்ற ஆதீன முதற்குரவர் ஸ்ரீ பாலசித்தர் குருபூசைப் பெருவிழாவில் 20ஆம் பட்டம் குருமகா சந்நிதானம் ஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகளின் திருக்கரங்களால்** *வெளியிட திருக்கயிலாய பரம்பரை செங்கோல் ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ சிவப்பிரகாச தேசிக சத்திய ஞான பரமாச்சாரிய சுவாமிகள் 103ஆவது குருமகா சந்நிதானம் அவர்களால் பெற்றுக்கொள்ளப்பட்டது.*

**அறிவிப்பு**

- *சங்குகன்னப் பாலசித்தர் - சமுதாயப் பணியே சமயப் பணி, வீரசைவ சமய - சமுதாய மேம்பாட்டு மாத இதழுக்குக் கட்டுரைகள் வரவேற்கப்படுகின்றன.*
- *படைப்புகளை ஒவ்வொரு மாதமும் கிருத்திகை நட்சத்திரத் திருநாளிலிருந்து பத்து நாள்களுக்குள்ளாகப் பாமினி அல்லது யுனிக்கோடு எழுத்துருவில் ஐந்து பக்கங்களுக்கு மிகாமல்* balasiddhar@gmail.com *என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். கட்டுரையாளர்கள் தங்கள் தொடர்பு முகவரி, தொடர்பு எண், மின்னஞ்சல் முகவரி ஆகியவற்றைக் கட்டுரையுடன் இணைத்து அனுப்பவும்.*
- *தொடர்பு எண்கள் :*
  *முனைவர் ச. திருநாவுக்கரசு - 9443906003*
  *முனைவர் அ. சதீஷ் - 9094248864*

# உள்ளடக்கம்


20ஆம் பட்டம் ஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள் அருளிய ஆசியுரை 04

20ஆம் பட்டம் குருமகா சந்நிதானங்கள் பங்கேற்றுச் சிறப்பித்த நிகழ்வுகள் 12

வீரசைவ மரபில் பாலசித்தரும் மயிலம் பொம்மபுர ஆதீனமும்,

நன்னூல்: மாணவர் நூலைக் கற்கும் முறை
- நல்லாவூர் முனைவர் ச. திருநாவுக்கரசு 13

நிரஞ்சனமாலை உணர்த்தும் வீரசைவ மெய்ம்மைகள்
- முனைவர் மு.இளையஞானி 20

ஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகள் பிள்ளைத்தமிழ்
- கலைமாமணி சீனு. வேணுகோபால் 22

நல்லாற்றூர் சிவப்பிரகாசர் ஓர் இலக்கணக் களஞ்சியம் - 14

பாரெலாம் போற்றும் பாலசித்தர் குருபூசை - தமிழாகரர் தெ. முருகசாமி 26

நால்வர் நான்மணிமாலையில் பக்தியும் முக்தியும் - 7
- முனைவர் இராச. திருமாவளவன் 32

திருவைந்தெழுத்து மந்திரம் - முனைவர் க. இளமதி சானகிராமன் 39

பூவை. கல்யாணசுந்தர முதலியார் அருளிய அகத்தியப் பஞ்சகம்
- முனைவர் அ. சிவபெருமான் 43

வீரசைவமும் வைணவமும் - புலவர் வி.ச. சந்தானம் 46

மராட்டியர் ஆட்சியும் தமிழும் - புலவர் அருணா பொன்னுசாமி 50

கள் என்னும் சொல் - ஆய்வு - புலவர் அ.பெ. கறுப்பண்ணன் 55

செல்வலை வேட்டுவன் - புலவர் பால. பழநி 60

மயிலை மலையும் மயில மலையும் - புலவர் சு. சிவகுமார் 64

குரு மேன்மை - முனைவர் நீ. காஞ்சனா 71

பாலசித்தர் வெண்பா மாலை - கண்ணியம் அ. சதீஷ் 75

சிவஞானி முழக்கும் சிறுபறை - முனைவர் க. இலட்சுமிதேவி 83

மயிலம் திருத்தலப் பாடல் 86

கருணை வடிவான கந்தா... - கலைமாமணி கோ. கலியபெருமாள் 87

மாமயில வேலவன் திருப்பள்ளியெழுச்சி, மயிலோன் திருவெம்பாவை
- தா.வேலூர் கோ. சீதாராமன் 88

செந்தமிழ்ச் சேவகர் சிவஞானி பிள்ளைத்தமிழின்
ஒரு பாடலும் உரைச் சிறப்பும் - பா. அசோக்குமார் 97

வள்ளுவரும் குமரகுருபரரும் - புலவர் சு. சொக்கலிங்கம் 100

மயிலம் முருகனும் பாலசித்தரும் - கவிஞர் சு. இளங்கோவன் 63



உ
சிவா முருகா
சிவமயம்
ஸ்ரீபாலசித்த குருவே நம:

# திருக்கயிலாய பரம்பரை மயிலம் பொம்மபுர ஆதீனம் ஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள் 20ஆம் பட்டம் குருமகா சந்நிதானம் அவர்கள் 13.06.2026 அன்று பாலசித்தர் தொடர் விரிவுரை வகுப்பில் அருளிய ஆசியுரை

*நாதம் உறுபொருளாய் நாதாந்த நாடகனாய்*
*வேத முடிமணியாம் வித்தகனைச் – சாத*
*மருள்நா சகனை மயிலைமலைத் தேனைக்*
*கருணை ஆலயனை எதிர்கண்டார்* (ஸ்ரீ சிவ.பா.தே.நெஞ். தூது)

'சங்குகன்ன பாலசித்தர்' இதழ் மாதந்தோறும் வெவ்வேறு சிந்தனைத் தளங்களில் பன்முக நோக்குடன் கூடிய அரிய கட்டுரைகளைத் தொடர்ந்து வெளியிட்டு வருகின்றது. சான்றோர் பெருமக்கள் பலர் தங்களின் பன்முகப் பார்வையால் கட்டுரைகள், கவிதைகள் வாயிலாக வாசகர்களுக்கு அறிவு விருந்தளித்து வருகின்றார்கள்.

கற்பனைக்களஞ்சியம் நல்லாற்றூர் சிவப்பிரகாச சுவாமிகளால் வீரசைவ நெறிக்காக வழங்கப்பட்ட அருட்பிரசாத நூல்கள் 'நிரஞ்சன மாலை' மற்றும் 'சித்தாந்த சிகாமணி' ஆகியவையாகும்.

அண்மையில், இந்திய ஆட்சிப் பணியாளர் (IAS) ஒருவருடன் உரையாடும் நல்வாய்ப்புக் கிட்டியது. பாரம்பரியமிக்க வீரசைவ வழிபாட்டுக் குடும்பத்தைச் சார்ந்த அவரிடம், கடந்த ஆண்டு 'சித்தாந்த சிகாமணி' நூலை வழங்கியிருந்தோம். அதனை நினைவுகூர்ந்த அவர்,

> எனக்கு எப்போதெல்லாம் ஓய்வு கிடைக்கின்றதோ, அப்போதெல்லாம் இந்நூலின் இரண்டு அல்லது மூன்று பாடல்களை ஆழமாக, நிதானமாக வாசிப்பதை வழக்கமாகக் கொண்டுள்ளேன். என் பெற்றோர் வீரசைவத்தின் பெருமைகளைப் பற்றிக் கூறுவதைக் கேட்டிருக் கின்றேன்; ஆனால், அந்தப் பெருமைகளின் நுட்பங்களைச் 'சித்தாந்த

சிகாமணி'யில் பயிலும்போதுதான் என் மனத்திற்குள் பேரொளியும் தெளிவும் பிறக்கின்றது"

என்று நெகிழ்ச்சியுடன் குறிப்பிட்டார்.

சமயம் என்பது மனிதனை சடங்குகளில் மட்டும் முடக்காமல், ஓர் உன்னதமான ஞான வழியில் உயர்த்திப் பார்ப்பதாகும். அதற்காகவே சமய வழிபாடுகளும், சமயப் பேரிலக்கியங்களும் தோற்றுவிக்கப்பட்டன என்பதை அனைவரும் அறிவோம். நல்லாற்றூர் சிவப்பிரகாச சுவாமிகள் தம் நூல்களின் வழி ஆன்மீகத்தை மட்டும் போதிக்கவில்லை; அதனைக் கடந்து 'மனிதத்துவத்தை' மிக உயரிய இடத்தில் வைத்துப் பார்க்கின்றார். சமுதாயச் சிந்தனையோடு, "எல்லா மக்களும் இன்புற்று வாழ வேண்டும், உயர்வடைய வேண்டும்" என்ற உன்னத எண்ணங்களை நெஞ்சில் ஏந்திச் சமய நெறியைப் பின்பற்றும்போதே, மனிதனுக்குப் பல்வேறு அகத்தெளிவுகள் உண்டாகின்றன.

மயிலம் தமிழ்க் கல்லூரி முதல்வர் முனைவர் ச. தருநாவுக்கரசு அவர்கள் தம் உரையில் ஒரு வரலாற்று உண்மையைச் சுட்டிக்காட்டினார். பல நூறு ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்து மறைந்த ஒரு தலைவர் அல்லது பதவியில் இருந்த ஒரு அதிகாரியின் பூத உடல் மறைந்தாலும், அவர்கள் ஆற்றிய சமுதாயப் பணிகளும், அவர்கள் படைத்த இலக்கியப் பணிகளும் யாருக்கெல்லாம் நிலைத்திருக்கின்றதோ, அவர்கள் எல்லாம் எத்தனை நூற்றாண்டுகள் கடந்தாலும் மக்கள் மனங்களில் நீங்காது வாழ்வார்கள்.

அந்த வகையில், மயிலம் தமிழ்க் கல்லூரியில் பணியாற்றிய முனைவர் ஆ. சிவலிங்கனார் அவர்கள் எழுத்துப் பணியையே தம் வாழ்நாளின் முதன்மைப் பணியாகக் கொண்டு வாழ்ந்து மறைந்தவர். 'மயிலம் முருகன் அருட்பனுவல்' என்னும் திரட்டிலிருந்து அரிய பல செய்திகளை தமிழ்க் கல்லூரி முதல்வரும், தமிழ்த்துறைப் பேராசிரியர்களும் பத்து ஆண்டுகளுக்கு முன்பே மிகச் செம்மையாகத் தொகுத்துள்ளார்கள். அதில் ஆ. சிவலிங்கனார் நூலும் இடம்பெற்றுள்ளது.

வழக்கமாக நாள்தோறும் காலையில் வழிபாட்டின்போது யாம் பாடும் 15 பாடல்களில் முனைவர் ஆ.சிவலிங்கனார் அவர்கள் இயற்றிய பாடலும் இடம்பெற்றுள்ளது. அவர் நான்கு அடிகளிலேயே மயிலம் பொம்மபுர ஆதீனத்தின் வரலாற்றை அடக்கியுள்ளார். பாலசித்தரில் தொடங்கி, முருகக் கடவுள், சிவஞான பாலய சுவாமிகள் ஆகியோரைத் தொடர்ந்து, நிறைவாகச் சிவப்பிரகாச சுவாமிகளைப் போற்றி அத்துதிப் பாடலை அவர் வடித்தெடுத்துள்ளார்.

விவசாயி ஒருவனுக்கே தன் நிலத்தின் இயல்பும், அதனை எங்ஙனம் பயன்படுத்த வேண்டும் என்பதும் மிகச்சரியாகத் தெரியும். அந்நிலத்தில் நெல்

விதைக்க வேண்டுமா, கரும்பு பயிரிட வேண்டுமா அல்லது புன்செய் தானியங்களை விளைவிக்க வேண்டுமா என்பதை அந்த உழவனே தீர்மானிக்கின்றான். அதைப்போலவே, மாணவர்களாக இருந்தாலும், ஆசிரியர்களாக இருந்தாலும், தங்களின் சிந்தனைக்கு உட்பட்ட கருத்துகளை எழுத்து வடிவிலும் நூல் வடிவிலும் ஆவணப்படுத்த வேண்டும். அவ்வாறு ஆவணப்படுத்தப்படும் எழுத்துகளே எதிர்காலச் சந்ததியினருக்குப் பயன் தரும் அறிவுப் பெட்டகமாகத் திகழும்.

17ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த நல்லாற்றூர் சிவப்பிரகாச சுவாமிகளும், இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த தெய்வப்புலவர் திருவள்ளுவரும் தங்களின் ஞானக் கருத்துகளை நமக்கு எழுத்து வடிவில் கொடையாக அளித்துச் சென்றதால் தான், இன்று நாம் அவற்றைப் படித்து இன்புறுகின்றோம்.

அவ்வகையில், மயிலம் தமிழ்க் கல்லூரி முதல்வர் முனைவர் ச.திருநாவுக்கரசு அவர்கள் 'நன்னூல்' இலக்கணத்தை எங்ஙனம் பயில வேண்டும் என்பதை எளிய படிநிலைகளாக வகுத்துக் கொடுத்துள்ளார்கள். நாம் ஒரு கருத்தைப் பேச்சாலும், எழுத்தாலும் வெளிப்படுத்தும்போது, கேட்கும் வாசகர்களின் மனநிலை அறிந்து உரைக்க வேண்டும். அப்போதுதான் நம்முடைய எண்ணமும் விருப்பமும் அவர்களைச் சென்றடையும். இதனைத் தான் ஐயா அவர்கள் நன்னூலின் வழி விளக்கியுள்ளார். தமிழில் பட்டம் பெற்றவர்களுக்கே மொழியின் இலக்கணம் நன்கு விளங்கும்; ஒரு மொழிக்கு எங்ஙனம் இலக்கணம் தேவையோ, அங்ஙனமே மனித வாழ்விற்கும் ஒரு நெறிமுறை (வாழ்வியல் இலக்கணம்) இன்றியமையாததாகும்.

நாமெல்லாம் வாழ்வது கீழைநாட்டு (இந்திய) பண்பாட்டில் ஆகும். மேலைநாட்டினருக்கு என்று தனித்ததொரு கலாச்சாரம் உண்டு; அதை நாம் குறைகூற முற்படக் கூடாது. ஆனால், நம் பண்பாட்டோடு மேலைநாட்டுப் பழக்கவழக்கங்கள் கலந்து, குழப்ப நிலையை உண்டாக்குவதுதான் பெரும் கவலைக்குரியது.

அண்மையில் பெற்றோர் பதின்ம வயதுடைய (15 - 16 வயது) தன் மகனைப் பற்றிக் கூறும்போது, "சுவாமி, பையன் மிகவும் வேகமாக இருக்கின்றான்; சொற்படி கேட்பதில்லை" என்று வருந்தினார்கள். யாம் அவர்களிடம், "பிள்ளைகளுக்குக் குடும்பச் சூழலை அன்போடு புரிய வையுங்கள்" என்று அறிவுறுத்திக் கொண்டிருந்தபோதே அந்த மாணவர் அங்கு வந்தார். பிறருக்கு உதவி செய்யும் நற்பண்பையும், பெரியோர்களையும் ஆசிரியர்களையும் குருமார்களையும் வெறுங்கையோடு காணக் கூடாது என்ற ஆன்மீகப் பண்பையும் கற்றுத் தருவதற்காக, பெற்றோர் அந்தப் பிள்ளையிடம் பணத்தைக் கொடுத்து காணிக்கையாக வழங்கச் சொன்னார்கள். அப்பிள்ளை

அதனை ஒருவித அலட்சியத்தோடு என்னிடம் நீட்டினார். யாம் அக்காணிக்கையை ஏற்றுக்கொண்டு, மீண்டும் அவரிடமே வழங்கி, "இதனை உன்னுடைய கல்விச் செலவிற்குப் பயன்படுத்திக்கொள்" எனக் கூறினோம். மேலும், பெற்றோர் அவரைக் குறித்து வருந்திய உண்மையை மறைத்து, அவரது நற்பெயரைக் காக்கும் பொருட்டு, "உங்கள் பெற்றோர் உன்னைப் பற்றி மிகவும் பெருமையாகக் கூறுகின்றார்கள், நன்றாகப் படியுங்கள்" என்று அவருக்குப் பாராட்டுரை வழங்கினேன். ஏனெனில், அப்பிள்ளையின் நடத்தை சற்று திசைமாறி இருந்தது. தங்களின் குடும்பச் சூழலை எடுத்துரைத்தாலும், பெற்றோரை ஏளனம் செய்து பேசும் மனநிலை அவரிடம் இருந்தது. இதற்கு நிதானமும் காலமும் தான் தகுந்த விடை சொல்லும்; பிள்ளைகளிடம் கோபங்கொள்ளக் கூடாது.

இன்றைய நவீனப் பரிணாம வளர்ச்சியில், மேற்கத்திய நாகரிகத்தின் ஊடுருவலால் நம் சமுதாயத்தின் வாழ்க்கை திசை மாறிக்கொண்டிருக்கின்றது. பெற்றோர்கள் முழுக்க முழுக்கத் தங்கள் பிள்ளைகளுக்காகவே வாழும் உயரிய நோக்கம் இன்று சில இடங்களில் பலவீனமடைந்து வருகின்றது. பெற்றோர்கள் பிள்ளைகளுக்குச் செய்ய வேண்டிய கடமைகளும், பிள்ளைகள் வளர்ந்த பின்பு முதிய வயதில் பெற்றோரைப் பேண வேண்டியக் கடமைகளும் உண்டு. ஒவ்வொரு மனிதனும் தன் வாழ்வில் செய்ய வேண்டிய இத்தகைய கடமைகளே 'புனிதக் கடமைகள்' என அழைக்கப்படுகின்றன.

சமுதாயக் கட்டமைப்பு தனித்து இயங்குவது அல்ல; அது ஒருவரை யொருவர் சார்ந்து வாழும் உன்னத அமைப்பு. சமய விழாக்கள், சமுதாய விழாக்கள், பெண்களைப் போற்றும் விழாக்கள் எனப் பல்வேறு தளங்களில் மேடைதோறும் நற்செய்திகள் பேசப்பட்டு வருகின்றன. இவ்விழாக்களின் ஒட்டுமொத்த நோக்கம், இந்த உலகமும், நம் நாடும், ஒவ்வொரு மனிதனும் நெறிமுறையோடு முறையாக வாழ வேண்டும் என்தாகும்.

யாம் நாள்தோறும் ஆன்மீக நூல்களைப் படிப்பதனை வழக்கமாகக் கொண்டுள்ளேன். எழுத்தாளர்கள் பலர் எழுதிய பாடல்களின் தொகுப்பாக விளங்கும் 'மயிலம் முருகன் அருட்பனுவல்' நூல் பல ஆண்டுகளாக ஆதீனத்தில் ஓலைச்சுவடிகளாக பாதுகாத்து வைக்கப்பட்டிருந்தது.

பத்து ஆண்டுகளுக்கு முன்பு கல்லூரி முதல்வர் முனைவர் ச. திருநாவுக்கரசு அவர்களும் தமிழ்த்துறைப் பேராசிரியர்களும் பதிப்பித்து வெளிக்கொண்டு வந்தனர். ஏறத்தாழ 20க்கும் மேற்பட்ட நூல்கள் இத்திரட்டில் இடம்பெற்றுள்ளன. அவற்றை வாசிக்கும்போது நம் முன்னோர்கள் எத்தகைய பக்திப் பெருக்குடன் பாடியுள்ளார்கள் என்பதை அறிய முடிகின்றது.

ஆயிரமாயிரம் மந்திரங்களை ஓதினாலும், சாத்திரங்களையும் நான்மறைகளையும் கற்றறிந்தாலும், "மயிலம் திருமடத்தில் வீற்றிருக்கும் மணக்கோல முருகா! உன்னைத் தேடி வரும் எளிய அன்பர்களின் மீது உன்னுடைய திருவருள் பார்வையைச் செலுத்த வேண்டும்" என்று ஒரு புலவர் பாடியுள்ளார். இப்பாடல்கள் யாவும் சுயநலத்திற்காகப் பாடப்பட்டவை அல்ல; உலக நன்மைக்காக, சமுதாய மக்களின் நல்வாழ்விற்காகப் புலவர்கள் தங்களை அர்ப்பணித்துக் கொண்டு படைத்த அரிய படைப்புகளாகும்.

மயிலம் தமிழ்க் கல்லூரியின் முன்னாள் மாணவரும், புதுச்சேரியில் வசிப்பவருமான பேராசிரியர் வேல். கார்த்திகேயன் ஐயா அவர்கள், வருடத்திற்கு ஒரு நூலையாவது எழுதித் தமிழுக்குக் கொடையாக வழங்கி வருகின்றார். அவர் அங்ஙனம் எழுதுவதற்கு அவரது குடும்பத்தின் ஒத்துழைப்பும், ஒற்றுமையும் மிக முக்கியக் காரணமாகும். ஐயா அவர்களின் குடும்பத்தினர் அனைவரும் குடும்ப ஒற்றுமையோடு தமிழ் மொழியின் வளர்ச்சிக்காகவே தங்களை அர்ப்பணித்து வாழ்ந்து வருவது பாராட்டுக்குரியது.

சமய நெறிகளின் வழியும், இலக்கியப் படைப்புகளின் வழியும் சமுதாயத்தில் ஒழுக்கத்தையும், பண்பாட்டையும் நிலைநிறுத்தி, புதிய படைப்பாளிகளை உருவாக்கி உலக நன்மைக்காக உழைப்பதே இத்தகைய சொற்பொழிவுகளின் - இதழ் வெளியீடுகளின் உயரிய நோக்கமாகும்.

## 14.06.2026 அன்று புதுச்சேரி கிளைமடத்தில் நடைபெற்ற சமுதாய வளர்ச்சியின் சிற்பிகளான பெண்களைப் போற்றுவோம் பெருவிழாவில் அருளிய ஆசியுரை

காலந்தோறும் சமுதாயம் எத்தகைய பாதையில் பயணிக்க வேண்டும், அதன் வளர்ச்சிக்கு என்னென்ன தேவைகள் இருக்கின்றன என்பனவற்றை உணர்ந்து, அவற்றை மக்களுக்கு வழங்க வேண்டியது அந்தந்த காலகட்டத்துச் சான்றோர்களின் முதன்மையான கடமையாகும். அந்த வகையில், இந்திய வரலாற்றில் சுதந்திரத்திற்கு முந்தைய சமுதாயச் சூழலும், சுதந்திரத்திற்குப் பிந்தைய சூழலும் முற்றிலும் வேறுபட்டவை.

இதனை ஒரு பெண்ணின் வாழ்வியலோடு ஒப்பிடலாம். திருமணத்திற்கு முன்பு ஒரு பெண் தன் குடும்பத்தாரோடு மகிழ்ந்திருக்கும் சூழல் வேறு; திருமணத்திற்குப் பின் அவள் எதிர்கொள்ளும் நிலை வேறு. ஏனெனில், திருமணத்திற்குப் பின்புதான் பெண்களுக்கான பொறுப்புகள் கூடுகின்றன; அத்தகைய சூழலில்தான் அவர்களின் தனித்துவமான திறமைகளும்

முழுமையாக வெளிப்படுகின்றன. இன்று சுதந்திர இந்தியாவில் அனைவரின் கூட்டுப் பங்களிப்பும், உழைப்பும் அதிகமாக இருப்பதனாலேயே, உலக அரங்கில் நாம் அனைவரும் போற்றும் வளர்ந்த நாடுகளின் வரிசையில் உயர்ந்து நிற்கின்றோம்.

சைவம், வைணவம் போன்ற சமயங்கள் ஒவ்வொன்றும் இறைவனை வழிபடுவதையே முதன்மை நோக்கமாகக் கொண்டுள்ளன. ஆனால், வீரசைவம் என்பது இதையெல்லாம் கடந்து ஓர் உயரிய சமுதாயப் பார்வையை முன்வைக்கிறது. சமயம் வளர வேண்டும் என்றால், அதற்கு முதலில் சமுதாயம் ஆரோக்கியமாக இருக்க வேண்டும் என்கிறது வீரசைவ நெறி. இதன் அடிப்படையிலேயே பெண்களின் முன்னேற்றத்தை மையமாகக் கொண்ட இந்த நிகழ்வு நடைபெறுகிறது.

6, 7-ஆம் நூற்றாண்டுகளில் நாயன்மார்களும் ஆழ்வார்களும் பக்திப் பாடல்களைப் பாடி இறைநெறியை வளர்த்தனர். அதே 7ஆம் நூற்றாண்டில் பாலசித்தர் தோன்றி வீரசைவச் செந்நெறியை வளர்த்தார். 9-ஆம் நூற்றாண்டில்தான் இராமானுஜர் சமுதாயத்தில் ஏற்றத்தாழ்வுகள் இருக்கக்கூடாது என்பதற்காகத் தன்னை முழுமையாக அர்ப்பணித்து ஒரு பெரும் புரட்சியைச் செய்தார். அதன் தொடர்ச்சியாக, 12-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த பசவேசரின் காலம் ஒரு புரட்சிகரமான காலகட்டமாகும். பிராமணர் குலத்தில் பிறந்த பசவேசருக்கு, அவர்களின் மரபுப்படி பூணூல் அணிவிக்க முயன்றபோது, அவர் தன் பெற்றோரை நோக்கி, "எனக்கு பூணூல் அணிவிப்பதாக இருந்தால், என்னுடன் பிறந்த தங்கைக்கும் அணிவிக்க வேண்டும்" என்று சம உரிமை கோரினார். பெற்றோர் அதற்கு மறுத்தபோது, ஆண்களுக்குரிய அனைத்து உரிமைகளும் பெண்களுக்கும் கிடைக்க வேண்டும் என்ற தேடலைத் தொடங்கினார்.

அத்தேடலின் விளைவாகவே, சாதி, மத, பாலின வேறுபாடுகள் ஏதுமின்றி யாவரும் கழுத்தில் லிங்கம் அணிந்து கொள்ளும் வீரசைவ நெறியை அவர் பரப்பினார். இவ்வியக்கத்தில் லிங்கம் அணிந்த அனைவரும் சமமாக மதிக்கப்பட்டதோடு, சமுதாயத்தில் உயர்ந்த இடத்திலும் வைக்கப்பட்டனர். திருநீறு பூசியவரையும், திருநாமம் தரித்தவரையும் கண்டால் எங்ஙனம் நமக்கு பக்திப் பெருக்கு ஏற்படுமோ, அங்ஙனமே கழுத்தில் லிங்கம் அணிந்த வீரசைவர்களையும் சமுதாயம் போற்றி வணங்கியது. இன்றும்கூட கர்நாடகப் பேருந்துகளில் பயணிக்கும் போது, பெண்கள் தங்கள் கழுத்தில் லிங்கம் அல்லது பூணூல் அணிந்திருப்பதை காண முடியும்.

பெண்கள் எந்தக் காரணத்தைக் கொண்டும் சமுதாயத்தில் ஒதுக்கப்பட்டவர்கள் இல்லை என்பதை வீரசைவக் கொள்கைகள் மிக

ஆணித்தரமாக உலகிற்கு உணர்த்துகின்றன. வழிபாட்டுக்கு முக்கியத்துவம் தரும் அதே வேளையில், சமுதாயக் கொள்கைகளையும் அரவணைத்துச் செல்வதே வீரசைவத்தின் தனிச்சிறப்பாகும்.

உலகில் பிறக்கும் ஒவ்வொரு மனிதரும் அறிவும் திறமையும் மிக்கவர்களே. அவர்களுக்கு முறையான வாய்ப்புகள் வழங்கப்படும்போது, அவர்கள் தங்களின் திறமைகளை வெளிப்படுத்தி வெற்றியாளர்களாக உருவெடுக்கிறார்கள். இந்த அறிவரங்கில் 17 பெண்கள் தங்களுக்குரிய தலைப்புகளில் மிகச் செம்மையாகப் பேசினார்கள். இவர்கள் கூறிய கருத்துகளை எழுத்து வடிவில் ஆவணப் படுத்தினால் அது காலம் கடந்து நிலைத்து நிற்கும்.

ஒவ்வொருவரும் 108 நட்சத்திர பாதங்களின் அம்சமாகப் பிறந்தவர்கள். எனவே, ஒவ்வொருவருக்குள்ளும் தனித்துவமான ஆற்றல்கள் ஒளிந்துள்ளன.

தமிழகத்தில் ஆதீனங்கள் தோன்றியதன் நோக்கமே சமய வளர்ச்சியோடு சமுதாய வளர்ச்சியும் இணைய வேண்டும் என்பதுதான். மயிலம் பொம்மபுர ஆதீனம், திருவாவடுதுறை ஆதீனம், குன்றக்குடி ஆதீனம், தருமபுர ஆதீனம், மதுரை ஆதீனம் போன்ற புகழ்பெற்ற ஆன்மீக மையங்கள், இருநூறு ஆண்டுகளுக்கு முன்பிருந்தே பெண் புலவர்களையும் தமிழ் அறிஞர்களையும் ஆதரித்துச் சமுதாயத் தொண்டாற்றி வருகின்றன.

அதேபோல், கர்நாடகத்தின் மேற்கே உள்ள மங்களூர் பகுதியில் வாழும் சில சமுதாயங்களில் இன்றளவும் பெண்களே குடும்பத்தின் வாரிசாகக் கருதப்படுகின்றனர். இது அரிய சிந்தனா பண்பாட்டுமுறை ஆகும். பெண்ணைத் திருமணம் செய்து கொள்ளும் கணவன், பெண்ணின் இல்லத்திற்கே வந்து வாழும் தாய்வழிச் சமூகமுறை இன்றும் அங்கு நடைமுறையில் உள்ளது குறிப்பிடத்தக்கது.

எழுத்தாளர்கள் செய்யும் இலக்கியப் பணிகள் சமுதாயத்தில் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்த வேண்டும். இதற்குச் சான்றாகச் சில ஆளுமைகளைக் குறிப்பிடலாம்.

நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த சுதா மூர்த்தியின் தொடக்கக்கால வாழ்க்கை வறுமையில் கழிந்தது. அப்போது பிரிட்டனை சேர்ந்த ஒருவர் அவரைத் தத்தெடுத்துப் படிக்க வைத்தார்; பின்னர் அவர் நாராயணமூர்த்தியை மணந்துக் கொண்டார். இன்று அவர்களின் பேத்தி, "மாதத்தின் 30 நாட்களில் 20 நாட்களுக்கும் மேலாகப் பல்வேறு ஊர்களுக்குச் சென்று சமுதாயப் பணியாற்றி வருகிறேன்; குடும்பத்திற்காக 10 நாட்களே செலவிடுகிறேன். காரணம், என்னை வளர்த்தது இந்தச் சமுதாயம். என் இறுதி மூச்சு வரை

*சமுதாயத்திற்காக உழைத்துக் கொண்டே இருப்பேன்" என்று பதிவு செய்துள்ளார். இத்தகைய எண்ணமே சமுதாயத்தின் உந்துசக்தி.*

*சுயசிந்தனையை வளர்த்துக் கொள்ள ஊடகங்கள் பெரிதும் உதவுகின்றன. யாம் நாள்தோறும் இரவு நேரத்தில் நியூஸ் 18 ஆங்கிலத் தொலைக்காட்சியையும், பொதிகை செய்திகளையும் தவறாமல் பார்ப்பது வழக்கம். உலகச் செய்திகளைத் தொகுத்து வழங்கும் ஒரு பஞ்சாபிப் பெண், கடந்த இரண்டு மாதங்களாகத் தொடர்ந்து வழங்கி வரும் செய்திகள் உலக நடப்புகளைப் புரிந்து கொள்ள உதவுகின்றன. ஒரு நாட்டின் வளர்ச்சிக்கு முதுகெலும்பாக இருப்பது அதன் பொருளாதாரமே ஆகும். பொருளாதாரம் சீராக இருந்தால் மட்டுமே நாடு வளம்பெறும்.*

*இந்தியாவிற்குச் சுதந்திரம் கிடைத்த தொடக்க காலத்தில் பெண்களுக்குச் சொத்தில் சம உரிமை இருக்கவில்லை. **1956**இல் சொத்தில் ஒருபகுதி பெண்களுக்கு உண்டு என்று மாறியது. பிறகு **1986**இல் ஆண்டு தமிழகத்தில் கலைஞர் கருணாநிதி அவர்களின் ஆட்சிக் காலத்தில் ஆண்களுக்கு நிகராகப் பெண்களுக்கும் சொத்தில் சம உரிமை உண்டு என்ற தீர்மானம் சட்டசபையில் நிறைவேற்றப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டது. இது வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்வாகும்.*

*கேரளா சென்றிருந்தபோது ஒரு மகளிர் விழாவிற்கு எம்மை அழைத்திருந்தனர். அங்கு பெண்களுக்கு என இரண்டு மணி நேரம் சிறப்பாக நடந்த நிகழ்வில், பலரும் பெண்களைப் போற்றிப் பாராட்டிப் பேசினர். பெண்களை இவ்வாறு மதித்துப் போற்றுவதன் மூலமே ஒரு குடும்பமும், அதனைத் தொடர்ந்து சமுதாயமும் உயரிய வளர்ச்சி அடையும் என்ற அவர்களின் ஆழ்ந்த நம்பிக்கை போற்றத்தக்கது.*

*சமுதாயத்தின் சரிபாதிச் சக்தியான பெண்களின் முன்னேற்றமும், சமத்துவமும், அவர்களின் அர்ப்பணிப்பு உணர்வுமே ஒட்டுமொத்த தேசத்தின் வளர்ச்சிக்கு அடித்தளமாகும் என்பதை மையமாகக் கொண்டே* ***"சமுதாய* வளர்ச்சியின் சிற்பிகளான பெண்களைப் போற்றும் விழா"** *திருக்கயிலாய பரம்பரை மயிலம் பொம்மபுர ஆதீனம் வீரசைவ பெரிய திருமடம் புதுச்சேரி கிளைமடத்தில் சிறப்பாக நடத்தப்பெற்றது. இதில் பங்கேற்ற அனைவருக்கும் வாழ்த்துகளும் பாராட்டுகளும்.*

உடையவனருள்.

**ஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள்**
20ஆம் பட்டம்
மயிலம் பொம்மபுர ஆதீனம்

PRGI No.TNTAM/25/A4155

# 20ஆம் பட்டம் குருமகா சந்நிதானங்கள் பங்கேற்றுச் சிறப்பித்த நிகழ்வுகள்

| | |
|---|---|
| *11.06.2026 மற்றும் 12.06.2026* | *இந்து சமய அறநிலைத்துறையின் சார்பாகக் கோயம்புத்தூரில் நடைபெற்ற கோயம்புத்தூர், ஈரோடு, திருப்பூர், நாமக்கல், சேலம், கரூர் ஆகிய மேற்கு மாவட்டங்களை ஆய்வு செய்யும் ஆகம குழுக் கூட்டத்தில் நீதியரசர் சொக்கலிங்கம், குன்றக்குடி ஆதீனம் தவத்தரு பொன்னம்பல அடிகளார், மேனாள் தலைமைத் தேர்தல் ஆணையர் திரு. கோபால்சாமி ஆகியோருடன் 20ஆம் பட்டம் குருமகா சந்நிதானம் அவர்கள் பங்கேற்றுச் சிறப்பித்தார்கள்.* |
| *28.06.2026* | *தமிழ்நாடு வீரசைவர் பேரவை மற்றும் தலைமை ஜங்கம் சமூக நலச்சங்கம், நாகரத்தினம் - அங்காளம்மாள் கல்வி அறக்கட்டளை சார்பாக சேலத்தில் நடைபெற்ற முப்பெரும் விழாவிற்கு 20ஆம் பட்டம் குருமகா சந்நிதானம் அவர்கள் எழுந்நருளி தலைமை வகித்து அருளாசி வழங்கினார்கள். இதில் கர்நாடக அமைச்சர் மாண்புமிகு ஈஸ்வர் காந்த்ரே அவர்கள் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்றுச் சிறப்பித்தார்கள்.* |
| *01.07.2026* | *இந்து சமய அறநிலைத்துறையின் சார்பாக மதுரையில் நடைபெற்ற மதுரை, திண்டுக்கல், தேனி, விருதுநகர், சிவகங்கை, ராமநாதபுரம், தூத்துக்குடி, திருநெல்வேலி, தென்காசி, கன்னியாகுமரி ஆகிய தென்மாவட்டங்களை ஆய்வு செய்யும் ஆகம குழுக் கூட்டத்தில் நீதியரசர் சொக்கலிங்கம், குன்றக்குடி ஆதீனம் தவத்தரு பொன்னம்பல அடிகளார், மேனாள் தலைமைத் தேர்தல் ஆணையர் திரு. கோபால்சாமி ஆகியோருடன் 20ஆம் பட்டம் குருமகா சந்நிதானம் அவர்கள் பங்கேற்றுச் சிறப்பித்தார்கள்.* |
| *06.07.2026* | *கடலூர் மாவட்டம் திட்டக்குடி அருகே உள்ள பெருமுலை கிராமத்தில் நடைபெற்ற ஸ்ரீ முத்தையா சுவாமி பச்சையம்மன் திருக்கோயில் குடமுழுக்கு நன்னீராட்டுப் பெருவிழா யாகசாலைப் பூசையில் 20ஆம் பட்டம் குருமகா சந்நிதானம் அவர்கள் பங்கேற்றுச் சிறப்பித்தார்கள்.* |



# வீரசைவ மரபில் பாலசித்தரும் மயிலம் பொம்மபுர ஆதீனமும்

நல்லாவூர் முனைவர் ச. திருநாவுக்கரசு

முதல்வர்

ஸ்ரீமத் சி.பா.சு.த.க.அ. கல்லூரி, மயிலம்

தமிழகத்தின் சமய வரலாறு வழிபாட்டு முறைகளின் வரலாறு மட்டுமல்ல. அது தமிழரின் பண்பாடு, வாழ்க்கை முறை, சமூக அமைப்பு, இலக்கிய வளர்ச்சி, அரசியல் மாற்றங்கள் ஆகிய அனைத்தையும் உள்ளடக்கிய நாகரிக வரலாறாகும். தமிழர்களின் தொன்மையான வழிபாட்டு மரபு இயற்கை வழிபாட்டிலிருந்து தெய்வ வழிபாட்டிற்கு வளர்ச்சி பெற்றது. தொல்காப்பியர் குறிஞ்சி நிலத்திற்குரிய தெய்வமாக "சேயோன் மேய மைவரை உலகம்" என முருகனைச் சுட்டுகின்றார். இது தமிழர்களின் முதன்மைத் தெய்வவழிபாட்டை வெளிப்படுத்துகிறது.

பண்டைத் தமிழரின் வாழ்க்கையில் கொற்றவை வழிபாடும் வேலன் வெறியாட்டும் முருக வழிபாடும் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்திருந்தன. சங்க இலக்கியங்களில் காணப்படும் முருக வழிபாடு சமய நம்பிக்கையன்று; அது தமிழர் இன அடையாளமாகவும் பண்பாட்டு அடையாளமாகவும் விளங்கியது. திருமுருகாற்றுப்படை முருகனைத் தமிழரின் உயிர்த்தெய்வமாகப் போற்றுகிறது. பரிபாடலும் முருக வழிபாட்டின் பெருமையை விரிவாக எடுத்துரைக்கிறது.

காலப்போக்கில் தமிழகத்தில் சமணமும் பௌத்தமும் செல்வாக்குப் பெற்றன. கல்வி, அறம், துறவு, அரச ஆதரவு ஆகியவற்றின் மூலம் இச்சமயங்கள் விரிவடைந்தன. இதனால் சைவமும் வைணவமும் ஓரளவு பின்னடைவைச் சந்தித்தன. இந்நிலையில் கி.பி. 5 - 7 ஆம் நூற்றாண்டுகளில் சைவ சமயத்தை மீண்டும் எழுச்சியுறச் செய்ய இறையருளால் திருநாவுக்கரசர், திருஞான சம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர் போன்ற நாயன்மார்கள் தோன்றினர். அதேபோல் வைணவ சமய வளர்ச்சிக்காக ஆழ்வார்கள் தோன்றிப் பக்தி இயக்கத்தை வலுப்படுத்தினர். இவ்வியக்கங்களால் தமிழகத்தில் இந்து சமயங்கள் மறுமலச்சியும் எழுச்சியும் பெற்றன.

அதே வரலாற்றுப் பின்னணியில் வீரசைவ மரபும் தன்னுடைய தனித்துவமான ஆன்மீகப் பணியை மேற்கொள்ள திருக்கயிலாயத்தில் மேற்குத் திசைக் காவலராக விளங்கிய சிவகணங்களில் ஒருவரான சங்குகன்னர் பூலோகத்தில் வீரசைவ சமயத்தை வளர்க்க இளையருளால் தமிழ்நாடு

விழுப்புரம் மாவட்டம் பொம்மையபாளையக் கடற்கரை அருகில் பத்து வயது பாலகனாக அவதரித்தார். இவர் பாலசித்தராக மயிலம் பொம்மபுர ஆதீனத்தின் தோற்றத்திற்கு அடித்தளம் அமைந்தார். இது தமிழ்ச் சமய வரலாற்றில் குறிப்பிடத்தக்க நிகழ்வாகும்.

தமிழகத்தின் சமய வரலாற்றில் ஒவ்வொரு மறுமலர்ச்சிக் காலமும் ஒரு மாபெரும் ஆளுமையை உருவாக்கியுள்ளது. சமண - பௌத்தச் செல்வாக்கு அதிகரித்த காலத்தில் சைவத்தை நிலைநாட்ட நாயன்மார்கள் தோன்றினர்; வைணவத்தை வளர்க்க ஆழ்வார்கள் தோன்றினர். அதேபோல வீரசைவ மரபில் சிவபெருமானின் திருவருளால் பூலோகத்தில் அவதரித்த சங்குகண்ணராகிய பாலசித்தர், வீரசைவ நெறியைத் தமிழ்நாட்டில் நிலைநிறுத்திய ஆன்மீக முன்னோடியாக விளங்குகிறார்.

சைவ சமயத்தின் பல்வேறு மரபுகளில் வீரசைவம் தனித்துவமான இடத்தைப் பெற்றுள்ளது. இலிங்க வழிபாட்டை மையமாகக் கொண்டு, பக்தி, அறம், ஆன்மிகம், சமுதாயத் தொண்டு ஆகியவற்றை ஒருங்கிணைக்கும் **பொதுவுடைமை** நெறியே வீரசைவம்.

வீரசைவம் தத்துவ மரபாக மட்டுமல்ல; சமூக விழிப்புணர்வை ஏற்படுத்திய இயக்கமாகவும் விளங்கியது. சமயத்தை மக்களிடம் கொண்டு செல்லும் பணியில் வீரசைவத் துறவிகள் குறிப்பிடத்தக்க பங்காற்றினர். தென்னிந்தியாவில் பல திருமடங்கள் உருவாகி கல்வி, சமயம், தமிழ், சமுதாயப் பணிகளை மேற்கொண்டன. அவற்றுள் முதன்மையான தனிச்சிறப்புடன் விளங்குவது திருக்கயிலாய பரம்பரை ஞான ராச தானியான இனமாம் பொம்மையபாளையம் வீரசைவப் பெரிய திருமடம் ஆகும். தற்போது மயிலம் பொம்மபுர ஆதீனமாகச் செயலாற்றுகின்றது.

பாலசித்தர் உலகியல் வாழ்வை நோக்கமாகக் கொள்ளவில்லை. சமுதாயப் பணியையும், வீரசைவச் சமய வளர்ச்சியையும், உயிர்களின் ஆன்மீக முன்னேற்றத்தையும் தமது வாழ்க்கையின் குறிக்கோளாகக் கொண்டார்.

தமிழர்களின் தொன்மைக் கடவுளாகிய முருகப்பெருமானை நேரில் வழிபட வேண்டும் என்ற ஆழ்ந்த பக்தி பாலசித்தரை ஆட்கொண்டது. இந்த விருப்பமே அவரது ஆன்மீக வாழ்வில் புதிய திருப்பத்தை ஏற்படுத்தியது. அவர் திண்டிவனம் - பெருமுக்கல் மலை சென்று கடுந்தவம் புரிந்தார். அங்கு அவருக்கு ஒரு தெய்வீகக் குரல், "மயிலம் மலைக்குச் செல்; அங்கே உனது தவம் நிறைவேறும்" என்று அருளியது. அந்த அருள்வாக்கை ஏற்றுப் பாலசித்தர் மயிலம் மலையை அடைந்தார்.

மயில மலையில் அவர் **32** ஆண்டுகள் இடையறாத கடுந்தவம் மேற்கொண்டார். உடலின் துன்பத்தைப் பொருட்படுத்தாமல், மனத்தை

ஒருமுகப்படுத்தி, முருக பக்தியுடனும் தவமிருந்தார். இறுதியில் மணக்கோல மாமுருகன் அவருக்குத் திருக்காட்சி அளித்து அருள்புரிந்தார். இந்த நிகழ்வு பாலசித்தரின் ஆன்மீக வாழ்க்கையின் உச்சநிலையாக மட்டுமன்றி, மயிலம் மலையைத் தமிழ்ச் சமய வரலாற்றில் புனிதத் தலமாக உயர்த்திய நிகழ்வாகவும் அமைந்தது.

முருகப்பெருமான் பாலசித்தருக்கு மணக்கோலத் திருக்காட்சியளித்து அருள்புரிந்தமை தெய்வக் காட்சியாக மட்டுமல்ல; வீரசைவமும் தமிழர் முருக வழிபாடும் ஒன்றிணையும் ஆன்மீகச் சின்னமாகவும் விளங்குகிறது. பாலசித்தரின் தவம் தனிப்பட்ட முக்திக்காக அல்ல; சமய மறுமலர்ச்சிக்கும், உயிர்களின் ஆன்மீக முன்னேற்றத்திற்குமான தவமாக இருந்தது என்பதையே இந்நிகழ்வு உணர்த்துகிறது.

முருகனின் அருளைப் பெற்ற பாலசித்தர், தமக்குப் பின்னரும் இந்த ஞானமரபு நிலைத்து நிற்க வேண்டும் என்று விரும்பினார். துறவியின் வாழ்க்கை தனிமனித ஆன்மீக அனுபவத்தில் முடிவடையக் கூடாது; அது தலைமுறைகளை வழிநடத்தும் மரபாக மாற வேண்டும் என்ற உயரிய நோக்கத்தோடு அவர் முருகனை வேண்டினார். அந்த அருளின் விளைவாகவே ஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள் தோன்றி ஞான குருபரம்பரையைத் தொடர்ந்ததாக ஆதீன வரலாறு கூறுகிறது.

மயிலம் பொம்மபுர ஆதீனக் குருபரம்பரையின் தனிச்சிறப்பு என்னவெனில் அது சமயச் சடங்கில் தன்னைச் சுருக்கிக் கொள்ளவில்லை. சிவபக்தி, முருக பக்தி, தமிழ் வளர்ச்சி, சமூகப் பணி, கல்விப் பணி, அறப்பணி ஆகிய அனைத்தையும் ஒருங்கிணைத்த வாழ்வியல் இயக்கமாகத் திகழ்ந்தது.

தமிழகத்தில் பல வீரசைவ ஆதீனங்கள் தோன்றியுள்ளன. அவை ஒவ்வொன்றும் தத்தம் சமயப் பணிகளில் சிறந்து விளங்கின. அவற்றுள் மயிலம் பொம்மபுர ஆதீனத்தின் தனிச்சிறப்பு என்னவெனில் ஆதீன முதற்குரவர் பாலசித்தர் வீரசைவம் தழைத்தோங்கச் செய்ததும், தமிழரின் தொன்மைத் தெய்வமாகிய முருகனை வழிபாட்டு மையமாகக் கொண்டு சமய வளர்ச்சியை முன்னெடுத்ததும் ஆகும்.

வீரசைவர்கள் சிவனை முழுமுதற் கடவுளாக ஏற்றுக் கொள்கின்றனர். இருப்பினும், மயிலம் பொம்மபுர ஆதீனத்தில் முருக வழிபாட்டிற்கு வழங்கப்படும் முக்கியத்துவம் தமிழர் பண்பாட்டின் தொடர்ச்சியையும், தமிழ்ச் சமய மரபின் ஆழத்தையும் வெளிப்படுத்துகிறது. குறிஞ்சி நிலத்தின் தலைவனாகிய முருகன், தமிழரின் அடையாளமாக விளங்குகிறார். எனவே முருகனை மையமாகக் கொண்ட இவ்வாதீன மரபு, வீரசைவத்தையும் தமிழரின் தொன்மை மரபையும் இயல்பாக இணைத்துச் செல்கிறது.

இந்த அணுகுமுறை தமிழ்ச் சமய வரலாற்றில் குறிப்பிடத்தக்க ஒன்றாகும். சிவபெருமானும் முருகப்பெருமானும் எதிரெதிரான தெய்வங்களாக அல்ல, ஒரே சிவஞான மரபின் இரு அருளுருவங்களாகக் கருதப்படுகின்றனர்.

மயிலம் பொம்மபுர ஆதீனம் தமிழ் மொழியை வழிபாட்டு மொழியாக மட்டுமல்ல, சமுதாய விழிப்புணர்விற்கான கருவியாகவும் பயன்படுத்தியது. தமிழில் சமய நூல்கள் வெளியிடப்பட்டன. உரைகள் எழுதப்பட்டன. சொற்பொழிவுகள் நடத்தப்பட்டன. புலவர்கள் ஊக்குவிக்கப்பட்டனர். சமுதாயம் முன்னேறுவதற்கான மொழியாகவும் சமயம் மக்களிடம் செல்வதற்கான மொழியாகவும் தமிழையே ஆதீனம் தேர்ந்தெடுத்தது. தமிழ் வழி இறைநெறி பரப்பப்பட வேண்டும் என்ற கொள்கை, இவ்வாதீனத்தின் ஒவ்வொரு குருமகா சந்நிதானத்தின் பணியிலும் வெளிப்படுகிறது. இதனால் வீரசைவம் தமிழருக்குள் அந்நிய மரபாக இல்லாமல், தமிழ் ஆன்மீக மரபின் ஓர் அங்கமாக நிலைபெற்றது.

பாலசித்தர் தோற்றுவித்த குருபரம்பரை காலந்தோறும் பல குருமகா சந்நிதானங்களால் சிறப்புறத் தொடரப்பட்டது. ஒவ்வொரு பட்டத்திலும் அந்தந்தக் காலத்தின் தேவைக்கு ஏற்பச் சமுதாயப் பணியும், சமயப்பணியும் தமிழ்ப்பணியும் விரிவடைந்தன. ஆலயத் திருப்பணிகள், இலக்கிய வெளியீடுகள், ஆன்மிகப் பயிற்சிகள், கல்வி நிறுவனங்கள், சமூகச் சேவைகள் ஆகியவை தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டன. இதன் மூலம் ஆதீனம் ஒரு சமய நிறுவனமாக மட்டுமன்றி, தமிழ்ச் சமூகத்தின் பண்பாட்டு மையமாகவும் திகழ்ந்தது. பாலசித்தரின் நோக்கமே இதுவாக இருந்தது. சமயம் என்பது மக்கள் வாழ்க்கையை உயர்த்த வேண்டும்; சமுதாய ஒற்றுமையை வளர்க்க வேண்டும்; அறநெறியை நிலைநாட்ட வேண்டும் என்ற கொள்கையை அவரது குருபரம்பரை தொடர்ந்து செயல்படுத்தி வந்துள்ளது.

குறிப்பாகத் தற்போதைய 20-ஆம் பட்டம் குருமகா சந்நிதானம் ஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள் அவர்களின் அருளாட்சி காலத்தில், கல்வி, அறநெறி, ஒழுக்கம், ஆன்மிக விழிப்புணர்வு, அன்னதானம், பொதுநலச் சேவைகள், நூல் வெளியீடுகள், இதழ் வெளியீடு, தமிழ் இலக்கிய மாநாடுகள், தமிழறிஞர்களைப் பாராட்டுதல், கல்வி நிறுவனங்களுக்கு ஆதரவு, மாணவர்களை ஊக்குவித்தல், சமயச் சொற்பொழிவுகள், போன்ற பல்வேறு துறைகளில் இவ்வாதீனம் தொடர்ந்து பணியாற்றி வருகிறது. இப்பணிகள் சமய வளர்ச்சியோடு சமூக முன்னேற்றத்தையும் இணைத்துச் சென்றுள்ளது. பாலசித்தர் விதைத்த ஆன்மீக விதை இன்று பரந்த ஆலமரமாக வளர்ந்திருப்பதை உணர முடிகிறது.

தற்போது மயிலம் பொம்மபுர ஆதீனம் வீரசைவத் திருமடமாக மட்டும் விளங்கவில்லை; தமிழ் மொழி, தமிழர் பண்பாடு, சமுதாய மேம்பாடு, முருக

*வழிபாடு, கல்வி, அறநெறி முதலிய அனைத்தையும் ஒருங்கிணைக்கும் அரிய பண்பாட்டு நிறுவனமாகத் திகழ்கிறது. குறிப்பாக 20ஆம் பட்டம் குருமகா சந்நிதானத்தின் அருளாட்சியில் தமிழ் இலக்கிய வளர்ச்சி, ஆய்வுப் பணிகள், சமயப் பரவல், சமூகச் சேவை ஆகியவை புதிய உச்சத்தை எட்டியுள்ளன.*

*பாலசித்தரின் வரலாறு என்பது ஒரு சமய மரபின் தோற்ற வரலாறாக மட்டுமல்ல; தமிழின்வழிச் சமயத்தையும், சமயத்தின்வழிச் சமூகத்தையும், சமூகத்தின் வழிப் பண்பாட்டையும் வளர்த்த வீரசைவ மறுமலர்ச்சி இயக்கத்தின் வரலாறாகக் கருதப்பட வேண்டும். இதுவே திருக்கயிலாய பரம்பரை மயிலம் பொம்மபுர ஆதீனத்தின் நிலையான வரலாற்றுப் பெருமையாகும்.*

## நன்னூல் - புலமை நிறைவடையும் முறை

**1. புலமை நிறைவடையும் முறை**

***ஆசான் உரைத்தது அமைவரக் கொளினும்***
***கால் கூறு அல்லது பற்றலன் ஆகும்.*** *(நூற்பா 44)*

***அவ்வினையாளரொடு பயில்வகை ஒருகால்,***
***செவ்விதின் உரைப்ப அவ்இரு காலும்***
***மைஅறு புலமை மாண்பு உடைத்தாகும்.*** *(நூற்பா 45)*

*பண்டைய தமிழர்களின் இந்தக் கற்றல் கோட்பாடு, இன்றைய நவீனக் கல்வியியலில் கூறப்படும் "டார்கெட்டிங் லேர்னிங் பிரமிடு"* (Learning Pyramid) *மற்றும் "ஃபெய்ன்மேன் நுட்பம்"* (Feynman Technique) *ஆகியவற்றுடன் நூற்றுக்கு நூறு பொருந்திப் போகிறது. ஒரு துறையில் முழுமையான நிபுணத்துவம்* (100% Mastery) *பெற மூன்று நிலைகள் தேவை என்கிறது நன்னூல்:*

**அ] ஆசிரியரிடம் கேட்பது: 25% [கால் பங்கு]**

*ஆசிரியர் கூறுவதை முழுமையாகக் கேட்டாலும் ஒருவனுக்கு 25% அறிவே கிட்டும்.*

*ஒரு மாணவர் கல்லூரியில் பேராசிரியரின் விரிவுரையைக் கேட்பது அல்லது யூடியூப் போன்ற தளங்களில் ஆன்லைன் வகுப்புகளைப் பார்ப்பது முதல் நிலை. இங்கே மாணவர் வெறும் 'நுகர்வோர்' மட்டுமே. வகுப்பைக் கவனிப்பதால் மட்டும் ஒருவரால் அந்தத் துறையின் நிபுணராக முடியாது; அது வெறும் தொடக்கம் (25%) மட்டுமே.*

**ஆ] சக மாணவர்களுடன் கலந்துரையாடல்: 25% [கால் பங்கு]**

*தன்னோடு படிக்கும் பிற மாணவர்களுடன் சேர்ந்து பயில்வதால் அடுத்த 25% அறிவு கிட்டும். இன்றைய கல்வி முறையில் இதற்கு குழு விவாதம்* (Group Discussion / Peer-to-Peer Learning) *என்று பெயர். வகுப்பறை*

முடிந்ததும் மாணவர்கள் வாட்ஸ்அப் குழுக்கள் போன்ற தளங்களிலோ அல்லது நேரடியாகவோ கூடி, "அன்னைக்கு சார் நடத்துன கோட்ஸ்/கணக்கு உனக்குப் புரிஞ்சுதா? இதை எப்படிச் செய்யலாம்?" என்று விவாதிக்கும் போது, புதிய பார்வைகளும் சிந்தனைகளும் பிறக்கின்றன. இது அறிவை 50%-ஆக உயர்த்துகிறது.

**இ] பிறருக்குக் கற்றுக் கொடுத்தல்: 50% [அரை பங்கு / இருகால்]**

தான் கற்றதைத் தான் மட்டும் வைத்துக் கொள்ளாமல், பிறர் அறியுமாறு செம்மையாகப் பாடம் நடத்தினால் மீதமுள்ள 50% அறிவும் கிடைத்து, குற்றம் அற்ற முழுமையான புலமை (100%) கிட்டும்.

புகழ்பெற்ற இயற்பியலாளர் ரிச்சர்ட் ஃபெய்ன்மேன், "ஒரு கருத்தை நீங்கள் ஆழமாகக் கற்க வேண்டுமானால், அதை ஒரு குழந்தைக்குப் புரியும் படி நடத்திக் காட்டுங்கள்" என்றார்.

இன்று ஒரு மாணவர் தான் கற்ற கோடிங் (Coding) முறையைத் தன் சக மாணவனுக்குப் புரிய வைக்கும் போதோ, தேர்வுக்கு முன்னால் சக நண்பர்களுக்கு 'க்ராஷ் கோர்ஸ்' போலப் பாடம் நடத்தும் போதோ, அல்லது தான் படித்ததைப் பற்றி ஒரு வலைப்பதிவு எழுதும் போதோ தான் அவனது மூளை மிகத் தீவிரமாகச் செயல்பட்டு, சந்தேகங்கள் தீர்ந்து, அறிவு முழுமை பெறுகிறது.

**2. ஆசிரியரிடம் மாணவர் பழகும் முறை**

***அழலின் நீங்கான் அணுகான் அஞ்சி***
***நிழலின் நீங்கான் நிறைந்த நெஞ்சமொடு***
***எத்திறத்து ஆசான் உவக்கும் அத்திறம்***
***அறத்தில் திரியாப் படர்ச்சி வழிபாடே.***

இந்த நூற்பா ஆசிரியர் மற்றும் மாணவருக்கு இடையேயான "தொழில்முறை எல்லை மற்றும் மரியாதை" பற்றிப் பேசுகிறது. இதற்கான சமகால விளக்கங்கள்:

**அ] அழலின் நீங்கான் அணுகான் [நெருப்பைப் போன்ற எல்லை]**

குளிர்காய்பவர் நெருப்பை விட்டு மிகத் தூரமும் போகாமல், மிக நெருங்கியும் சுட்டுக் கொள்ளாமல் இருப்பதைப் போல, ஆசிரியரிடம் எல்லையோடு பழக வேண்டும்.

அணுகான் (அளவுக்கு மிஞ்சிய நெருக்கம் கூடாது): இன்று சமூக ஊடகங்களின் பெருக்கத்தால் ஆசிரியர்களும் மாணவர்களும் வாட்ஸ்அப், இன்ஸ்டாகிராமில் எளிதாக இணைகிறார்கள். அதற்காக, ஆசிரியரை ஒரு சாதாரண நண்பனைப் போலக் கருதி நள்ளிரவில் குறுஞ்செய்தி அனுப்புவதோ, அளவுக்கு மீறிய தனிப்பட்ட உரிமைகளை எடுத்துக் கொள்வதோ கூடாது. அது கற்றலின் கண்ணியத்தைக் கெடுக்கும்.

*நீங்கான் (அகன்று போதலும் கூடாது):*** அதே சமயம், ஆசிரியரைக் கண்டு பயந்து, தன் சந்தேகங்களைக் கூடக் கேட்காமல் விலகி ஓடவும் கூடாது. மெண்டார் எனப்படும் வழிகாட்டியுடன் எப்போதும் தொடர்பில் இருக்க வேண்டும்.

நெருப்பு உடலுக்குத் தேவையான வெப்பத்தைத் தருவது போல, ஆசிரியரின் வழிகாட்டுதல் வாழ்வின் உயரத்திற்குத் தேவை. எனவே, பக்குவமான இடைவெளி அவசியம்.

**ஆ] நிழலின் நீங்கான் [தொடர்ந்து பின்பற்றுதல்]**

உடலை விட்டு நிழல் பிரியாதது போல ஆசிரியரைப் பின்பற்ற வேண்டும்.

இதன் பொருள் 24 மணி நேரமும் ஆசிரியரின் பின்னால் ஓட வேண்டும் என்பதல்ல. ஆசிரியர் காட்டும் நல்வழி, அவரது ஒழுக்கம், அவர் சொல்லும் அறிவுரைகள் ஆகியவற்றைத் தன் நிழல் போல வாழ்நாள் முழுக்கத் தொடர்ந்து கடைப்பிடிக்க வேண்டும். ஒரு சிறந்த பேராசிரியரின் ஆய்வு நெறிமுறைகளையும் கடின உழைப்பையும் ஒரு மாணவர் தன் வாழ்நாள் முழுக்கத் தன் பணியில் பிரதிபலிப்பதே இதற்குச் சான்று.

**இ] எத்திறத்து ஆசான் உவக்கும் அத்திறம் அறத்தில் திரியாப் படர்ச்சி**

ஆசிரியர் மனம் மகிழும் படி, ஆனால் அறநெறியிலிருந்து மாறாமல் நடந்துகொள்வதே உண்மையான வழிபாடு.

ஒரு நவீன ஆசிரியருக்கு மாணவர் செய்யும் ஆகச்சிறந்த மரியாதை என்பது அவருக்குப் பொன்னாடை போர்த்துவதோ, காலில் விழுவதோ அல்ல. ஆசிரியர் கொடுத்த வீட்டுப்பாடத்தை அல்லது ஆராய்ச்சித் திட்டத்தை நேர்மையாக, எவ்வித காப்பி அடித்தலும் இல்லாமல் குறித்த நேரத்தில் சமர்ப்பிப்பது.

**வகுப்பறையில் ஒழுக்கத்தைக் கடைப்பிடிப்பது;**

* கற்ற கல்வியைப் பயன்படுத்திச் சமூகத்திற்கு நல்லது செய்வது.
* ஆசிரியர் காட்டிய நேர்மையான வழியில் (அறத்தில் திரியாமல்) வாழ்வில் பெரும் வெற்றியடைந்து, நல்ல நிலைக்கு உயர்ந்து நிற்பது.

இதைத்தான் ஆசிரியர் மனதார விரும்புவார். இந்த நடத்தையே சமகாலத்தில் மாணவர் ஆசிரியருக்குச் செய்யும் உண்மையான 'வழிபாடு' ஆகும்.

நன்னூலார் காட்டிய இந்த நெறிகள் வெறும் ஏட்டுச் சுரைக்காய் அல்ல. இன்றும் கார்ப்பரேட் நிறுவனங்களில் வழங்கப்படும் "Peer Training (சக ஊழியர்களுக்குப் பயிற்சி அளித்தல்), மற்றும் கல்வி நிறுவனங்களில் உள்ள "Mentor-Mentee System" (வழிகாட்டி-மாணவர் முறை) ஆகியவற்றுக்கு இந்த நூற்பாக்களே அடித்தளமாக விளங்குகின்றன.

# நிரஞ்சன மாலை உணர்த்தும் வீரசைவ மெய்ம்மைகள்

முனைவர் மு. இளையஞானி
வீரசைவச் சான்றோர், நெய்வேலி - சென்னை
தொடர்பு எண்: 9443286180

பரம் பொருளுக்கு தடத்த நிலையில் பல்வேறு பெயர்களை அமைத்துள்ளனர்.தடத்த நிலை பெயர்கள் எல்லாம் பொதுப்பெயர்களாகவும், இயக்கப்பெயர்களாகவும், தத்துவ நிலைப்பெயர்களாகவும் அமைந்திருக்கும். நல்லாற்றூர் சிவப்பிரகாசர் வீரசைவர்கள் எப்படி அழைப்பார்கள் என்பதை விளக்குகிறார்.

**தடத்த நிலைப் பெயர்கள்**

1. பொதுப்பெயர்கள் - சிவம், பதி
2. தொழில்(இயங்கு) நிலைப்பெயர்கள் - நாதன், கூத்தன், முக்கண்ணன், ஆண்டவன், நீலகண்டன்
3. தத்துவ பெயர்கள் - சத்து, சித்து, ஆனந்தன் சிவப்பிரகாசர் உணர்த்துவது

நிரஞ்சனமாலை ஒன்பதாவது திருப்பாடலில் சத்து சித்து என்பதையே உணர்த்துகிறார்.

> ***"சத்து அங்கலிங்களாயே நிகழ்ந்தது. சக்தி பக்தி***
> ***சித்து இங்கு அடைந்தது. கைமுக அர்ப்பித் சேடங்களாய்***
> ***மெத்தென்று இலங்குறின் ஆனந்தமே. என் விழி களிப்பக்***
> ***கைத்தங்கு செம்பொருள் அருள்காட்டும் கறைக்கண்டனே" (9)***

என் கண்கள் களிப்புற கையின் கண் எழுந்தருளியுள்ள செம்பொருளே அருள்காட்டும் நீலகண்டனே சத்து ஆனது அங்கலிங்கங்களாயே நிகழ்ந்தது.சித்தானது சக்தியையும் பக்தியையும் அடைந்தது நின் ஆனந்தமே என்றவாறு எனப் பொருள் காண்பர்.

**சத்து**

சத்து என்பது நிலைபேறுடையது. இதற்கு மாறானது அசத்து ஆகும்.

| ***சத்து*** | ***அசத்து*** |
|---|---|
| 1 .ஒன்று | 1. பல |
| 2. நிலைபேறுடையது | 2. மாறும் தன்மை உடையது |
| 3. அறிவாய் உள்ளது | 3. அறிவற்றதாய் உள்ளது |
| 4.உயிருக்கு உயிராய் உள்ளே இருப்பது | 4. உயிருக்கு வேறாய் இருப்பது |

| | |
|---|---|
| *5 தன் அறிவால் அறியப்படுவது* | *5. சுட்டறிவால் அறியப்படுவது* |

*என வேறுபடுத்தித் தெரியலால். சத்து - பதி. அசத்து - பாசமும் உலகமும். வீரசைவம் அங்கலிங்கமாய் எழுந்தருளியவன் சத்தானவன் என்கிறார் நல்லாற்றூர் சிவப்பிரகாசர்.*

**சக்தியும் பக்தியும் ஆன சித்து**

*சித்து - அறிவுடையப் பொருள். பதி, பசு, பாசத்தில் அறிவுடையப் பொருள் இரண்டுள்ளது.*

*1.இறை 2. உயிர். இரண்டும் அறிவுடையப் பொருளாயினும் பல்வேறு வேறுபாடுகளை உடையது ஆகும்.*

| **இறை** | **உயிர்** |
|---|---|
| *1. பேரறிவு உடையது* | *1. சிற்றறிவு உடையது* |
| *2. தானே யாவற்றையும் அறியும் தன்மை உடையது* | *2. ஐம்பொறிகளின் வழியேஅறியும் தன்மை உடையது* |
| *3.இறைவன் அறியும் அறிவு ஒருபடித்தாய் நிலையானது* | *3. சூழ்நிலையின் அடிப்படையில் மாறும் தன்மைக் கொண்ட அறிவு.* |

*சித்தானது சக்தியும் பக்தியும் உடையது என்கிறார் நல்லாற்றூர் சிவப்பிரகாசர். சக்திகள் - 6 - கிரியா சக்தி, ஞான சக்தி, இச்சா சக்தி, ஆதி சக்தி, பராசக்தி, சிற்சக்தி*

*பக்திகள் 6 - சற் பக்தி (நல்லொழுக்கம்) நயிஷ்டா பக்தி (அன்பு), அவதான பக்தி - (மெய்மை எல்லாம் விளக்கமே) அனுபவ பக்தி (ஆணவம் அற்ற நிலை) ஆனந்த நிலை (அனுபவத்தால் வரும் உணர்வு) சமரச பக்தி (சீவன் சிவத்தில் ஒன்றுதல்).*

*மேற்காணும் சக்திகள் தடத்த நிலை சிவனின் கூறுகள் ஆகும். பக்திகள் ஆன்மாவின் தனிமைகள் ஆகும் எனக் கொள்ளவேண்டும்.*

**ஆனந்தம்**

*பேராற்றலும் (சக்தி) பேரறிவும் (சித்து) இருப்பவனிடம் ஆனந்தம் தானாகவே வந்தடையும். இப்பேரானந்தம் உயிரையும் வந்தடையும். சத்தும் சித்துகளை உணர்ந்து பக்தி கொண்டு ஒழுகினால் ஆனந்தம் உயிரின்மாட்டு வந்து அடையும் என்பதே சிவப்பிரகாசரின் கருத்தாகும்.*

*ஆன்மா பேரானந்த நிலையைப் பெறுவதற்குத் தோன்றும் துணையாக இருப்பது அங்கத்தில் உள்ள இட்டலிங்கமே ஆகும்.*

PRGI No.TNTAM/25/A4155

# ஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகள் பிள்ளைத்தமிழ்

**செந்தமிழ்ச் செம்மல் கலைமாமணி சீனு. வேணுகோபால்**
மேனாள் தமிழாசிரியர், பொம்மையபாளையம்

*எத்துணையும் பேதமுறாது எவ்வுயிரும் தம்முயிர்போல் எண்ணி உள்ளே ஒத்துரிமை உடையவராய் திகழ உன்னத வழிகாட்டுவதே வீரசைவம். சிறப்புமிக்க வீரசைவநெறி விளங்க சிவனருளால் சங்குகன்ன பாலசித்தராய் மண்ணுலகில் அவதாரம் செய்தார். அவர் வழியால் வீரசைவம் போற்றும் சிவனே சிவஞானி என்னும் மாண்புக்குரிய குருவாக விளங்க ஆசி நல்கி அருள்பாலித்தார் பாலசித்தர். சிவஞானியைத் தன் ஞானாசிரியராக ஏற்று அவரது பெருமை மற்றும் வீரசைவ நெறியின் கொள்கைகளைப் பைந்தமிழில் நூல்கள் பல இயற்றினார் நல்லாற்றூர் சிவப்பிரகாச சுவாமிகள்.*

*தமிழையும் வீரசைவத்தையும் இருகண்ணெனப் போற்றிய ஸ்ரீ சிவப்பிரகாசரின் பெருமைகளையும் அவரின் வீரசைவ நெறி போற்றிய மாண்பையும் உணர்ந்து அவரைப் பாட்டுடைத் தலைவராக்கிச் சிற்றிலக்கிய வகையில் வரும் பிள்ளைத்தமிழைப் பண்ருட்டி மணி அப்பாவு அய்யர் அவர்கள் எழுதி சிவப்பிரகாசரைப் போற்றிப் பாடியுள்ளார். சிவப்பிரகாசரைக் குழந்தையாகப் பாவித்து அந்தக் குழந்தையின் செயல்களை, சிறப்பு இயல்புகளைச் செந்தமிழில் செழுமையானப் பாடல்கள் வாயிலாக நூலாசிரியர் போற்றியுள்ள விதம் மிகவும் வணங்குதற்கு உரியதாகும்.*

*மேற்கண்ட பிள்ளைத்தமிழில் சப்பாணிப் பருவத்தில் நல்லாற்றூர் சிவப்பிரகாசக் குழந்தையைச் சப்பாணி கொட்டியருள்க என வேண்டுவதாக அவர் வழங்கியுள்ளப் பாடல்கள் அத்துணையும் அமுதம் என்றால் மிகையன்று.*

**சகல மலம் அகல் சிவப்பிரகாச மாமுனிவ!**

***மாற்றல் இல் புகழ்கச்சி மாநகரின்***
***வதிதருகு மாரசாமித் தேசிகர்***
***வளர் அருணை சேர்ந்துசிவ பூசைசெய***
***நோக்குழிமா பூசையுறு பேடகம்***
***தேற்றம் இன்மையின் . . . .***

*இனி நீ அங்கலிங்கத் தொன்னெறியின் உறையும்.. எனும் பாடல் சிவப்பிரகாசரின் தந்தை குமாரசாமி தேசிகர் பற்றிய செய்திகளை மிக அழகாகப் பதிவு செய்துள்ளார். திருவண்ணாமலை கார்த்திகை தீப தரிசனத்திற்காக வந்தவர் பூசைபெட்டி காணாமல் போன நிகழ்வின் மூலம் சைவராக இருந்த அவரை வீரசைவ நெறிக்கு மாற்றிய இறைவனின் திருவிளையாடலைப் பதிவு செய்துள்ளார்.*

*காஞ்சிபுரத்தில் வசித்த குமாரசாமி தேசிகர் என்பவர், தாம் திருவண்ணாமலைக்குக் கார்த்திகை தீபம் காண வந்த போது சிவபூசைப் பெட்டி காணாதது தெரிந்தது .இடையில் தங்கி வந்த போது அங்கோர் இடத்தில் தவறி இருக்கலாம் என்றெண்ணி, உடன் வந்த சிலரை அனுப்பித் தேடி வரச்சொன்னார். அது கிடைக்காத காரணத்தால் அன்றிரவு உணவுமின்றி துயருடன் கண்ணயரத் கனவில் சிவபெருமான் சங்கமர் வடிவில் வந்து துயரப்பட வேண்டாம் பூசைபெட்டி நாளை வரும், இனி நீ அங்கலிங்க நெறியான வீரசைவ நெறியில் நடப்பாயாக. உனக்கு நன்மக்கள் தோன்றுவர். அவரால் உனக்கு நற்கதி உண்டாம் எனச் சொல்லத் தேசிகரும் வீரசைவராகி ஒழுகும் நாளில் சிவபெருமான் கூற்றுப்படித் தோன்றித் தேசிகர்க்கு வீடுபேற்றை அளித்தவரே! ஆணவ மலம் நீங்கிய ஸ்ரீ சிவப்பிரகாச மாமுனிவரே! சப்பாணி கொட்டியருள்க! என மிக அற்புதமாகப் பாடி வீரசைவத்தின் மேன்மையைப் போற்றுகிறார்.*

**சந்தமலி பொழில் சுலவு நல்லாறை அமர் தலைவ!**

***தந்தந்தையாங் குமர சாமிதே சிகன் உயத்***
***தகுநெறி உணர்ந்து சோண***
***சயிலப் பிரான்திரு வருள்திறம்***
***நினைந்தருணை தனில் அடைந் தேழ்வயதினில்***
***பைந்தமிழினிற் சோண சயில மா***
***லைப்பிரபந்தம் எனும் ஓர் அலங்கல்***
***பண்பின் உருகாத வரும் நெஞ்சு நெக்கு***
***உருகிப் பரிந்துகண் ணீர்பொழிந்தே***
***இந்த இயல்பு அற்புதமது என்னவே"***

*தந்தையாராகிய குமரசாமி தேசிகர் வீரசைவ நெறியில் ஒழுகுமாறு செய்த அண்ணாமலை இறைவனுக்கு ஏழு வயதில் "சோணசைல மாலை" என்னும் மாலையை யாவரும் பாராட்டி இறைவன் அருள் பெறுமாறு சூட்டியருளிய வித்தகரே! சிவப்பிரகாச மாமுனிவரே சப்பாணி கொட்டியருள்க!*

*சந்தமலி பொழில் சுலவு நல்லாறை அமர்ந்த தலைவ! சப்பாணி கொட்டியருள்க! என்பார். இப்பாடலில் நல்லாற்றூரில் அமர்ந்துள்ள தலைவரே! எனப் பதிவு செய்து நல்லாற்றூரில் அவர் அருள்பாலிக்கின்ற நிலையையும் மிக அற்புதமாக விளக்கி ஸ்ரீ சிவப்பிரகாசரைப் போற்றி நிற்பார்.*

**மழைபொழி கருணை மேகமே!**

*உலகம் செழிக்க வேண்டிப் பாடல் எனும் மழைபொழியும் கருணை மேகமென ஸ்ரீ சிவப்பிரகாசரைப் போற்றி*

***"பாரினர்கள் விலைமதிப் பிரியசூ ழியமுநெற்***
***றிடப்பட்ட முஞ்சுட்டியும்***

*பந்தமுறு வாகுவல யமும்வான வில்லெனப்*
*பல்வகைக் கதிர் பரப்ப*
*ஏரிலக மார்பமற் மதாணியொண் பரிதியென*
*இளவெயில் எறிப்ப அருகே . . . .”*

*நல்லாற்றூர் ஸ்ரீ சிவப்பிரகாசர் அணிந்துள்ள நகைகளின் அணிவகுப்பை அழகு தமிழில் நூலாசிரியர் விளக்கும் தன்மை போற்றி மகிழ்தற்குரியதாகும். உலக நவமணி விற்பவர்களால் விலைமதிக்க முடியாத சூழியமும் நெற்றிப்பட்டமும் சுட்டியும் கட்டப்பட்ட வாகுவலயமும் வானவில்லைப் போல பலவித நிறக்கதிர்களை வீசவும் அழகு மார்பில் பொருந்திய மதாணியானது(பதக்கம்) அழகிய சூரியன் போல் இள ஒளி வீச இதன் பக்கத்தில் அழகிய நட்சத்திரக் கூட்டம் போல முத்து மாலைகளும் அம்மலைகளின் நடுவே சேர்ந்து இருளைப் போக்கவும் வெண்திங்களை ஒக்கும் இட்டலிங்கங்கள் உள்ள செச்சை வெண்ணிற ஒளியை வீசவும் இடையில் அணிந்துள்ள மேகலையும் கால் சிலம்பும் முதலியன அதிர்ந்து ஒலிக்கவும் உலகம் செழிக்க வேண்டி பொருந்தும் பெரிய பாடல்களாகிய மழையைப் பொழியும் கருணை மேக வடிவினரே! ஆணவ மலம் நீங்கிய சிவப்பிரகாசரே! மாமுனிவரே! சப்பாணி கொட்டியருள்க என்பார்.*

*இப்பாடலில் சிவப்பிரகாசரின் புலமை நலத்தின் பேராற்றலை நூலாசிரியர் மிக அழகாகக் கற்போர் நெஞ்சில் மகிழ்வை உருவாக்கும் வண்ணம் பதிவு செய்திருப்பது போற்றி வணங்குதற்குரியதாகும்.*

**கோதறு சாதன நீதி தெரிந்தவ**

*புலமலி வேலையற் கருணைவி ளக்கர்*
*புகழ்ஞா னாம்பிகை யெனப்*
*புகல்தரும் மூவர்தம் முன்னவ ராகிப்*
*பொருவில்பல் கலைகளும் ஓர்ந்து*
*இலகிய துறவறம் எய்தித் திருவெங்*
*கைத்தலம் மேய இறைக் (கு)*
*எழில்மிகு கோவைமுன் னாந்ததமிழ் மாலை*
*யியம்பி வதிந்துழி, அத்*
*தலமுறு தொண்டர் தமக்குபகாரத் . . . .”*

*கருணைப் பிரகாசம், வேலையர், ஞானாம்பிகை ஆகிய மூவர்க்கு முன்னவராகத் தோன்றிக் கலைபல உணர்ந்து, திருவெங்கைத்தலம் அடைந்து திருவெங்கைக் கோவை முதலிய நூல்களை அருளி அவ்வூர்ப் பிடாரித்தேர்த் தொண்டர்கட்குப் பயன்படும் முருங்கை மரத்தை அழிக்க ஒருபாடல் மூலம் அத்தேரை அழித்த வித்தகரே! சப்பாணி கொட்டுக, இப்பாடல் இவரது சகோதர சகோதரி பற்றியும் திருவெங்கைத்தலத்திலிருந்து பல பனுவல்கள் அருளியது பற்றியும் சிறப்பாகக் குறிப்பிடுகிறது.*

PRGI No.TNTAM/25/A4155

**இட்டலிங்க அபிடேக மாலை எனும் பதிகம் அருளிய சற்குருவே!**

*நரர்களின் அரசர்கள் அவர்களின் நரகந்*
*தருவர்கள் அவர்களினும்*
*நாடுறு சுரகந் தருவர்கள் அவர்களின்*
*நண்ணுறு சுரர் அவரில்*
*சுரர் அதிபதி யவனினுமிகு சுரகுரு*
*அவனினும் பிரமன்*
*தொகுசுக முறையே சதமடி யெனமேல்*
*துன்னினும் அவையெல்லாம்*
*அரன்அருள் பரமானந்தசு கோததி*
*யதின் ஒரு திவலையளவு*
*அன்றென உண்மை விளக்கி . . . .*

*அரசர்கள், பாதாள உலகத்தில் உள்ளவர்கள், கந்தர்வர், தேவர் தலைவனாகிய இந்திரன் சுகத்தைக் காட்டிலும் தேவகுரு எனச் சொல்லப்படும் வியாழன் சுகத்தைக் காட்டிலும் பிரமனால் கூடும் சுகத்தைக் காட்டிலும் ஒன்றையொன்று நூறுமடங்காக விளங்கினும் அவையெல்லாம் அச்சுகங்களெல்லாம் சிவபிரான் அருளுகின்ற மேலான ஆனந்தமாகிய இன்பக்கடலில் எழுகின்ற ஒரு துளி அளவு இன்பத்திற்கு நிகரில்லாதது என்ற உண்மை விளங்க இட்டலிங்க அபிடேக மாலை எனும் பதிகம் முதலிய நூல்களை அருளிச் செய்த சற்குருவே! வீரசைவ சமய நெறியை அறிவித்தவரே! கொட்டுக சப்பாணி என்பார்.*

*பைந்தமிழ்ப் புலமையும் தெய்வநலமும் ஒருங்கிணைந்த உயர்குணத்து உத்தமர் நல்லாற்றூர் கற்பனைக் களஞ்சியம் ஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகள் பற்றிய தகவல்களை உள்ளடக்கி உள்ளார்ந்த பக்திகலந்த உணர்வோடு படைக்கப்பட்ட இந்நூல்வழி ஸ்ரீ சிவப்பிரகாசர் பெருமைகளை உணர்வோம். அவரது ஞானாசிரியராகிய ஸ்ரீ சிவஞானி பதம் பணிவோம்! அனைவரும் சமம் எனும் வீரசைவ நெறியை அகிலமெங்கும் பரவச் செய்வோம்.*

# நல்லாற்றூர் சிவப்பிரகாசர் ஓர் இலக்கணக் களஞ்சியம் - 14

**கற்பனைக் களஞ்சிய நம்பி தமிழாகரர் தெ. முருகசாமி**
(மேனாள் முதல்வர், இராமசாமி தமிழ்க் கல்லூரி, காரைக்குடி), புதுச்சேரி - 09, தொடர்பு எண் 9790115625

ஓர் ஆன்மா திருச்செந்தூரை அடைந்து முருகனது அருளைப் பெற்ற அனுபவத்தைப் பதிவு செய்வதாக உள்ளது கீழ்க்கண்ட திருச்செந்தில் நிரோட்டக அந்தாதியின் 14 ஆம் பாடலாகும்.

**சீர் பிரியாப் பாடல்**

*இன்னந்தி யங்கி நிகர்த்தசெங் கேழன்கை யீரிரண்டா*
*யின்னந்தி யங்கிரி யைச்சிலை யாக்கிதன் சேயெழிற்செய்*
*யின்னந்தி யங்கி யிருங்கஞ்சஞ் சேர்செந்தி லெந்தைதளை*
*யின்னந்தி யங்கிசை யக்கதி யீந்தன னென்றனக்கே.*

**சீர் பிரித்த பாடல்**

*இன் அந்தி அங்கி நிகர்த்த செங்கேழன், கைஈ ரிரண்டு ஆம்*
*இல் நந்தி ஆம் கிரியைச் சிலை யாக்கி தன் சேய், எழில் செய்*
*யில் நந்தி இயங்கி இரும் கஞ்சம் சேர செந்தில் எந்தை தளை*
*யின் நந்தி அங்கு இசையக் கதியீந்தனன் என்றனக்கே*

**பாடலின் பிண்டப் பொருள்**

சிவந்த வானத்தையும் அக்கினியையும் போன்ற செந்நிறத்தை யுடையவராகியும் நான்கு கைகளையுடைய நந்தி என்னும் பெயருடையவரும் அழகிய மாமேரு மலையை வில்லாக வளைத்தவருமாகிய,

சிவபெருமானின் மகனாய் அழகிய சங்குகள், வளையல்களில் ஊர்ந்து சென்று தாமரை மலரில் சென்று தங்கும் திருச்செந்தூரில் வீற்றிருக்கும் முருகன்,

ஆன்மாக்களின் பக்குவத்திற்கேற்ப அருள்பாலிப்பவராவர், இத்தகு செந்தில் முருகன், பாசங்களால் கெட்டலைந்து திரியும் ஆன்மாக்களைத் தன் இருப்பிடத்திற்கு வரவழைத்து அருள் பாலிப்பதை அறிந்த ஆன்மாவாகிய நான் அந்த அருள்கொழிக்கும் திருச்செந்தூரைச் சேர எனக்கும் அருளை ஈந்தான் என ஓர் ஆன்மா கூறுவதாகப் பாடல் உள்ளது.

**சொற்பொருள்;**

அந்தி - செவ்வானம், அங்கி - நெருப்பு, இவ்விரண்டும் போன்ற செந்நிறத்தைச் சிவன் உடையவன், அவனைப் போல அவனது மகனும் செக்கச்சிவந்தவன் என்ற இரட்டுறமொழிதலில் செங்கேழன் என்றார் நல்லாற்றூர் சிவப்பிரகாசர். நந்தி எனும் பெயர் சிவனுக்கு உரியதாயினும் நந்தி என்ற

தேவகணத் தலைவனின் பெயரே சிவனுக்கும் உள்ளது. என்றாலும் ஒரு வேறுபாடு உண்டு.

சிவனுக்கு உமா தேவியாம் இல்லக்கிழத்தி உண்டு. ஆனால் தேவகணத்தலைவனாம் நந்திக்கு மனைவியில்லை; அதாவது மணமாகாதவர் என்பதால் சிவப்பிரகாசர் "ஆய் இல் நந்தி" என்றார் இங்ஙனம் கூறியதால் ஆய் என்ற சொல் உமையாம் தாயினைக் குறிக்க, இல் என்பது உமையம்மையை இல்லாதவர் - எனக் குறிக்க தேவகணத்தலைவன் திருமணம் ஆகாதவர் என்றாலும் அவரது பெயரான நந்தி என்பதை மட்டும் உடையவர் சிவபெருமான் என்பதாக மிக நுட்பமாக உணர்ந்து தெளிவுமாறு சிவப்பிரகாசர் சொற்செறிவுடன் கூறினார் என்பது கருத்து.

மனைவியில்லாத நந்தி எனக் குறித்தாலும் அவர் சிவபெருமானின் அம்சமானவர் என்பதைக் குறிக்கவே கைஈரிரண்டு ( நான்குகை) உடையவர் என்ற சொல்லால் சிவத்தின் அம்சமே நந்தி என்ற சிவப்பிரகாசரின் செஞ்சொல்லாடல் திறனை என்னென்பது? அடுத்து தளையின் நந்தி என்ற சொல்லாடலும் சிந்தைக்கு விருந்தான செஞ்சொற்பதமாம் எனலாம்.

நந்துதல் என்றால் குறைதல் என்ற பொருளும் உண்டு. அந்த வகையில் "தளையின் நந்தி" என்றால் ஆன்மாவுக்கே உள்ள பாசத்தளை ( பாசக்கட்டு), நந்திட (குறைந்துவிட்ட நிலையில்) திருச்செந்தூரைச் சேர்ந்தால் ஆன்மா முருகனின் அருளுக்குப் பாத்திரமாகும் என்ற கருத்தைச் சிவப்பிரகாசர் நுட்பமாகக் கூறினார் என்பது கருத்து (கஞ்சம்- தாமரை)

அடுத்து அகப்பொருள் நிலையில் அமைந்த 15 ஆம் பாடலை சிந்திப்போமாக!

## பாரெலாம் போற்றும் பாலசித்தர் குருபூசை

ஐம்பூதக் கலப்பாலான இவ்வுலகம் வான மண்டல இயக்கத்தால் இயங்குகிறது. வானம் எல்லா இயக்கத்திற்கும் மூலம். காற்று - மரணம் வரை உயிரைத்தக்க வைப்பது. நீர் - உயிரினத்தைச் சுத்திகரிப்பது, நெருப்பு - உயிரின் அறிவுக் கோட்பாட்டிற்குரியது. மண் - அனைத்தையும் தாங்குவது,

இவ்ஐம்பூதப் பரிமாணத்தில் வானந்தான் சூரிய சந்திர நட்சத்திரங்களுடன் கோள்களின் சுழற்சியால் உலகை இயங்க வைக்கிறது. இஃதோர் அறிவியல் சார்ந்த ஆன்மீகக் கண்டுபிடிப்பு. இதனை வெகு நுட்பமாக உணர்ந்து தெளிந்த மனித இனம் தம்மை அடக்கத்தோடு காட்டிக்கொள்ள உலக இயற்கைப் படைப்பை இறைப்படைப்பாகக் கூறித் தன்னை அர்ப்பணித்து மகிழ்ந்தது, அதன் வெளிப்பாடாக அமைந்தது தான் கீழ்வரும் முத்தொள்ளாயிரக் கடவுள் வாழ்த்துப் பாடலாகும்.

PRGI No.TNTAM/25/A4155

***மன்னிய நாள்மீன் மதிகனலி என்றிவற்றை***
***முன்னம் படைத்த முதல்வனைப் – பின்னரும்***
***ஆதிரையான் ஆதிரையான் என்றே அறையுமால்***
***ஊர்திரைநீர், வேலி உலகு***

*வான மண்டல விண்மீன் (நட்சத்திரங்கள்) சந்திரன் (மதி) சூரியன் (கனலி) என மூன்றும் ஒளியை உமிழும் இயற்கைப் படைப்புகள், இவ்வுண்மையைத்தான் பாடலின் தொடக்கமான மன்னிய (நிலைபெற்ற) என்ற சொல் உணர்த்தினாலும் மனித இனத்திற்கே உரிய அடக்கத்தின் வெளிப்பாடாக உபசார வழக்காய் அதாவது ஒப்புக்காய் இவற்றையெல்லாம் படைத்த முதல்வன் ( இறைவன்) எனக் கூறி மகிழ்கிறது. முத்தொள்ளாயிரம் கடவுள் வாழ்த்து பாடல்.*

*இங்ஙனம் இயற்கை படைப்பைக் கொழித்தெடுத்துக் கூறுகையில் அந்த இறைவனை வழி வழியாக அதாவது பாடல் உணர்த்தும் பின்னரும், மக்கள் ஆதிரையான் ஆதிரையான் என்றே ஒரு நட்சத்திரத்தைக் சுட்டியே கூறிப் பாடல் போற்றுவது சிந்தனைக்குரியது.*

*27 நட்சத்திரங்களில் திருவாதிரையும், திருவோணமுமே திருஎன்ற அடைமொழி பெற்ற சைவ, வைணவக் கடவுளர்களின் திருவிழாக் குறிப்பைக் கொண்டவைகளாக உள்ளன. திருவாதிரைப் பற்றி முத்தொள்ளாயிரம் சிலாகித்தது போல் திருவோணம் பற்றி மதுரைக்காஞ்சி சிறப்பிக்கின்றது.*

*அறிவியல் நிலையில் ஆயிரம் மின்சக்தி ஆற்றல் உடைய சோதியாக* (1000VOLT) *திகழ்வது திருவாதிரை நட்சத்திரமாகும். இந்த அடிப்படையில் தான் திருவாதிரையாகச் சிவபெருமானைக் கண்ட சைவர் அந்நாளை ஞான உபதேசம் பெறும் நாளாகத் திருமடங்களும் திருக்கோயில்களும் விழாக்களை முன்னெடுத்தன. ஒரு நெல் நூறு நெல்லாய்ப் பெருகுவது போல ஞானத் துலக்கத்தை பெறுதற்குரிய நாளாக அத்திருவாதிரையைக் கருதியதால்தான் நம் முன்னோர் "திருவாதிரைக்கு ஒருவாக்களி" - என்பதாகப் பழமொழி பகர்ந்தார்கள்.*

*திருவாதிரைக்குரிய நாளில் விரதம் இருந்து எளிய சிறுதானிய சிற்றுணவாகக் களி செய்து அதனை ஆண்டவனுக்கு நிவேதித்து விரதத்தை நிறைவு செய்வதாய் உண்டு மகிழ்வர். ஒருவாக்களி என்றால் பேருண்டியாக இல்லாமல் சிறிது வயிற்றுக்கு ஈனுவதாக உண்பது. ஒருவாய்க்களி என்ற சொல்லே ஒருவாக்களி எனப்பட்டது. ஓரளவு விரதம் முடிப்பதற்காகச் சிறிதளவு உண்டல் என்பது கருத்து. இங்ஙனம் உடல்நலம் பேணும் முறையில் திருவாதிரை நாளின் உணவு பற்றிய குறிப்பை அப்பழமொழி பகர்ந்தாலும் சிறிது வயிற்றுக்கு உணவு ஈந்ததும் உணர்வு (அறிவு)துளிர்க்கும், அதாவது உணர்வு வேலை செய்யத் தொடங்கும் என்பதில் மானைக் காட்டி மானைப் பிடிப்பது போல அப்பழமொழியின் மறு வாசிப்பு ஓர் உன்னதத்தைச் சுட்டும்போது*

"திருவாதிரைக்கு ஒருவாக்களி என ஞான உபதேசத்தை ஆன்மாவுக்கு ஈயும் நாளாக அதனை ஆன்றோர் விரித்துரைத்தனர். திருவாதிரை நாளிலே ஒரு வாக்கு என்பது ஒப்பற்ற உபதேசம் அளித்தால் அது பெருகி வளரும் என்ற கருத்தில் உடலுக்கான உணவு அளிக்கப்பட்டதோடு உயிருக்கான உணர்வை அளிக்க உபதேசம் செய்யப்படும் என்பது மெய்ஞானமாகும். இதைத்தான் பாரதியார் உலகியல் கல்வியாக வரையறுத்துக் கூறும் போது,

**வயிற்றுக்குச் சோறிடல் வேண்டும் – இங்கு**
**வாழும் மனிதர்க்கெல்லாம்**
**பயிற்றுப் பல கல்வி தந்து இந்தப்**
**பாரை உயர்த்திடல் வேண்டும்**

என்ற கவிதை வரிக்குள் பெரிய ஞான விசாரணை விடயத்தையே அடக்கி கூறிவிட்டார் எனலாம். இத்தகு பெருமை வாய்ந்த தெய்வீகத் திருவாதிரை நாளில் சீவ ஐக்கியம் கொண்டவர் தான் மயிலம் சங்குகன்ன பாலசித்தர் என்பவராவார்.

வீரசைவ வித்தகரான பாலசித்தர் கயிலாயத்தில் சிவகணத் தலைவராயிருந்தவர். சிவபெருமான் கட்டளையால் வீரசைவ மகிமையைப் பரப்பும் பொருட்டு அருந்தமிழ்நாடு செய்த தவத்தால் இந்தியக் கிழக்குக் கடலில் பொம்மபுரத்தருகே பாலவடிவில் அவதாரம் செய்து பெருமுக்கல் என்னும் மலையில் தங்கியிருந்து தவமிருந்து அடியார்களுக்குச் செயற்கரும் செயல்களையெல்லாம் செய்து காட்டி அங்கிருந்து மயிலமலை வந்தருளி முருகப்பெருமானை வழிபட்டு வந்தார்.

கள்ளிப் பாலையே உணவாக உண்டு வாழ்ந்த சித்தர் தனக்குப் பின் வீரசைவ வித்தகத்தை வளர்க்கும் பொருட்டான அருளாட்சிபுரிய தக்க ஒருவர் வேண்டுமென மயிலம் முருகனிடம் விண்ணப்பித்து வந்ததன் பயனாக ஆதிசிவஞான பாலய சுவாமிகள் தோன்றிய அளவில் மயிலம் மலைக் கோவில் முருகன் சந்நிதிக்குத் தென்பால் விசுவநாதர் என்ற பெயருடன் சிவலிங்க ஐக்கியமானார்கள்.

அப்புனித நன்னாள்தான் ஆனித்திங்கள் திருவாதிரையாகும். இந்நாளை மயிலம் வீரசைவம் பெரிய திருமடத்தின் கர்த்தாக்கள் வழிவழியாகப் போற்றிக் குருபூசையாகக் கொண்டாடி வந்தார்கள்.

மயிலத்து அளவிலேயே நடந்து வந்த குருபூசையை 19 - ஆம் பட்டத்து சுவாமிகள் பாலசித்தர் ஐக்கியமான திருவாதிரை நாள் மகிமையை நாடறியச் செய்யக் குருபூசையைப் பெரிதாக விரிவடையச் செய்ததோடு பொதுவாக திருவாதிரை மகிமையைப் பலரும் அறிய செய்ய ஒவ்வொரு மாத திருவாதிரை நாளில் திருமுறை முற்றோதலை இல்லங்கள் தோறும் நடைபெற வேண்டித் திட்டமிட்டு செய்ததன் சிறப்பில் 120 திருவாதிரை நாள் திருமுறை முற்றோதல் வைபவம் பற்பல இடங்களில் நடந்தன.

PRGI No.TNTAM/25/A4155

பல இடங்களில் பலரால் நல்ல வரவேற்பைப் பெற்ற இந்நிகழ்வில் சிறப்பானதாகச் சில ஆதீன குருமகா சன்னிதானங்கள் கலந்துகொண்டு வாழ்த்துரை வழங்கி அருளியுள்ளார்கள் என்பது திருவாதிரை நாளின் திருமுறை முற்றோதலுக்கான முத்திரையாக இருந்தது என்றால் அதில் மிகை இல்லை எனலாம். இங்ஙனமாக **120** மாதங்களாக **120** திருவாதிரை நாளில் திருமுறை முற்றோதலை **19-**ம் பட்டத்து சுவாமிகள் பாலசித்தர் சித்தி அடைந்த திருவாதிரை நாள் மகிமையைப் பறைசாற்றியதென்பது திருமடத்தின் குறிக்கோளான வீரசைவமும் வீறுதமிழும் தழைத்தினிது ஓங்கச் செய்யும் பிரகடனமாக இருந்தது எனலாம்.

இப்படி திருவாதிரையை மயிலம் வீரசைவ திருமடம் வெகுவிமர்சையாகக் கொண்டாட ஓர் இன்றியமையாத காரணம் உண்டு. அகண்ட பேரொளியான திருவாதிரை நாள் என்பது சிவபெருமானின் ஞான ஒளி சொரூபமான நாள் என்பதோடு, அந்நாளில் தான் சேக்கிழார் பெரியபுராணம் எழுதத் தொடங்கி அதாவது சித்திரைத் திங்கள் திருவாதிரையில் தொடங்கி ஓராண்டு முடிவில் சித்திரை திருவாதிரை நாளிலேயே புராணத்தை முடித்த புனிதத்திற்குரியது அந்நாளாகும்.

மேலும் திருஞானசம்பந்தரின் அவதாரமும் மூன்று வயதில் ஞானப்பால் உண்டதும் அத்திருவாதிரை நட்சத்திர நாளாம் என்று சேக்கிழார் புராணம் பாடிய சிதம்பரம் கொற்றவன்குடி உமாபதி சிவாச்சாரியார் திருவாதிரை நாள் சிறப்பைக் கூறியுள்ளார்கள். ஆக எல்லா வகையிலும் சிறந்த திருவாதிரை நாளை மேலும் பரிமளிக்கச் செய்யும் வகையில் அதாவது குருபூசையாலே குவலயம் ஓங்கும் என்று வீரசைவ பிரகடனமாக இருபதாம் பட்டத்து சுவாமிகள் சொற்பொழிவு, விருது அளிப்பு, கல்வி ஊக்குவிப்பு, நூல் வெளியீடு போன்றவற்றால் சிறப்பிப்பது பெரிதும் போற்றுதற்குரியதாம் என்று பால சித்தர் நற்குரு பூசையால் ஞாலந்தான் சீலம்பெறுகிறார்.

## வீரசைவ வித்தக விநோத உபதேசம்

மயிலம் பொம்மபுர ஆதீனம் இருபதாம் பட்டம் குருமகா சந்நிதானம் அவர்கள், **19** ஆம் பட்டம் சிவ ஐக்கியமானதும் **2011** இல் ஆதீன அருட்பீடம் ஏற்கும் நாளில் வழங்கி அருளியவுரை, வீரசைவ வித்தக விநோத உபதேச மகா வாக்கியமாக இருந்தது. அதைப்பற்றிய பதிவு, வீரசைவத்திற்கு ஒரு புத்தொளியாக இருந்தது என்பதைக் கூடுதல் தகவலோடு கூறவிழைகிறது இக்கட்டுரை.

**30.05.2026** இல் நடந்த பொம்மபுர ஆதீனப் பெரிய குருபூசை விழாவில் வழக்கமாகப் பேசிய பலரின் வரிசையில் இடம் பெற்ற நான், மகா சந்நிதானம் அருட்செங்கோல் பிடித்த நாளில் அவர்கள் வழங்கிய உரையை

நினைவுக்கூர்ந்தேன். அதாவது, அன்றைய விழா மேடையில் பல சந்நிதானங்கள் வீற்றிருந்தார்கள், அருட்கம்பீரக் கொலுவுடன் வீற்றிருந்த இருபதாம் பட்டம் சுவாமிகள் விழா நிறைவில் பேசினார்கள். சந்நிதானங்களெல்லாம் மேடையில் உள்ளோம் அன்பர்களாம் நீங்கள் விழா மேடைக்குக் கீழ்த் தளத்தில் உள்ளீர்கள்.

"நாங்கள் உங்களை நோக்கி இரண்டடி கீழ் இறங்கிவர, நீங்கள் எங்களை நோக்கி இரண்டடி மேல் ஏறிவர இருவர்களும் சந்திக்கும் இடமே சமய சமூதாயப் புதுக்கலப்பின் கட்டுமானத்தை உருவாக்குவதாக அமையும்". என்று கூறியருளியது வீரசைவ சித்தாந்த வரலாற்றில் புதிய சேர்மானக் (PROPORTION) கருத்தாக இருந்தது.

மேலும், சந்நிதானம் தொடர்ந்த அருளுரைத் தொடர்ச்சியில், மேடையில் இருப்பதாலேயே மேலோர் என்றோ, கீழே இருப்பதால் கீழோர் என்றோ பொருள் இல்லை, இருவரின் சங்கமச் சந்திப்புதான் சமய சமுதாய வளர்ச்சிக்கான அடித்தளம், என்றார்கள்.

சுவாமிகளின் மேற்படியான கருத்தாடல் (DISCOURSE) வடலூர் வள்ளலார், ஒத்தாரும் உயர்ந்தாரும் தாழ்ந்தாரும் ஒருமை உளராகி இவ்வுலகியல் நடத்திடல் வேண்டும் என்ற அருட்பாவுக்கான உரை விளக்கமாக இருந்ததோடு,

***மேலிருந்தும் மேலல்லார் மேலல்லர் கீழிருந்தும்***
***கீழல்லார் கீழல் லவர். (973)***

என்ற அய்யன் திருவள்ளுவரின் குறட்கானதோர் புத்துரையின் ஒரு மருங்காய், இருந்தது. என்று (30.05.2026) ல் நினைவுக் கூர்ந்தேன். விழாவிற்கு வருகை புரிந்து குருபூசை பற்றிச் சிறப்பான குறிப்புரை தந்து போகிய பேராசிரியர் முனைவர் அருணை பாலறாவாயன் அவர்கள், நான் பேசிய மேற்படியான சுவாமிகளின் உபதேச பிரகடனம் போல் இருந்தக் கருத்தைப் பற்றி என்னிடம் கீழ்க்கண்டவாறு கூறிச் சில புத்தாக்க விளக்கங்களைத் தந்ததைத் தான் வாசகர்களோடும் பகிர்ந்து மகிழ்வதில் இறும்பூதெய்துகின்றேன்.

பேராசிரியர் கூறியதாவது, சைவத்தில் பதியினைச் சென்றணுகாப் பசு, ஆனால் பதியணுகில் பசு நில்லாது என்பது கருத்து, நீங்கள் சொன்னவாறு பீடம் ஏறிய ஆண்டு சுவாமிகள் உபதேசமாக உரைத்ததில் மக்களைச் சந்நிதானம் மேடையை நோக்கி இரண்டடி ஏறிவரச் சொன்னதுதான் பசுவானது பதியினைச் சென்றணுகுவதற்கான சங்கமத்தைத் தொட்டுத் துலக்கிய புதுக்கருத்து என்று என்னிடத்தில் சிலாகித்து மகிழ்ந்தார்கள்.

இதை அப்படியே சுவடுமாறாமல் முதல்வர் முனைவர் ச. திருநாவுக்கரசரிடம் கூறினேன். அவரும் மகிழ்ந்து பதிவு செய்யக் கூறியபடிச் செய்தேன், நன்றி.

# நால்வர் நான்மணி மாலையில் பக்தியும் முக்தியும் - 7

**முனைவர் இராச. திருமாவளவன்**
முதுநிலை விரிவுரையாளர் (பணிநிறைவு),
கல்வித்துறை, புதுச்சேரி, 9952003828

**ஆ] சுந்தரரின் புற வாழ்க்கைக்கு உதவிய இறைவனின் நட்புணர்வு**

*சுந்தரரின் அகவாழ்க்கையாம் இல்லறத்திற்குத் துணையாய் இருந்த பரம்பொருளான சிவபெருமான் அவரது புற வாழ்க்கைக்கும் உற்ற தோழனாய் இருந்து செய்த உதவிகள் மிகப் பல. நட்பின் சிறப்பே தோழனை, அவனது துன்பங்களிலிருந்து காப்பதுதான். இதனை,*

***'உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே***
***இடுக்கண் களைவதாம் நட்பு'*** *(குறள்.788)*

*என்கிறார் வள்ளுவர். இதற்குத் தக்க சான்றாக விளங்குவனவே சுந்தரருக்கு இறைவன் அருளிய உதவிகள் ஆகும். இவ்வாறு இறைவன் செய்த உதவிகளைச் சுந்தரர் எவ்வாறு வேண்டிப் பெற்றார் என்பதை அவரது தேவாரப் பாடல்களின் பதிக வரிசையில் காணலாம்.*

*சுந்தரர் இறைவனிடம் பெற்ற புறம் சார்ந்த உதவிகளை,*

1. *சுந்தரர் இறைவனிடம் தவநெறி வேண்டுதல்*
2. *சுந்தரர் இறைவனை இகழ்தலும் புகழ்தலும்*
3. *சுந்தரருக்கு இறைவன் உணவளித்தல்*
4. *சுந்தரர் தன் பிணி போக இறைவனை வேண்டுதல்*
5. *சுந்தரர் இறைவனிடம் வேண்டிப் பொன் பெறுதல்*
6. *சுந்தரர் இறைவனின் திருவடி சூட்டப்பெறுதலும் இறைவனை இகழ்ந்ததற்கு வருந்துதலும்*
7. *சுந்தரரின் கண்ணொளி மறையக் காரணமும் இறைவன் அருளும்*
8. *சுந்தரர் இறைவனை வேண்டி ஊன்றுகோல் பெறுதல்*
9. *அடியார்களைச் சுட்டிக்காட்டித் தனக்கு உதவச் சுந்தரர் இறைவனை வேண்டுதல்*
10. *சுந்தரர் இறைவன் அருளால் இடக்கண் பெறுதல்*
11. *சுந்தரர் இறைவன் அருளால் வலக்கண் பெறுதல்*

என்னும் பதினொரு தலைப்புக்களில் காண்பது பொருத்தமாகும்.

### 1. சுந்தரர் இறைவனிடம் தவநெறி வேண்டுதல்

தவம் என்பதற்கு 'மந(ன)த்திற்கும் இந்திரியத்திற்கும் ஏகாக்கிரகம் வருவது' என்னும் பொருள் கூறும் தமிழ்ச் சொல்லகராதி, 'மந(ன)ம் பொறிகட்கு ஒருமையே தவமாம்' (வேதா.சூ.169) என்னும் வேதாந்த சூடமணி கருத்தையும் சான்று காட்டுகிறது. அதாவது 'மனமும் பொறிகளும் ஒருநிலைப்பட்டுப் பிற எண்ணங்களோ பாதிப்புக்களோ ஏதும் இல்லாமல் இறைவன் நினைப்பிலேயே நிலைத்தல்' என்பதே தவம் ஆகும். இந்தத் தவநிலையை அடைவதற்கும் இறைவன் அருள் வேண்டும் என உணர்ந்தவர்களே சைவ சமயக் குரவர் நால்வரும். சுந்தரர் திருத்துறையூர் பதிகத்தில் இறைவனிடம் 'தவ நெறியை' இறைஞ்சுகிறார். இந்தப் பதிகத்தில் உள்ள முதல் 10 பாடல்களும் அவரது வேண்டுதலைக் குறிப்பிடுகின்றன.

***'மலையார் அருவித் திரள்மா மணிஉந்திக்***
***குலையாரக் கொணர்ந்துஎற்றி ஓர்பெண்ணை வடபால்***
***கலையார் அல்குல்,கன் னியர்ஆடும் துறையூர்த்***
***தலைவா, உனைவேண்டிக் கொள்வேன் தவநெறியே'*** *(7.13.1)*

எனத் தொடங்கும் இப்பதிகப் பாடல்களில் முதல் மூன்று அடிகளில் இறைவன் புகழைப் பாடும் சுந்தரர், இறுதி அடியில் 'உனைவேண்டிக் கொள்வேன் தவநெறியே' என முடிக்கிறார். 11ஆம் எண் பாடலில் இந்த வேண்டுதலைப் புரிந்து கொள்ளும் பக்தர்களும் 'மெய்யே பெறுவார்கள் தவநெறி தானே' (7.13.11:4) என்னும் தொடரால் சுந்தரர் உறுதிசெய்கிறார். இவருக்கு முன்பாகவே ஞானசம்பந்தரும்,

***'நினையே அடியார் தொழ நெடுமதில் புகல்இந்நகர்,***
***தனையேஇடம் மேவினை தவநெறி அருள்எமக்கே'.*** *(3.3.3:4)*

எனச் சிவனிடம் வேண்டுகிறார். திருநாவுக்கரசர் தவநெறிச் சிந்தனையோ வேறுவிதமானது.

***'நமச்சி வாய,என் பார்உள ரேல்அவர்***
***தம்அச்சம் நீங்கத் தவநெறி சார்தலால்***
***அமைத்துக் கொண்டதோர் வாழ்க்கையன் ஆகிலும்***
***இமைத்து நிற்பது சால அரியதே'*** *(5.97.22)*

என்னும் இந்தப் பாட்டில் அப்பர், 'நமச்சிவாய என்னும் இறைவன் திருநாமத்தை ஓயாமல் உச்சரிப்பவர் ஆனாலும், அவர் தம் அச்சத்தைப் போக்கிக் கொள்ளத் தவநெறியில் நின்றாலும், இந்தப் பிறவியை முறையாகக் கடப்பது மிகவும் அரிது' எனத் தவநெறி மட்டும் போதாது என்றார். மாணிக்கவாசகர் தவநெறியில் நிற்கவும் இறைவன் அருள் வேண்டும் என,

PRGI No.TNTAM/25/A4155

*'தவமே புரிந்திலன் தண்மலர் இட்டுமுட்டாது இறைஞ்சேன்*
*அவமே பிறந்த அருவினையேன், உனக்கு அன்பர் உள்ளாம்*
*சிவமே பெறும்திரு எய்திற்றிலேன், நின் திருவடிக்கு ஆம்*
*பவமே அருளு கண்டாய் அடியேற்கு எம்பரம்பரனே' (திருச்சதகம் 5)*

என்றவர், இந்தப் பாடலின் முதல் அடியில் 'தவமே புரிந்திலன்' என்றார். இவரே முடிவில் 'நின் திருவடிக்கு ஆம், பவமே (உண்மை) அருளு கண்டாய் அடியேற்கு எம் பரம்பரனே' என்று கூறியதால் தவத்திற்கும் இறைவன் அருள் வேண்டும் என்பதை அறியலாம். இவர்களில் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் இருவர் வாக்கையும் நன்கு அறிந்த சுந்தரர் முறையான தவநெறி தமக்கு வேண்டும் என இறைவனிடம் இறைஞ்சுவதாக அமைந்ததே திருத்துறையூர் பதிகம்.

### 2. சுந்தரர் இறைவனை இகழ்தலும் புகழ்தலும்

உதவி செய்தால் பாராட்டுவதும் செய்யவில்லை என்றால் பழிப்பதும் நண்பர்களுக்கு இடையே உள்ள நெருக்கத்தால் நிகழ்வது. சுந்தரர் தம் தோழராகக் கருதி உதவி கேட்கும்போது அதை செய்யவில்லை என்றால் இறைவனே தன் நண்பனாக இருந்தாலும் தூற்றுவதும் உதவி கிடைத்தால் பாராட்டுவதும் இயல்பான ஒன்று என்பதற்குச் சான்றாக விளங்குவதே திருப்பாச்சிலாச்சிராமப் பதிகம். இதில் உள்ள பாடல்கள் பதினொன்றும் இறைவன் சிறப்புக்களைக் கூறி இறுதியில் '**இவர் அலாது இல்லையோ பிரானார்**' என முடிகின்றன. இவ்வாறு கூறுவதை 'வஞ்சப் புகழ்ச்சி அணி' என்கிறது இலக்கணம். இந்த அணி, இரண்டு பிரிவுகளை உடையது. ஒன்று புகழ்வதுபோல் பழிப்பது. மற்றொன்று பழிப்பதுபோல் புகழ்வது. இந்தப் பதிகத்தில் உள்ள பாடல்களில் எல்லாம் இறைவனைப் பழிப்பதுபோல் சுந்தரர் புகழ்கிறாரா, புகழ்வதுபோல் பழிக்கிறாரா என்பதைப் படிப்போர் எளிதில் புரிந்து கொள்வது அறிது. தருமை ஆதீனப் பதிப்பில் '**சுந்தரர் வரலாறு**' என்ற தலைப்பில் வி.சா.குமாரசாமிதேசிகர், இந்தப் பதிகப் பாடல்கள் எல்லாம் இறைவனை இகழ்வன என்பதை,

> 'இறைவன் பொன்னைத் தந்தருளாமையால் இறைவன் பால் மனப்புழுக்கம் கொண்டு 'வைத்தனன் தனக்கே' என்று தொடங்கிப் பதிகம்பாடி 'இவரலாதில்லையோ பிரானார்' என இகழ்ந்து கூறிப் பின் அதனையே பொறுத்தருளவேண்டு மென்று திருக்கடைக் காப்பும் அருளிச்செய்தார்.'

என அவர் கூறியதால் அறியலாம். இந்தப் பதிப்பு, அருணை வடிவேலு முதலியாரின் 'பொழிப்புரை - விளக்கக் குறிப்புரையை' உடையது, திருப்பாச்சிலாச்சிராமப் பதிகத்தில் உள்ள பாடல்கள் எல்லாம் இறைவனைப் புகழ்வதாகவே அமையும் என இவர் கூறுகிறார். இதனை, 'இவராவ தில்லையோ

பிரானார்' என்பதற்கு 'எம்மைப் புரக்கும் தலைவர் இவரன்றி வேறொருவர் இல்லை' என்னும் முதற் பாடலின் அவரது பொழிப்புரை தெளிவுபடுத்துகிறது. சுந்தரரின் இந்தத் தொடர், இப்பதிக 11 பாடல்களின் இறுதி அடியிலும் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

**'வைத்தனன் தனக்கே தலையும்என் நாவும் நெஞ்சமும் வஞ்சம்ஒன்று இன்றி**
**உய்த்தனன் தனக்கே திருவடிக்கு அடிமை உரைத்தக்கால் உவமனே ஒக்கும்**
**பைத்தபாம்பு ஆர்த்துஓர் கோவணத் தோடு பாச்சிலாச் சிராமத்துஎம் பரமர்**
**பித்தரே ஒத்தோர் நச்சுஇலர் ஆகில் இவர்அலாது இல்லையோ பிரானார்.(7.14.1)**

என்ற இந்தப் பாடலில் சுந்தரர் இறைவனைப் புகழ்கிறாரா? இகழ்கிறாரா? எனக் காணலாம்.

'எனது தலை, நாக்கு, மனம் மூன்றையும் எந்த வஞ்சனையும் இல்லாமல் இறைவா உனக்கே உரிமை ஆக்கினேன். திருவடிக்குச் செய்யும் தொண்டையும் உனக்கே செய்தேன்; இவைகளை நானே சொல்வதால் பொய் என்றாகும். படம் விரித்த பாம்பினை (கழுத்தில்) அணிந்து, ஒரு கோவணத்தோடு திருப்பாச்சிலாச்சிராமம் என்னும் இந்தத் திருத்தலத்தில் இருக்கும் பரமனே, நீ பித்தனைப் போலச் சிறிதும் உதவவில்லை. எனக்கு உதவ இவரைத் தவிர வேறொரு தெய்வம் இல்லையா?

என்பது இந்தப் பாடலின் கருத்து. இதில் முதலில் 'சிவபெருமான்பால் சுந்தரர் தாம் கொண்ட பக்தியைக் கூறிப் பின்னர் இறைவன் தோற்றத்தைப் பாம்போடும், கோவணத்தோடும் பொருத்திக் காட்டி, அடுத்துப் பித்தனுக்கு ஒப்பானவர் இறைவன்' எனக் கூறுகிறார். இவற்றால் இறைவன் உதவவில்லை எனச் சுந்தரர் பழிக்கிறாரா? 'தனக்கு இறைவர் இவர் ஒருவரே' எனப் புகழ்கிறாரா? என எப்படி முடிவு செய்வது என்பதை இனி அறியலாம்.

சுந்தரரை மூவர் முதலிகளில் ஒருவராகவும் சமயக் குரவர் நால்வரில் ஒருவராகவும் சைவ சமயத்தார் கருதுகின்றனர். இவர்கள் சைவ சமய முழுமுதல் பொருளான சிவபெருமானையே சுந்தரர் இகழ்கிறார் என்பதை ஒருபோதும் ஏற்கமாட்டார். இவர்கள் சுந்தரர் இறைவனைப் புகழ்வதாகவே கொள்வார்கள்.

சைவ சமயக் குரவர் நால்வரின் வாழ்க்கையையும் ஒப்புநோக்கி அவர்களின் தேவார, திருவாசகப் பாடல்களின் கருத்துக்களின் அடிப்படையில் அவர்களைச் சற்புத்திர மார்க்கம், தாச மார்க்கம், சக மார்க்கம், சன்மார்க்கம் என்னும் நான்கு மார்க்கங்களில் ஒவ்வொருவரையும் ஒரு மார்க்கத்திற்கு உரியவராகப் பிரித்துப் பார்க்கின்றவர்களும் உள்ளனர். அந்த வகையில் சுந்தரர் சக மார்க்கம் என்னும் தோழமை நெறிக்கு உரியவராகிறார். தன் நண்பன் தனக்குத் தேவையான உதவி செய்யாமல் புறக்கணிப்பதை, ஒதுக்குவதை யாராலும் பொறுத்துக் கொள்ள இயலாது. 'இவனெல்லாம் எனக்கு நண்பனா? எனக்கு

உதவி செய்ய வேறு ஆளே இல்லையா?' என்று திட்டுவது, கோபப்படுவது எல்லோர் வாழ்க்கையிலும் நடப்பதுதான். இதனாலேயே தம் உற்ற நண்பரான இறைவனை, அவர் தேவைப்படும் உதவி செய்யாத நிலையில், இகழ்ந்து பேசுவது இயல்பான ஒன்று. சுந்தரரின் இந்த மனநிலையை ஏற்றுக் கொண்டால் திருப்பாச்சிலாச்சிராமப் பதிகப் பாடல்கள் எல்லாம் பழிப்பதாகவே அமையும். புகழ்தல், பழித்தல் இரண்டில் இந்தப் பதிகத்திற்கு ஏற்றது எது என்பது வாசகரின் மனநிலைக்கு உரியது.

### 3. சுந்தரருக்கு இறைவன் உணவளித்தல்

திருத்தலங்கள் பலவற்றிற்கும் சென்று வழிபடும் சுந்தரருக்கு உண்ண உணவின்றி தவிக்கும் நிலையும் ஏற்பட்டது. அப்போது இறைவனே ஒரு மறையவர் வேடத்தில் உண்ண உணவும் நீரும் அளித்தார். இதனை முதலில் உணராத சுந்தரர் பின்னரே அறிந்தார். இறைவன் தானே வந்து உணவளித்ததைப் பாடியதாக அமைந்தது திருக்குருகாவூர்ப் பதிகம். இதன் முதல் பாடல் 'இத்தனையா மாற்றை' எனத் தொடங்கும். இந்தத் தொடரில் உள்ள 'இத்தனை' என்ற சொல்லுக்குக் குறிப்புரையில் அருணைவடிவேலு முதலியார் 'இத்தனை என்றது பொதிசோறும் தண்ணீர்ப் பந்தரும் கொண்டு மறையவன் போல வீற்றிருந்தமை முதலியன' என்று கூறுவதால் இதனை அறியலாம். சுந்தரரே இதைக் கூறுவதை,

> *'பாடுவார் பசிதீர்ப்பாய் பரவுவார் பிணிகளைவாய்*
> ***ஓடுநன் கலனாக உண்பலிக் குழல்வானே***
> ***காடு,நல் இடமாகக் கடுஇருள் நடமாடும்***
> ***வேடனே குருகாவூர் வெள்ளடை நீயன்றே'*** *(7.29.3)*

என்ற இப்பதிக மூன்றாம் பாடலால் அறியலாம். சுந்தரர், 'இறைவன் தன் பசியைப் போக்குவது மட்டுமன்றி துதித்துப் போற்றும் பக்தர்களுக்கும் தொழுகின்ற அனைவருக்கும் பசியைப் போக்குவதோடு, அவர்களுக்கு வரும் நோய்களையும் போக்கிக் காப்பாற்றுகிறார்' என்பதைப் 'பாடுவார் பசிதீர்ப்பாய் பரவுவார் பிணிகளைவாய்' என்று முதலடியில் கூறினார். இரண்டாவது அடி கவனிக்கத் தக்கது. பக்தர்கள் பசி போக்கும் இறைவன் 'தனது பசியைப் போக்கத் திருவோடு ஏந்தித் திரிகிறான்' என்னும் பொருளில் 'ஓடுநன் கலனாக உண்பலிக் குழல்வானே' என்று உள்ளதைக் காணலாம். இறைவன் அன்பர்களுக்காகத் திருவோடு ஏந்திய நிலை சுந்தரரை மிகவும் வருத்தியதைப் பிற பதிகங்களில் உள்ள பாடல்களும் காட்டுகின்றன.

'முதுவாய் ஓரி' எனத் தொடங்கும் திருக்கச்சூர் ஆலக்கோயில் பதிகத்தின் முதல் பாடல் இதற்கு ஓர் சான்றாகும். இந்தப் பாட்டில்

*'கதுவாய்த் தலையில் பலிநீ கொள்ளக்*
*கண்டால் அடியார் கவலாரே'* *(7.41.1:3)*

என்ற அடிகளில் 'நீ, உடைந்த வாய் உள்ள மண்டை ஓட்டில் பிச்சை எடுப்பதைக் கண்டு அடியார்கள் வருந்துகிறார்களே' என்று சுந்தரர் கூறியதால் அறியலாம்.

**4. சுந்தரர் தன் பிணி போக இறைவனை வேண்டுதல்**

நட்பிற்கு இலக்கணம் வகுக்கும் திருவள்ளுவர்,

*'மறவற்க மாசற்றார் கேண்மை துறவற்க*
*துன்பத்துள் துப்பாயார் நட்பு'* *(குறள் 106)*

என்ற குறளில் 'ஒருவரும் மறக்கக் கூடாதது, துன்பத்தை நீக்கத் துணையாக உள்ள நட்பையே' என்று கூறுகிறார். இதற்குச் சுந்தரரின் வாழ்க்கை தக்க சான்றாகும். சுந்தரர், திருக்குருகாவூர் பதிகத்தில் தன்னை இறைவன், நோயிலிருந்தும் பிற துன்பங்களிலிருந்தும் காப்பாற்றியதைக் கூறுகிறார்.

*'ஆவியைப் போகாமே தவிர்த்தென்னை ஆட்கொண்டாய்'* *(7.29.2:1)*

எனத் தொடங்கும் இந்தப் பாடலில் இறைவன் தன்னை உயிர் போகாமல் காத்தான் என்றும்,

*'பாடுவார் பசிதீர்ப்பாய் பரவுவார் பிணிகளைவாய்"* *(7.29.3:1)*

எனத் தொடங்கும் இந்தப் பாடலில் இறைவன் தொண்டர்களின் பசியையும் பிணிகளையும் நீக்குவான் என்றும்,

*'வெப்பொடு பிணியெல்லாந் தவிர்த்தென்னை ஆட்கொண்டாய்'* *(7.29.4)*

என்னும் நான்காம் பாடலில் தனது, வெப்புநோய் முதலியவற்றை எல்லாம் இறைவன் நீக்கியதையும்,

*'வரும்பழி வாராமே தவிர்த்தென்னை ஆட்கொண்டாய்'* *(7.29.5:1)*

எனத் தொடங்கும் இந்தப் பாடலில் இறைவன் எந்தப் பழியும் வராமல் தன்னைக் காத்ததை,

*'மண்ணிடை அடியார்கள் மனத்திடர் வாராமே'* *(7.29.6:3)*

எனத் தொடங்கும் இந்தப் பாடலில் 'மனக் கவலைகளையும் இறைவன் போக்குவான்' என்பதையும் கூறுகிறார். இந்த ஒரு பதிகத்தில் தனது நோய்களை மட்டுமன்றி தொண்டர்கள் நோய்களையும் காக்கும் இறைவனின் அருளுணர்வைப் பாடியுள்ளார்.

PRGI No.TNTAM/25/A4155

சுந்தரர், இடக்கண் பார்வையை, இறைவனை வேண்டி மீட்டாலும் உடல் நோய்களால் பாதிக்கப்படும் நிலை தொடர்ந்தது. தன்னை நோய்த் தாக்குதலில் இருந்து காப்பாற்ற சுந்தரர் இறைவனை வேண்டியதைத் திருத்துருத்தி - திருவேள்விக்குடி தலம் பாடிய 74 ஆம் பதிகம் காட்டுகிறது. இந்தப் பதிகத்தின் முதல் பாடல்,

***'மின்னுமா மேகங்கள் பொழிந்துஇழிந்து அருவி***
***வெடிபடக் கரையொடும் திரைகொணர்ந்து எற்றும்***
***அன்னமாம் காவிரி அகல்கரை உறைவார்***
***அடிஇணை தொழுதுஎழும் அன்பராம் அடியார்***
***சொன்னவாறு அறிவார் துருத்தியார் வேள்விக்***
***குடியுளார் அடிகளைச் செடியனேன் நாயேன்***
***என்னைநான் மறக்குமாறு எம்பெரு மானை***
***என்உடம்பு படும்பிணி இடர்கெடுத் தானை'*** *(7.74.1)*

என்பதாகும். இந்தப் பாடலின் கருத்தை இனிக் காணலாம்.

*'மின்னலை உண்டாக்கும் மேகங்கள் மழையைப் பொழிந்தபின் அருவிகளில் நீர் பெருக்கெடுத்து பெரும் ஆரவாரத்துடன் பாய்ந்து அலைகளை வீசிக் கரையிலே மோதும். இத்தகைய அன்னப் பறவைகள் வாழும் காவிரி ஆற்றின் அகன்ற கரையில் எழுந்தருளி இருப்பவரும், திருத்துருத்தியிலும், திருவேள்விக்குடியிலும், வீற்றிருப்பவர் எம்பெருமான். அவரது இரண்டு திருவடிகளையும் தொழுது எழுகின்ற அன்புடைய அடியார் வேண்டிய வரங்களை எல்லாம் அருளுகின்றவர். என் உடம்பை வருத்திய பிணியைப் போக்கிய எம் பெருமானை, குற்றமுடையவனும், நாய் போன்றவனும் ஆகிய நான் எவ்வாறு மறப்பேன்!'*

என்று இப்பாடலிலும் இன்னும் பல பாடல்களிலும் இறைவன் தன் நோய்களை நீக்கியதைப் பாடிய சுந்தரர், இப்பதிகத்தில் தன் பழவினைகளையும் இறைவன் நீக்கினான் என்கிறார்,

***'பழவினை உள்ளன பற்றறுத் தானை'*** *(7.74.2:4)*

***'அருவினை உள்ளன ஆசறுத் தானை'*** *(7.74.4:4)*

என்னும் பாடல்களின் அடிகளில் இவற்றைக் காணலாம்.

*(தொடரும்...)*

# திருவைந்தெழுத்து மந்திரம்

**முனைவர் க.இளமதி சானகிராமன்,**
புலமுதன்மையர்,(ஓய்வு)
சுப்பிரமணிய பாரதியார் தமிழ்மொழி மற்றும்
இலக்கியப்புலம்,புதுவைப் பல்கலைக்கழகம், புதுச்சேரி.
95003 53867

*தெய்வத்தன்மையுடைய மந்திரங்கள் பல இருப்பினும் ஐந்தெழுத்தால் ஆகிய பஞ்சாட்சரம் என்று சொல்லக்கூடிய 'நமசிவாய' எனும் மந்திரமே மிகவும் பழமை வாய்ந்ததும் சைவப் பெருமக்களால் புகழ்ந்து போற்றக் கூடியதுமாக உள்ளது. அம்மந்திரத்தின் பெருமை, நிலைப்பாடு, உட்பொருள் முதலான பலவற்றையும் சைவ நாயன்மார்கள் வழியும், சித்தர் சிவவாக்கியர் வழியும் இக்கட்டுரை விளக்கி உரைக்கின்றது.*

**திருவைந்தெழுத்தின் பெருமை**

நாயன்மார்களுள் முதலாமவராக வைத்து எண்ணப்பெறும் திருஞானசம்பந்தப் பெருமான்,

***காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி***
***ஓதுவார்தமை நன்னெறிக் குய்ப்பது***
***வேதம் நான்கினும் மெய்ப்பொரு ளாவது***
***நாதன் நாமம் நமச்சி வாயவே"***

என்று தொடங்கி நமச்சிவாயத் திருப்பதிகத்தின் மூலம் நமச்சிவாய மந்திரமே நன்னெறிக்குய்ப்பது; வேதம் நான்கினும் மெய்ப்பொருள் ஆவது; வானவராக்குவது; நமன் தூதுவரையும் நடுங்கச் செய்வது; தீங்குகளை நீக்குவது; வல்வினைகளை நீக்கிச் செல்வத்தை மிகுவிப்பது; நரகத்தில் விழாமல் காப்பது; இலங்கை மன்னனின் ஆணவத்தை அடக்கி வாழ்வித்தது; அயனும் மாலும் ஓதும் தன்மையது என அதன் பெருமைகளை உரைப்பர்.

***சொற்றுணை வேதியன் சோதி வானவன்***
***பொற்றுணைத் திருந்தடி பொருந்தக் கைதொழக்***
***கற்றுணைப் பூட்டியோர் கடலில் பாய்ச்சினும்***
***நற்றுணை யாவது நமச்சி வாயவே***

என்று பாடும் திருப்பதிகத்தின் மூலம் நமச்சிவாய மந்திரமானது, நற்றுணை ஆவது; நாவினுக்கு அருங்கலம்; விண் முட்டும் அடுக்கிய தீயழல் உண்ண வந்தாலும் ஒன்றுமில்லாது செய்யும்; பண்ணிய பாவங்களை அறுக்கும்; நமது இடுக்கண்களையும் நடுக்கத்தையும் போக்கும்; நமக்கு அருங்கலமாவது; குலத்திற்கு நலத்தைச் சேர்ப்பது; நாம் நாட நம்மை நாடுவது; நமக்குரிய நல்விளக்காவது; நன்னெறி ஆவது என்று குறிப்பிடுவர்.

சுந்தரரோ, கொங்கு நாட்டுத் தலங்களுள் ஒன்றான கொடுமுடியில் பாடல் பாடிய 'நமச்சிவாய'ப் பதிகத்தின் மூலம், நாம் மறந்தாலும் நம்முடைய நாக்கு 'நமசிவாய' என்ற ஐந்தெழுத்தை மறக்காது உச்சரித்துக் கொண்டே இருக்க வேண்டும் என்றும் இவ்வாறு கூறுபவர்கட்குத் துன்பங்கள் இல்லை என்றும் கூறுவர்.

**மணிவாசகர்,**

*போற்றி ஓம் நமச்சிவாய புயங்கனே மயங்கு கின்றேன்*
*போற்றி ஓம் நமச்சிவாய புகலிடம் பிறிதொன் றில்லை*
*போற்றி ஓம் நமச்சிவாய புறமெனைப் போக்கல் கண்டாய்*
*போற்றி ஓம் நமச்சிவாய சயசய போற்றி போற்றி*

என்று திருச்சதகத்தில் மொழிவார். இவ்வாறாக இந்நால்வரும் நமச்சிவாய மந்திரத்தின் பெருமைகளைத் தங்கள் அனுபவ வழியில் நின்றருளுவர்.

'அஞ்செழுத்துமே அம்மையப்பர் தமைக்காட்டும்' என்று திருவுந்தியாரும் கூறும். 'நமச்சிவாய' என்ற இந்த மந்திரமே அனைத்துமாக நின்று நன்னெறி காட்டுவதை,

*நமச்சி வாயவே ஞானமும் கல்வியும்*
*நமச்சி வாயவே நானறி விச்சையும்*
*நமச்சி வாயவே நாநவின் றேத்துமே*
*நமச்சி வாயவே நன்னெறி காட்டுமே*

எனும் பாடலின்வழி உணரலாம்.

**மந்திரத்தின் அமைவு**

'நமச்சிவாய' எனும் தொடர் சிவனுக்கு வணக்கம் எனும் பொருளைத் தரும். சிவலிங்க உருவிலே விளங்கும் இறைவனை 'நமச்சிவாய' எனும் ஒலி வடிவிலும் வணங்குவர்.

***சிவனருள் ஆவிதிரோத மலம் ஐந்தும்***
***அவன் எழுத்தஞ்சின் அடைவாம் –இவனின்று***
***நம்முதலா ஓதில் அருள் நாடாது நாடுமருள்***
***சிம்முதலா வோதுநீ சென்று***

என்னும் உண்மை விளக்கம் நான்காம் பாடல், இறைவன் கூத்து இயற்றும் பொழுது இந்த ஐந்து எழுத்துகளும் சிவனின் உறுப்புகளிலே நின்று ஒலி செய்தலைக் குறிக்கின்றது. சிவன், அருள், ஆவி, திரோதம், மலம் என்னும் இவையே 'சிவாயநம' என்னும் ஐந்தெழுத்தைக் குறிப்பதாகத் திருமூலர் உரைப்பர் (ப. ஞானம், சமயச் சிந்தனைகள், ப. 95).

**ஐந்தெழுத்தும் பஞ்சபூதங்களும்**

சித்தருள் ஒருவராகிய சிவவாக்கியர், இவ்வைந்து எழுத்துக்களும் ஐந்து பஞ்சபூதங்களைக் குறிப்பதாகக் கூறுவர்.

***பூவிலாய ஐந்துமாய்ப் புனலில் நின்ற நான்குமாய்த்***
***தீயிலாய மூன்றுமாய்ச் சிறந்தகாலி ரண்டுமாய்***
***வேயிலாய தொன்றுமாய் வேறுவேறு தன்மையாய்***
***நீயிலாமல் நின்றநேர்மை யாவர்காண வல்லரே"***

*எனும் பாடலில், பூமியில் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகிய ஐவகை நிலங்களாகவும்; நீரில், ஆற்றுநீர், ஊற்றுநீர், கடல்நீர், மழைநீர் என்ற நான்கு வகையாகவும்; தீயில் மூலாக்கினி, ஜடராக்கினி, அக்கினி என்ற மூன்றாகவும்; காற்றில் உட்சுவாசம், வெளிசுவாசம் எனும் இருவகையாகவும்; ஆகாயத்தில் ஒன்றாயும் இவ்வாறு வேறுவேறு தன்மைகளை உடையதுவாயும் ஒன்றாகிய தன்மையை உடையதுவாயும் நிற்கின்ற உன்னை வேறு யார் அறியவல்லவர்? என்று கேட்பவர், இவ்வைந்து தன்மையிலும் இணைந்து இருக்கும் அவனைச் சிந்தை செய்திருப்பவர்களே சித்தர்கள் என்னும் உண்மையைக் கீழ்மேல் - மேல்கீழ் எனும் தத்துவத்தின் அடிப்படையில் பூமியில் இருந்து வானுக்குச் சென்றவர் அடுத்த பாடலில் வானிலிருந்து பூமிக்கு வருகின்றார்.*

***அந்தரத்தில் ஒன்றுமாய் அசைவுகாலி ரண்டுமாய்***
***செந்தழல்கள் மூன்றுமாய் சிறந்த அப்பு நான்குமாய்***
***ஐந்துபாரி லைந்துமாய் அமர்ந்திருந்த நாதனைச்***
***சிந்தைவைத்து இருந்ததை யாவர்காண வல்லிரே"***

*எனும் இப்பாடலில் அவ்வுண்மை தெளிவாகும்.*

**அண்டமும் பிண்டமும்**

*புறத்திலே பஞ்சபூதங்களாகக் கண்ட இறைவனை, அகத்திலே காணும் பெருநிலையைப் பெறவேண்டும் என்பதால் சிந்தை வைத்துத் தெளிந்தார்க்கு, சிவன் சீவனாய் உடலுக்குள்ளே நின்று ஒளிருவான் என்பதையும் புலப்படுத்துகின்றார். இறைவன் உடலிலே இலங்குவதை, அண்டத்தில் உள்ளது பிண்டத்தில் என்று குறிப்பதாலும் உணரலாம்.*

***நவ்விரண்டு காலதாய் நவின்றம வயிறதாய்***
***சிவ்விரண்டு தோளதாய் செறிந்தவ வாயதாய்***
***யவ்விரண்டு கண்ணதாய் அமர்ந்து நின்ற நேர்மையில்***
***செவ்வையொத்து நின்றதே சிவாயமைந் தெழுத்துமே"***

*என்பதன்வழி*

| *எழுத்து* | *உடலின் உறுப்பு* | *பூதத்தன்மை* |
|---|---|---|
| *ந* | *இரண்டு கால்கள்* | *பூமி* |
| *ம* | *வயிறு* | *நீர்* |
| *சி* | *தோள்* | *நெருப்பு* |
| *வ* | *வாய்* | *காற்று* |
| *ய* | *கண்கள்* | *ஆகாயத்தில்* |

PRGI No.TNTAM/25/A4155

என உடலில் உள்ள ஒவ்வோர் உறுப்பையும் ஒட்டிய இப்பகுதிகள், ஒவ்வொரு பூதத்தன்மையையும் தம்முள் அடக்கியவை என்பதை எடுத்துக்காட்டி இவ்வைந்து பூதங்களாக இருந்தும் இவற்றினின்றும் வேறாக இருந்தும் இவற்றை ஆட்டிப் படைக்கும் ஒருவனாகும் அவனை உணர்பவர் இம்மந்திரம் 'யோக மூலம்' என்பதையும் அறிவர். இதனை, நகாரம் முதல் யகாரம் நிற்கும் அவ்வளவும், யோகத்தின் மூலமாச்சு என்பதும் தெளிவிக்கும்.

**ஓம் எனும் மந்திரம்**

இம்மந்திரமே அ, உ, ம் எனும் மூன்றுமாக நின்றது என்பதை,

அ - எனும் எழுத்தினால் அகண்டம் ஏழும் ஆனது

உ - எனும் எழுத்தினால் உருத்தரித்து நின்றது

ம - எனும் எழுத்தினால் உலக மக்கள் மயக்கம் கொண்டனர்

என்பதன்வழி தெரிவிப்பவர், இம்மூன்றின் தன்மையை அறிந்தவர்க்குப் பிறவிகள் இல்லை, செம்மையான தவத்தைச் செய்வதன் மூலம் 'ஓம்' எனும் பிரணவ மந்திரத்தின் பொருளை அறியலாம். இந்த மூன்றெழுத்தின் பெருமையை உணர்பவர்களே ஐந்தெழுத்தின் பெருமையை அறியவும் உணரவும் முடியும் என்பதை உறுதியாக உரைப்பர்.

**அகத்தில் காணல்**

இறையனுபவத்தைத் தியானத்தால் அறிவது கடினம் என்று சோம்பர்களே கூறுவர். இறைவனைத் தேடிப் பல இடங்களிலும் அலைகின்றவர் ஊமைகள். அது எங்கும் பரந்து நிறைந்திருப்பதாகும். உங்களுக்குள்ளேயே அந்த மெய்ப்பொருளை அறியுங்கள் என்பதை,

"ஊரு நாடு காடு தேடி உழன்று வாடும் ஊமைகாள்
நேரதாக உம்முளே அறிந்துணர்ந்து கொள்ளுமே"

என்பதன்வழி உணர்த்துவர். அகத்தில் இறைவனைக் காணுபவர்கள் அடையும் பயன்களைப் "பிரபஞ்சம் முழுவதும் பரந்துநின்ற வெட்ட வெளியில் இயங்கும் பிரம்மத்தை உங்களுக்குள்ளேயே நினைத்துப் பார்த்தால் மனத்தில் அழுக்குகள் சேராத நிர்மலமாக ஆவீர்கள். எங்கும் எதிலும் இடைவிடாமல் ஊடுருவி நிற்கின்ற அதனைத் தனக்குள் கருதுபவர்கள் நல்ல உயர்வைப் பெறுவர்" (பா.88) எனும் கருத்துகளின் வழியாகப் புலப்படுத்துவர்.

**முடிவுரை**

இக்கட்டுரையின் வாயிலாக, சமயக் குரவர் நால்வரும் இறைவனின் திருநாமமாகிய இவ்வைந்தெழுத்துகளையும் உச்சரிப்பதால் இத்தகைய நலன்களைப் பெறலாம் என்று உரைக்க, அவர்களினும் சிறிது மேலாகச் சென்று, இவ்வைந்து எழுத்துக்களும் பஞ்சபூதங்களின் குறியீடுகள், அவை அண்டத்தில் மட்டுமல்லாது பிண்டத்திலும் உறைகின்றன. இறைவனைப் புறத்தில் மட்டும் தேடாது அகத்தில் தேடுங்கள். இவை 'யோகமூலம்' என்ற அளவில் இறை உள்ளுக்குள் சோதியாக ஒளிர்வதைக் காணலாம் என்பன போன்ற பல கருத்துகளை உரைப்பதைத் தெளியலாம்.

# பூவை.கல்யாணசுந்தர முதலியார் அருளிய அகத்தியப் பஞ்சகம் (அரிய, பழைய நூல்)

**முனைவர் அ. சிவபெருமான்,**
மேனாள் தமிழ்ப் பேராசிரியர், இந்நாள் இணைப்புப் பேராசிரியர்,
தமிழியல் துறை, அண்ணாமலைப் பல்கலைக்கழகம்,
முதல்வர், கச்சியப்பமுனிவர் தமிழியல் கல்லூரி, முசிறி
31சி, 3. கே.வி.எம்.நகர், செயங்கொண்ட சோழபுரம் அஞ்சல்,
அரியலூர் மாவட்டம்621802., தொடர்பு எண்: 9965680175

**முன்னுரை**

*சென்னையைச் சேர்ந்த உயர்திரு.பி.நா.சிதம்பர முதலியார் என்பவர் 1926 ஆம் ஆண்டில் தோத்திரப் பிரபந்தத்திரட்டு என்னும் பெயரில் ஓர் அரிய அழகிய கையடக்கத் தொகுப்பு நூலைப் பதிப்பித்துள்ளார். அப்பதிப்பில் சைவசமயம், சைவசமயி, திருக்கோயில்குற்றங்கள், சேவல்வகுப்பு, புட்பவிதி, நக்கீரர் விநாயகர்அகவல், மயில்வகுப்பு, நமச்சிவாயமாலை, சுந்தரர்வேடுபறி, வராகிமாலை, சரசுவதிஅந்தாதி, இடும்பன்கவசம், கடம்பன்கவசம், சஷ்டிக்கவசம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, திருநீற்றுப்பதிகம், மீனாட்சிஅம்மை கலிவெண்பா உள்ளிட்ட தொண்ணூற்றிரண்டு (92) நூல்கள் (952 பக்கத்தில்) இடம் பெற்றுள்ளன. அவற்றுள் முப்பத்தேழாவது நூலாக அகத்தியப் பஞ்சகம் வைக்கப் பெற்றுள்ளது.*

*அகத்தியப் பஞ்சகத்தை இயற்றியவர் பூவை.கலியாணசுந்தர முதலியார் ஆவார். இவர், சென்னையைச் சேர்ந்த பறங்கிமலையில் 1854-ஆம் ஆண்டு மே திங்கள் பத்தாம்நாள் தோன்றியவர். இவரது தந்தை பெயர் அண்ணாச்சாமி முதலியார். தாய் உண்ணாமுலையம்மை.*

*பூவை.கலியாணசுந்தரமுதலியார் நாள்தோறும் திருமுருகாற்றுப் படையைக் கூறி முருகப்பெருமானை வணங்கி வந்தமையால் முருகனின் திருவருளைப் பெற்றவராக விளங்கினார். இவர் ஒரு முறை (1879) செங்கல்பட்டிலிருந்து காட்டு வழியாகத் திருப்போரூர் முருகன் கோவிலுக்குச் சென்று கொண்டிருந்தார். செல்லும் வழியில் பாம்பொன்று இவரது காலைக் கடித்துவிட்டது. அப்போது முருகப்பெருமான் திருவருளால் காப்பாற்றப் பட்டார். மற்றொருமுறை மயிலம் முருகன் கோவிலுக்குச் செல்லும் போது வழியில் கள்வரிடம் பறிகொடுத்த பொருளையும் அவனருளால் திரும்பப் பெற்றார்.*

இவ்வாறு முருகப் பெருமானின் திருவருளை நிரம்பப் பெற்ற நிலையில் அம்முருகன் மேல் அகத்தியப் பஞ்சகம், கடம்பன்கவசம் ஆகிய இரண்டு நூல்களை இவர் இயற்றியுள்ளார். இவ்விரண்டு நூல்களுள் கடம்பன் கவசத்தை முன்பே (2002) தனிநூலாகப் பதிப்பித்து வழங்கியுள்ளேன். இந்நூல்களேயன்றி வேறு பல நூல்களையும் இவர் இயற்றியுள்ளார். இவரது வாழ்க்கை வரலாற்றை, தமிழ்ப் புலவர் வரிசை ஏழாம் புத்தகத்தில் விரிவாகப் படித்துணர்க.

1. குகனே வருக களங்கம்இலாக்
கோனே வருக கறைமிடற்றோன்
மகனே வருக மணம்பூத்த
மலரே வருக ஓர்ஆறு
முகனே வருக சிவானந்த
முதலே வருக அடியாரின்
அகனே வருக பழனிமலை
அரசே வருக வருகவே

2. கந்தா சரணம் மயில்வேல்செங்
கரனே சரணம் கவுரி
மைந்தா சரணம் செந்திருமான்
மருகா சரணம் வறியேன்தன்
சிந்தாகுலம் தீர்த்து அருள்செய்யும்
சேயே சரணம் எனைக்காக்கும்
எந்தாய் சரணம் பழனிமலை
இறைவா சரணம் சரணமே.

3. சிவமே போற்றி சிற்சபையோன்
செல்வா போற்றி கௌமாரா;
தவமே போற்றி விண்உலகத்
தலைவா போற்றி என்போல்வார்
பவமே ஒழிக்க வந்துஅருளும்
பதியே போற்றி அந்நாளில்
அவமே பொடித்த பழனிமலை
அண்ணா போற்றி போற்றியே

4. நாதா தருக நலம்எல்லாம்
நண்பே தருக உனைவேண்ட
போதா தருக மெய்ஞ்ஞானப்;
புனிதா தருக கருணைபொறை
தாதா தருக கல்விகுணம்
தனையே தருக கேட்டஎலாம்

*ஈதா எனும்முன் பழனிமலை*
*இறைவா தருக தருகவே*

5. *கூர்வேல் வாழி! தேவர்தொழும்*
*குமரன் வாழி! நடனமயில்*
*சீர்மான் வாழி! வலன்உயர்த்த*
*சேவல் வாழி! வள்ளிதெய்வப்*
*பேர்மான் வாழி! பேசரிய*
*பெரியோர் வாழி! செஞ்சாலி*
*ஆர்வண் பண்ணைப் பழனிமலை*
*அப்பன் வாழி வாழியவே*

**முடிவுரை**

முன்னுரையில் குறித்த, "தோத்திரப்பிரபந்தத்திரட்டு" நூலில் அகத்தியப் பஞ்சக நூலின் ஆசிரியர் பெயர் குறிப்பிடப்படவில்லை. அடியேன் பல நூல்களைத் தேடி அறிந்து குறித்துள்ளேன். மேலும், நூற்றி நாற்பத்தேழு ஆண்டுகளுக்கு முன்பு அருளப் பெற்று, நூறு ஆண்டுகளுக்கு முன்பு **(1926)** பதிப்பிக்கப் பெற்ற "அகத்தியப் பஞ்சகத்தை" மயிலம் சங்குகன்ன பாலசித்தர் திங்களிதழ் வாயிலாக முருக பக்தர்களுக்கு வழங்கியுள்ளேன். அனைவரும் ஓதி உணர்ந்து முருகனது அருளுக்கு ஆட்படுவோமாக.

மிகப் பழைய நூல்களில் காணப்பெறும் கருத்துகளையும், மக்கள் பெரிதும் பயில வாய்ப்பில்லாத நூல்களில் உள்ள கருத்துகளையும் எடுத்துக்கூறி விளக்குவது மிகப்பெரிய தமிழ்த் தொண்டாகும். இத்தொண்டிற்குச் சங்குகன்ன பாலசித்தர் பெயர் தாங்கிய திங்களிதழ் பாலமாக அமைந்திருப்பது போற்றத் தக்கதாகும்.

# வீரசைவமும் வைணவமும்

புலவர் வி.ச. சந்தானம் பி.லிட்
மேலாளர்
ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் திருமடம், மயிலம்.

*2018 ஆம் ஆண்டு ஜனவரி 18இல் வெளிவந்த ஸ்ரீ பாலசித்தர் இதழில் ஆசியுரையில் ஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் சமுதாயம் இல்லை என்றால் சமயம் இல்லை சமுதாயம் தான் முக்கியம் சமுதாயத்தில் அன்போடு, பண்பாட்டோடு, ஒழுக்கமுடன் வாழ்வோமானால், எல்லாச் சமயமும் நம்மிடம் வரும் என அருளிச் செய்தார்கள். இந்த அருளிச் செயலே என்னை வீரசைவமும், வைணவமும் என்ற தலைப்பில் அவற்றின் ஒற்றுமையையும், குணநலங்களையும் சேர்த்து எழுத அடிகோலியது.*

*அடைதற்குரிய மனிதப் பிறவியை இறைவன் அருளால் கிடைக்கப் பெற்ற நாம் சமயங்கள் பலவற்றுள்ளும் தலைசிறந்து விளங்குவது வீரசைவ சமயம் ஒன்றே என்பதும், வீராகமம், வாதுளாகமம் ஸ்வாயம்புவாகமம், சுப்ரபோதாகமம் என்ற ஆகமங்கள் என்பதும் மற்றும் இரேணுகாபாஷ்யம், சோமநாத பாஷ்யம், பண்டித பாஷ்யம், ஸ்ரீ கரபாஷ்யம் முதலிய பாஷ்யங்களும், வேதம், இதிகாசம், புராணம் முதலிய பல சாத்திரங்களும் வீரசைவசமயம் உயர்வு உடையது எனக் கூறுகிறது.*

*வீரசைவத்தில் சமய ஆச்சாரியர்களாக இரேவணாராத்திரியர், மருளாராத்திரியர், பண்டிதாராத்திரியர், ஏகோராமராத்திரியர், விஸ்வாராத்திரியர் முதலிய பூர்வாசிரியர்கள் தோன்றி, உற்பவம் முதலிய மேன்மைகளையும், சர்வேசனாகிய அல்லமாப்பிரபு தேவர், நந்தி தேவர் எனக் கொண்டாடப்படும் பசவேசர், ஆகியோர் உண்மை நிலைகளை ஆராய்ந்து, உணர்ந்து வீரசைவ சமயத்திற்கே உரிய அஷ்டாபரணங்களாகிய அன்பு கைவரப்பெற விபூதி, இட்டலிங்கம், ருத்ராக்கம், பஞ்சாக்கரம் குருலிங்கம், சங்கமம், தீர்த்தம் பிரசாதம் என்பவற்றின் இலக்கணங்களைக் கண்டறிந்து மக்களிடையே எளிய வழிபாடுடன் கூடிய வீரசைவ சமயத்தைப் பரப்பினார்கள்.*

*சிற்றறிவுடைய ஆன்மாக்கள் பேரறிவாளராகிய இறைவனைக் காண அக்கடவுளுடைய திருவருளே துணைபுரிதல் வேண்டும். இதுபற்றி "அவனருளாலே அவன்தாள் வணங்கி" என்று பெரியேர்கள் கூறியுள்ளபடி இக்கருத்தை மையமாக வைத்தே வீரசைவ சமயம் இயங்குகிறது.*

*குருவே சிவம் என்பது வீரசைவ சமயக் கொள்கை. குருமூர்த்தமாகவே இறைவன் தோன்றுகிறான். அமைச்சராகச் சென்ற மாணிக்கவாசகரை*

திருப்பெருந்துறையில் குருந்த மர நிழலில் இறைவன் குருவாய்த் தோன்றி ஆட்கொண்டார். இதனை,

*அருபரத் தொருவன் அவனியில் வந்து*
*குருபரனாகி நின்றான்* *(திருவாசகம்)*

என்றார் மாணிக்கவாசகர்.

*குருவே சிவமெனக் கூறினான் நந்தி (திருமூலர்)*

என்றும்

*மண்ணுறு குருபிரான் வடிவம் தாங்கியே (சித்தாந்த சிகாமணி)*

என்றும் கூறி சிவனே சிவஞானி என்பதை விளக்குகிறது. ஆன்மாவைத் தானே அறியும் ஆற்றல் நமக்கில்லை.

*தெளிவு குருவின் திருமேனி காண்டல்*
*தெளிவு குருவின் திருநாமம் செப்பல்*
*தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்*
*தெளிவு குருவுரு சிந்தித்தல் தானே*

என்பது 'ஆன்மாவைக் குருவின் வாயிலாகவே அறிய இயலும்' என்பதைக் குறிப்பிடுகிறது. "குருவருள் இல்லையேல் திருவருள் இல்லை" என்பதும் இங்கு ஈண்டு கவனிக்கத்தக்கது. இக்குரு வழிபாட்டிற்குப் பின் இறை வழிபாடு என்பது வீரசைவ சமயத்திலும், வைணவத்திலும் பின்பற்றப்படும் முக்கியக் கொள்கையாகும்.

இவ்வளவு சிறப்புக்களைத் தன்னகத்தே கொண்ட வீரசைவ சமயம் எட்டு வழிக் கோட்டைகளில் ஒன்றாகத் திகழும் குருவின் செயற்கரும் செயல் சமுதாய மேம்பாடு கருதியதாம்.

சைவ பேதங்களுள் மேலானதும், ஞானாபிமானதும், மோட்ச பதத்திற்குக் காரணமானதும், சுலபமாக அடையத்தக்கதும் ஆகிய வீரசைவ சமய உண்மை நிலையைப் பரமேஸ்வரன் பரமேஸ்வரிக்குக் கீழ்வரும் சுலோகத்தில் உபதேசம் செய்துள்ளார்.

*சுத்தஸைவ மிதிப்புரோக்தம் வீரசைவ மதஸ்ருணு*
*ஸர்வேஷா மபிஸைவானாம் வீரசைவம் மகத்தாம்*
*சுலபம் தேவபூஜேக சுலபஞ்சு கிரியாவகம்*
*ஞானகம்யம் ரகஸ்யந்து கைவல்ய பதகாரணம்*
*வீரசைவ மிதிக்கநேயம் தேஷாம் லக்ஷ்மணமுச்யதே*
*ஏவமேகாயத யஸ்மாது ஸர்வஸ்மிந் ஜகதீஸ்வரி.* *–வாதுளாகமம்.*

வீரசைவ சமய லக்ஷணங்களை விரிவாக இவ்வாகமம் கூறுகிறது. இதனை வீரசிங்காதன புராணத்தில்,

*வாதுளாகம்தின் உத்தரத்துறு தந்திரோக்த*
*வண்பிரதிஷ்டை மருவும்*
*ஆதியாம் சிவசித்தாந்த தந்திரத்தும் அத்ரவண*
*வேத மத்தியினும்*
*நீதியாப் அகாதிவீர சைவத்தின் நிலையிலான*
*ஓதிடும் பரமரகசியமாக உரைத்தனன்*
*உமையவள் தனக்கே*

எனவும், சிந்தாந்த சிகாமணியில்,

*சதுமறையுள்ளும் மிக்க சாஸ்திரங்களினு மீறொன்*
*பதுவித புராணத்துள்ளும் பகர்தருங் காமிகந்தான்*
*முதல்வரு மாகமத்தும் மொழிந்திடப் பட்டிருஞ் சந்*
*ததமுமெய் விடாது லிங்க தாரணம் வீர சைவர்க்கே*

*ஏகனுற்றருள் காமிகமே முதல்*
*ஆகமத்தில் அறைந்திடும் உத்தர*
*பாசமுற்றும் பகர் வீரசைவமாம்*
*சோக பற்றுயர் தொன்மதந் தோன்றுமால்*

எனக் கூறப்படுள்ளவை போற்றுதற்குரியது.

இதனால் நாம் அறியப் பெறுவது வீரசைவம் பூர்வீக மதம் என்பதும், பிரமாண மதம் என்பதும் ஆகமங்களில் இறைவனே கூறியுள்ளார் என்பதும், நமது சமயாச்சார்யர்களின் உற்பவத்தை அவ்வாகமங்களே எடுத்துரைக்கின்றன என்பதும் எவ்வகையிலும் வீரசைவ சமயம் எல்லோராலும் போற்றுதற்குரிய சமயம் என்பதும் திண்ணமாக அறிவது ஆகும்.

வீரசைவ மதமானது வைதீக மதங்களுள் ஒன்றாகி தன்னைப் பற்றுகின்ற ஜீவர்களுக்கு முக்தியைத் தரும் தாயகமாக விளங்குகிறது. வைஷ்ணவ மதங்களைப் பின்பற்றும் மக்களுக்கு அந்தந்த மத தர்ம சித்தாந்தங்களின் அடிப்படையில் நிரூபிக்கப்படும் தர்மங்களே சுதர்மம் எனப்படும் என்பது போல வீரசைவர்களுக்கு உரிய ஆச்சார்யர்களால் நிரூபிக்கப் பெற்றவைகளான அட்டாவரணக் கிரியை, பஞ்சாசாரங்கள், அபிப்ராதி கிருத வர்ணாஸ்ரம தர்மங்கள் சுதர்மங்களாகின்றன. இலிங்க தாரண ரூபமான சிவலிங்கத்தை ஆராதிக்காமல் உணவு உண்ணலாகாது. இதனை அநாராத்ய மகாதேவம். நபூஞ்ஜீயாத் கதாசந எனப் பிரமாண நுலீல் கூறுகிறது.

பத்தியந்தி பார்ப்பிதம் சாந்தம் பக்ஷயமூல பலாந்விதம் புஞ்ஜீயாத ப்ரமாத்மநே"" என்ற சங்கர சம்ஹிநாதி பிரமாணங்களும் கூறுவதால் வீரசைவர்கள் ஏது ஒன்றையும் இட்டலிங்கத்திற்கு நிவேதித்து பிரசாத பாவனையாகவே உட்

கொள்ள வேண்டும். நிவேதிக்கப்படாத பொருட்கள் எல்லாம் ஏற்றுக் கொண்டால் அவை தோஷமுடையதாகிறது.

**பக்தாநாம் ஸத நேத்வா புஞ்ஜீவயாத் பக்தி ஸம்யுத**

என்று சிவதர்ம வாக்யப்பிரமாணம் கூறுகிறது. இலிங்கம் தரித்தவர்கள் இல்லத்தில் உண்ண வேண்டும் என்று விதியெனக் கொள்ளப்பட்டிருக்கிறது. வீரசைவத்தில் சிவலிங்கபூஜை செய்யும் சிவலிங்கதார்களால் சமைக்கப்படும் பொருட்களையும் இலிங்கத்திற்கு நிவேதானம் செய்து, பின்னரே பிரசாதமாக உட்கொள்ளவேண்டும் எனத் தர்மம் கூறுகிறது.

வைணவ மதத்தில் வைணவர்கள் பகவானுக்கு ஆராதனம் செய்து பின்னர் நெய்வேத்தியம் செய்யப்படும் உணவு வகைகளில் முதலாவதாக அன்னத்தை இட்டு, அதில் சுத்திக்காக நெய் விட்டு, தீர்த்தத்தால் """"ஓம் பூர்பவஸ்சுவாக என்று அன்னத்தின் மேல் தெளித்து பின்னர் ஒவ்வொரு சாதமாக கையில் எடுத்து பிராணயஸ்வ: போன்ற மந்திரங்களால் பல்லில் படாமல் நெஞ்சுக்குள் போட்டு ஆத்மார்த்தமாக நெய்வேத்யம் செய்து பின்னரே உணவில் இதர நெய்வேத்யம் செய்த காய்கறிகள் போன்றவற்றை உண்ணுவது வழக்கம். ஒவ்வொரு மனிதனின் நெஞ்சிலும் இறைவன் இருக்கிறான் என்ற தத்துவ அடிப்படையில் ஆத்மார்த்தமாக நெய்வேத்தியம் செய்வார்கள். இதே முறை வீரசைவத்திலும் இட்டலிங்கத்திற்கு முதலில் நெய்வேத்தியம் செய்து ஒவ்வொரு வீரசைவர்களும் உண்பது வழக்கம்.

இவ்வகையில் வீரசைவம் எளிமை மிக்கதும், பல்வேறு சாஸ்திரங்களாலும், நான்கு வேதங்களாலும் போற்றப்பட்டதுமான சமய சமுதாயம் சார்ந்த மதம் எனக் கொள்ளலாம்.

- தொடரும்

# மராட்டியர் ஆட்சியும் தமிழும்

**புலவர் அருணா பொன்னுசாமி**
24/7, அண்ணாநகர், கரூர் 639 002. பேசி 9500926939

வரலாறு என்பதென்ன? காலந்தோறும் ஒவ்வொரு சமுதாயமும் சந்தித்த நிகழ்ச்சிகளும் சாதித்த செயல்களும் போதித்த நீதிகளுமே ஒரு மண்ணின் உண்மையான வரலாறு. வாழ்ந்து கெட்ட தமிழினத்திற்கு ஒரு வீர வரலாறு உண்டு. தமிழக வரலாற்றில் பெருமைக்குரிய பொற்காலம் ஒன்றுண்டு. அதிலிருந்தும், அது தன் பண்பையும் நாகரிகத்தையும் அறநெறிகளையும் கொடைத்தன்மைகளையும் இழந்து சிதைவுண்ட வரலாறே அதிகம். உலக நாடுகளில் தமிழ்ச் சமுதாயம் போல வந்தவர்களுக்கெல்லாம், வாழ்வளித்துப் போற்றிப் பாதுகாத்த நிலை, கடந்த ஈராயிரம் ஆண்டுகால வரலாற்றில் எங்கும் காண இயலாது.

மரணமிலாப் பெருவாழ்வும் புகழும் பெற்ற மறையாத பெருமை பெற்ற தமிழ்க் கவிஞர் அந்த நாளில் பாய்விரித்தா சூரியனும் படுக்கும் ; பம்பரமா அசையாமல் நிற்கும் என்றே ஓய்வெடுத்துக் கொள்ளாமல் வாய் மணக்கும் தமிழில் நூல்களையும் செய்திகளையும தந்தனர். எல்லாம் விதிப்பயன், போரிடல் இயற்கை; யாவரும் கேளிர் என்று அவர்கள் பாடினர். அச்சகிப்புக் கருத்துகளே நம் பண்பாடு தனித்து ஒளிராமலும் மிளிராமலும், தன்தனித் தன்மையை இழந்துவிட, மேம்பாட்டை உயர்வை, சிறப்பை, கலை இலக்கியச் செல்வங்களை இழந்திட வழிவகுத்தது.

> ***யாதும் ஊரே யாவரும் கேளிர்***
> ***தீதும் நன்றும் பிறர்தர வாரா...***

எனும் புறப்பாடல் (192) கருத்தும் இடைக்குன்றூர்க் கிழார், பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனைப் பாடும்பொழுது, புறம் 76-ஆம் செய்யுளில்

> ***ஒருவனை ஒருவன் அடுதலும் தொலைதலும்***
> ***புதுவது அன்றிவ் உலகத்து இயற்கை***

என்ற ஒரு தப்பான எண்ணமும், இன எல்லை கடந்து மொழி எல்லை கடந்து வந்தேறிகட்கெல்லாம் வாழ்வளித்துவிட்டது. இவ்வாறு தமிழினம், மற்றவர்களால், நூற்றாண்டுக் கணக்கில் அலைக்கழிக்கப்பட்டாலும், தன்

ஆண்மையுடன் ஒவ்வொரு நூற்றாண்டிலும் சமயத்தின், ஆதீனங்களின் வழியாகத் தன் பண்பாட்டையும் நாகரிகத்தையும் கலை இலக்கியங்களையும் செழிக்கவே செய்தது. வந்தேறிகளும் தமிழினத்தை முற்றுமாக முழுதாக ஆட்கொள்ள முடியாதென்று தெரிந்து புகுந்த இடத்தின் உயிர்த் துணையோடு, தம்மை இணைத்துக்கொண்டனர். ஒவ்வொரு நூற்றாண்டுதோறும் இவர்களின் ஆதிக்கம் புத்துயிர்ப்பும் மறுமலர்ச்சியும் பெற்றது.

***இன்னாசெய்தாரை ஒறுத்தல்; அவர்நாண***
***நன்னயம் செய்து விடல் – குறள்: 314***

எனும் குறள்நெறி காட்டும் பண்பட்ட ஒழுகலாறுகள் வந்தேறிகட்கு வழித்தடமாக்கி வாழ்வளித்தது.

ஒருவர் நல்லவராக நீதிநெறி காப்பவராக இருப்பதினும் கொடுமை வேறு எதிலும் இல்லை. இதனால்தான், உலகியல் உணர்ந்த வள்ளுவப் பெருந்தகை,

***நன்றாற்ற லுள்ளும் தவறுண்டு; அவரவர்***
***பண்பறிந்து ஆற்றாக் கடை –(குறள் : 469)***

என்றார். தோற்றத்தைக் கொண்டோ, பழகுவதைக் கொண்டோ ஒருவரை நல்லவரா? கெட்டவரா? என்பதை ஆய்ந்தறிதல் இயலாது என்பதை வள்ளுவரே சொல்வதைக் கேட்போம்.

***மக்களே போல்வர் கயவர்; அவரன்ன***
***ஒப்பாரி யாம்கண்டது இல். (குறள்:1071)***

என்பார். நன்றாகப் பழகி நட்பு பூண்டோரிடமும் நயத்தகு நாகரிகம் இல்லா, கூடா நட்பு, தீய நட்பு உள்ளதைக் கூறி வள்ளுவர் நம்மை எச்சரிக்கை செய்கிறார்.

இதனால்தான் தமிழ் இலக்கியங்களில் பாடுபொருள்கள் காலந்தொறும் மாறியே வந்துள்ளன.

சங்க காலத்தில் காதல், வீரம் பற்றியும், சங்கம் மருவிய காலத்தில் அறநெறிக் கருத்துகள் பற்றியும் நூல்கள் எழுந்தன. சோழ மன்னர் காலத்தில் காப்பியங்கள் தோன்றி புதிய நெறிகளைக் காட்டின. பண்டைக்காலத்துத் தூது, உலா முதலியன நாயக்கர் காலத்தில் தனிச்சிற்றிலக்கியங்களாக மலர்ந்தன. மயிலம் பொம்மபுர ஆதீனச் சிவப்பிரகாசர், தண்டபாணி சுவாமிகள் மற்றும் குமரகுருபரர், இறையருள் பாடல்களை இயற்றி, தமிழுக்கு ஆக்கம் சேர்த்தனர்.

மகாராட்டிரப் பகுதியில் மராட்டிய மொழியைத் தாய் மொழியாகக் கொண்டவர்கள் தஞ்சையை ஆண்டனர். தஞ்சையை ஆண்ட விசயராகவ

நாயக்கருக்கும் மதுரையை ஆண்ட சொக்கநாத நாயக்கருக்கும் மகட்கொடை பெறுவதில் பகைமை ஏற்பட்டு, தஞ்சை நாயக்கர் பெண் தர மறுத்ததால், மதுரை நாயக்கர் தஞ்சை மீது படையெடுத்தார். இதில் தஞ்சை மன்னரும் மனைவியும் ஒருசேர இறந்தனர்.

தஞ்சை அரசர்க்கிருந்த மாதேவியருள் ஒருத்தி, நான்கு வயது தன்மகனைத் தோழி ஒருத்தியிடம் கொடுத்துத் தப்பிக்க வைத்தாள். அவனே வளர்ந்து ஏகோசி எனும் பெயரில் தஞ்சையை நோக்கிப் படையெடுத்து வந்தான். அவனது வாரிசு வழியில் வந்த பதின்மூன்று அரசர்கள் தஞ்சையை கி.பி. **1676** முதல் **1832** வரை ஆண்டு வந்த மராட்டிய மன்னர்கள் ஆவர்.

வடக்கில் கொள்ளிடமும், கிழக்கே வங்கக் கடலும் மேற்கே திருச்சி புதுக்கோட்டையும், தெற்கே இராமநாதபுரமும் இவர்க்குரிய ஆட்சிப் பகுதிகள் ஆகும்.

தமிழ்மொழியில் காலந்தொறும் இலக்கியங்கள் தோன்றியுள்ளன. அவை மக்கள் வாழ்க்கை முறைகளையும், சமுதாய நிலையினையும் எடுத்துரைக்கின்றன. மாரட்டியர் காலத்தில் நாடக நூல்கள் வெகுவாகப் படைக்கப்பட்டன. குறவஞ்சி நூல்கள் பல உருவாயின. குறமெனவும், குறத்திப் பாட்டு எனவும் குறவஞ்சி என்றும் கூறும் சொல்லுக்குக் குறப்பெண், குறத்தி எனவும் பொருள்படும், ஒரு தலைவனோ, கடவுளோ உலா வரும் காலத்தில், உலாவருவோரை அழகி ஒருத்தி கண்டு காதல் கொண்டு நிற்பாள். காதலித்த மங்கைக்குக் காதலன் கிட்டுவான் எனக் கைக்குறி பார்த்துக் குறத்திக் கூறுவதே குறவஞ்சி நூலின் பொது இயல்பு.

வடமொழி மரபினை ஒட்டிப் பல்வேறு புராண இலக்கியங்களும் இவர்கள் காலத்தில் தமிழில் தோன்றின. மராட்டியர் காலத்தில்தான் அபிராமிப்பட்டர் எழுதிய அபிராமி அந்தாதி எழுதப்பெற்றது. உலா இலக்கியங்களும் இசையைப்பற்றிக் குறிக்கும் வண்ணம் எனும் நூலும் இறைவன், அரசர், செல்வர் பற்றிப் பெருமை பேசும் நூல்களும் தோன்றின. மொழி பெயர்ப்பு இலக்கியங்களும், மராட்டியர் ஆட்சியால், இலாவணி எனும் இலக்கிய வடிவும் நாட்டுப்புறப் பாடல் வழியில் கிடைத்தன.

இலாவணியில் பலவகை உண்டு. பாட்டின் கடைசிச் சொல் ஒரே மாதிரியாகப் பாட்டுகள் தோறும் வரும். 'இலால்' என்றால் வைத்தல், ஊன்றுதல் எனும் பொருள்தரும் மராட்டிய சொல். நாற்று நடுபவர்கள் பாடும் பாடல்கள். கேள்வியும் பதிலும் கூடி வரும் இலாவணி பாடல்கள் மாராட்டிய மொழியில் சிறப்புடையது. தமிழில் திரையிசைப் பாடல்களிலும் கொலைச் சிந்துப்

பாடல்களிலும் வெகுவாகப் பரவி கையாளப்பெற்றது. கீர்த்தனைப் பாடல்களும் மராட்டிய காலம் தமிழுக்குக் கொடுத்த கொடை.

மராட்டியர் காலத்தில் தமிழ்ப்புலவர்கள் பலர் இருந்துள்ளனர். படிக்காசுப்புலவர், அரியலூர் அரசரைப் புகழ்ந்து பாடிய பாடல் மிகுந்த வரவேற்புப் பெற்றது. அபிராமிப் பட்டர், சரபோசியின் அவைக்களப் புலவராக இருந்தார். கந்தையா பிள்ளை (திருக்கடவூரினர்) மற்றும் கொட்டையூர் சிவக்கொழுந்து தேசிகர், சீர்காழி அருணாசலக் கவிராயர், சர்க்கரைப் புலவர் என மராட்டியர் காலத்தில் ஏறத்தாழ இருபத்தொரு புலவர்கள் மன்னர்களாலும் செல்வந்தர்களாலும் ஆதரிக்கப்பட்டுள்ளனர்.

அரசர்கள் செய்த அறச் செயல்கள் பற்றிப் பேசும் செப்பேடுகள் தமிழில் 33 கிடைத்துள்ளன. செப்பேடுகளில் தமிழ்ச்சொற்களின் திரிபுநிலை காணப்படுகின்றது. சான்றாக, ராமலிங்கம் என்பது றாமலிங்கம் என்றும்; கிராமம் என்பது கிறாமம் என்றும், ஈழம் என்பது யீழம் என்றும் ஆற்றுக்கு என்பது ஆத்துக்கு என்றும் திரிந்துள்ளது.

அட்டவணை, அபாண்டம், காகிதம், காமாட்டி, கிச்சடி, கேசரி, சாம்பார், சாவடி (ஊரில் உள்ள பொது ஓய்விடம்) சீட்டித்துணி, சுதாரி, தலித், பட்டாணி, பேட்டை, போகி, ஜம்பம் ஆகிய மராட்டிய சொற்கள் தமிழில் வழக்கில் வந்தன.

மராட்டியர்கள் தஞ்சையைத் தலைமையிடமாக் கொண்டே ஆட்சி புரிந்தனர். சிவாலயங்களில் குடமுழுக்கு, திருவிழா ஆகியன நிகழ்வதற்கு ஆவன செய்துள்ளனர். சூரக்கோட்டையில் மூன்று வேலி நன்செய் நிலத்தைத் தஞ்சை பிரகதீசுவரர் கோயிலுக்கு நாள்தோறும் நடத்தப்படும் பூசைக்குத் தானமாக அளித்துள்ளனர். பண்டைக்காலத் தமிழ் மருந்து வகைகள் மருத்துவ முறை ஆகியவற்றைப் பாதுகாத்துத் தமிழர்க்குத் தந்த பெருமை மராட்டியர்க்கு உரியது.

மராட்டிய மன்னர்கள் கல்வி பயிலும் மாணாக்கர்கட்குப் பொருள் உதவியுடன் வந்து செல்வதற்கு வண்டி வசதியும் தந்தனர். ஆடிப்பெருக்கின்போதும்; பொங்கல் திருநாளிலும் தமிழ்ப்படிப்போர்க்குத் தேங்காய், பழம், கரும்பு, பரங்கிக்காய், பூசுணைக்காய் முதலியவற்றை அரசரே முன்வந்து வழங்கி, சிறப்பித்து உள்ளனர்.

மராட்டிய மன்னர்களில் இரண்டாம் சரபோசியைத் தமிழகம் நினைத்துப் போற்றிடக் கடமைப்பட்டுள்ளது. ஒரு நாட்டின் அறிவாலயம் நூல்

நிலையங்களே. தஞ்சை மண்ணில் சரசுவதி மகால் எனும் நூலகத்தை தோற்றுவித்து, அளவற்ற ஓலைச் சுவடிகளையும், அரிய நூல்களையும் சேகரித்துப் பாதுகாத்து வைத்துள்ளதை இன்றும் கண்டு களிக்கலாம்.

இரண்டாம் சரபோசியின் காதலி, கருவுற்றுப் பிரசவத்தின்போது, இறந்துபடும் நிலையில் மன்னனிடம் ஒரு வேண்டுகோள் விடுத்தாள். ஒரத்த நாட்டில், முத்தம்மாள் சத்திரம் ஒன்றை நிறுவி, ஏழை எளியவர்கள், பரதேசிகள் எப்போதும் வந்து இலவசமாகத் தங்கவும் உண்டு உறங்கவும் பெருநிதியை ஒதுக்கிச் செய்திட வேண்டுகோள் விடுத்தாள். அதை மன்னவனும் நிறைவேற்றி உள்ளநிலையில், முத்தம்மாள் சத்திரத்தை இன்றும் காணமுடிகின்றது. அங்குள்ள பள்ளியில் பயிலும் மாணவர்க்கு இலவச உணவும் தங்குமிடமும் இன்றும் தரப்படுகிறது.

திருவையாற்றில் கல்யாணம்மாள் சத்திரத்தை நிறுவினார். சமசுகிருத மொழிகளைக் கற்றிடக் கல்லூரி ஒன்றை நிறுவி, அங்குப் பயில்வோர்க்கு உண்டி உறைவிடம் ஆகியவற்றை இலவசமாகப் பெற்றுப் பயன்பெறத்தக்க வகையில், நிலங்களைத் தானமாக எழுதி வைத்தார். தமிழகம் முழுதும் பல்லக்கிலேயே பவனி வந்த திருப்பாதிரிப்புலியூர் சந்நிதானம் இரண்டாம் பட்டம் ஐந்துமொழி கற்றறிந்த புலியூர் ஞானியார், தமிழும் இருக்கட்டுமே எனப்பேசிட மாவட்டக் கழகத் தலைவராக இருந்த சர்.எ.டி.பன்னீர் செல்வம் வித்வான் எனும் புலவர் பட்டப் படிப்பையும் தொடங்கி வைத்தார். பன்னூறு புலவர்கள் அங்குப் பயின்று பைந்தமிழ்க் காத்த வரலாறு போற்றுதற்குரியது.

இராசா மடம் என்ற ஊரில் இராசாம்பாள் சத்திரத்தை நிறுவினார். அங்கு உயர் நிலைப்பள்ளியில் படிக்கும் மாணவர்க்கு இலவச உணவும் உறையுளும் இன்றும் தரப்படுகிறது.

இவ்வாறு தமிழுக்கும், தமிழ் கற்றோர்க்கும், அறிவுச் செல்வத்துக்கும் பெருந்துணை செய்த தஞ்சையை ஆண்ட மராட்டிய மன்னர்களைப் போற்றுவோம்.

# 'கள்' என்னும் சொல் - ஆய்வு!

**புலவர் அ.பெ. கறுப்பண்ணன்**
கபிலா மருத்துவமனை, 33, கௌரிபுரம்,
கரூர் - 639002. 98433 59522 93446 04209

'கள்' என்னும் சொல் ; சொல்லெனும் நாடக மேடையில் பெயர், வினை, இடை என்ற மூன்று வேடமிட்டு ஆடுகிறது. கள் குடித்தான் என்றால் அது பெயர்ச்சொல். கள்வன், கள்ளி, களவன், கள்வர், களவியல் என்பனவும் பெயர்களே! களவு தொழிற்பெயர். கள்வேம், கள்வாம். கள்வார் என்பன காலம் காட்டும் வினைச்சொல்லாம். கள்ளார் - எதிர்மறை வினைச்சொல். கள் = திருடு. இன்று கள் என்னும் சொல்லைத் திருட்டு திருடிக்கொண்டது. திருடன், திருடர் எனவும் திருடினான், திருடுகிறான், திருடுவான் என்றும் பெயர், வினைகளாக அது மாறிவிட்டது. ஆடுகள் மாடுகள் என்பனவற்றில் கள் பன்மை இடைச்சொல்.

வள்ளுவப் பெருந்தகை இந்தக் கள்ளை மூன்று உருவப் புனைவிலும் கையாண்டுள்ளார்.

அதிகாரம்-93 கள் உண்ணாமை. கட்காதல் கொண்டு ஒழுகுவார் உண்ணற்க கள்ளை (921, 922) என்று பெயர்ச்சொல்லாக்கியுள்ளார். அதிகாரம்-29 கள்ளாமை-திருடாமை. கள்வேம் எனல், கள்வார்க்குத் தள்ளும் (281,290) என்று வினைச் சொல்லாம் உருவினைத் தருகிறார்.

*துறந்தார்க்குத் துப்புரவு வேண்டி மறந்தார்கொல்*
*மற்றை யவர்கள் தவம்.* (குறள்.263)

என்றும்

*பூரியர்கள் ஆழும் அளறு* (குறள் 919)

என்றும் உயர்திணைப் பன்மையில் கள்ளை பன்மை காட்டும் இடைச் சொல்லாக இயம்பியுள்ளார்.

எனவே மூன்று உருவம் தாங்கி ஆடும் அதன் செயற்பாடுகளைப் புணரியலில் கவனமாகக் கையாளுதல் வேண்டும். இன்றேல் பொருள் மயக்கம் ஏற்படும். இக்கட்டுரை கள் என்பது இடைச் சொல்லாக, பன்மையை உணர்த்துவதாக, வரும் நிலையை ஆராய்கிறது. தொல்காப்பியம் கள் விகுதி, பெயரிலும் வினையிலும் இறுதியில் அல்திணைப் பன்மைப் பாலை உணர்த்த வரும் என்று கூறுகிறது.

*கள்ளொடு சிவணும் அவ்வியற் பெயரே*
*கொள்வழி யுடைய பலவறி சொற்கே* – பெயரி–15.

*உயர்திணைப் பெயரொடும் வினையொடும் கள்-விகுதி சேராது என்று தவிர்க்கிறது தொல்காப்பியம்.*

*சங்க இலக்கியங்களான பாட்டிலும் தொகையிலும் தேடும்போது கள் விகுதி உயர்திணைக்குப் பயன்பட்ட இடத்தைக் காண இயலவில்லை. சிலம்பிலும் மேகலையிலும் காணக் கிடைக்கவில்லை. ஆனால் மாந்தர், மக்கள், மாக்கள் என்ற சொற்கள் தொல்காப்பியத்திலும் சங்க இலக்கியங்களிலும் காணப்படுகின்றன. அஃறிணை இயற்பெயர் என்பது ஒருமையா பன்மையா என்பதை வினைச் சொல்லால் தெளிவாக உணர்த்தப்பட வேண்டும். (பெயரி-17) என்பார் தொல்காப்பியர். மேலும் வினையியலில் பால் விகுதிகள் கூறும்போது துறுடு இறுதியுடைய வினைச் சொற்கள் அல்திணை ஒருமைக்கும், அ ஆ வ-மூன்று இறுதியும் பலவின் பால் வினைவிகுதி கள் என்று வரையறுக்கும் போதும் கள் விகுதியைக் குறிக்கவில்லை.*

*தொல்காப்பிய விதிகளை ஏற்றே சங்க நூல்கள் இயற்றப்பட்டுள்ளன. பின்னர் வந்த சிந்தாமணி, தேவாரம், திவ்யப் பிரபந்தம், கம்பராமாயணம் ஆகியன-கள்-விகுதியை உயர்திணைக்கும் பயன்படுத்தியுள்ளன. உயர்வு அல்லாத திணை, அல்திணை. ல ள ஈறுகள் தனிக்குறிலை அடுத்து நிற்கும்போது வருமொழியில் த-வரின் ல், ள் இரண்டும் ஆய்தமாக மாறும் என்பது இலக்கணவிதி. (நன்.228, தொல். 370, 400) அஃறிணையை அல்திணை என்று எழுதியுள்ளேன். பஃறொடை, பஃறுளியும் காண்க.*

**இலக்கியங்களும், உயர்திணைக்கும் கள்விகுதி பெறுதலும்:**

| *எண்* | *இலக்கியம்* | *பாடல் வரிகள் சான்றுகள்* |
|---|---|---|
| *1.* | *சிந்தாமணி* | *கனஞ்சேர் கதிர்முலையும் கண்டார்கள்-பா. 636*<br>*அணங்குகொல் அறியேன் உரையீர்களே - பா.1311* |
| *2* | *திவ்யப் பிரபந்தம்* | *நாங்களும், முனிவர்கள் யோகிகள் - திருப்பாவை 4,5* |
| | *திருவாய்மொழி* | *அடியார்கள் குழாங்களை - பத்து.3 திருவாய் -3,*<br>*வல்லார்கட்கு. பத்து 3, திருவாய்மொழி 10:11,*<br>*வாது செய்வீர்கள். பத்-3, திருவாய்மொழி 10:5* |
| *3.* | *கம்பர்* | *எண்ணரிய கின்னரர்கள், முனிவர்கள். பா.632* |
| | | *இல்லாரும் இல்லை உடையார்களும் இல்லை. பா.166* |
| *4.* | *தேவாரம்* | *கை தவத்தர் மொழியைத் தவிர்வார்கள் திருமுறை 1 பா:21* |

*கற்றவர் சிற்றிடைக் கன்னிமார்கள் திருமுறை 1:35*
*பண்ணியல் பாடல் வல்லார்கள் திருமுறை 1 பா: 44*
*வலம் வந்த மடவார்கள். திருமுறை 1 பா: 1394*
*மந்திரம் தரு மறையோர்கள் - சமணர்கள்.*
*திருமுறை 2 பா:31*

*இவ்வாறு திருத்தக்க தேவரும் ஆண்டாளும், நம்மாழ்வாரும், கம்பரும், ஞானசம்பந்தப் பெருமானும் உயர்திணைப் பன்மைக்குக் கள் விகுதியை ஆண்டுள்ளனர். இவர்தம் காலம் கி.பி. 6 முதல் 12-ஆம் நூற்றாண்டு வரை. மணிமேகலையில் அறவண அடிகளும், சிலம்பில் காவுந்தி அடிகளும்-கள் விகுதி பெற்றுள்ளனர். சிவபெருமானே அடிகள் என்று பெயர் பெற்றார். தேவா. 1:201-244*

*இவற்றைக் கண்டபின் இலக்கணம் செய்தவர் நன்னூல் பவணந்தியார். இவர் காலம் கி.பி.12-ஆம் நூற்றாண்டு. எனவே நன்னூல் - 278 இல்*

***கிளந்த கிளைமுதல் உற்றரவ் வீற்றவும்***
***கள்என் ஈற்றில் ஏற்பவும் பிறவும்***
***பல்லோர் பெயரின் பகுதியாகும் என்றும்***
***முன்னர் அவ்வொடு வருவை யவ்வும்***
***சுட்டிறு வவ்வும் கள்ளிறு மொழியும் ... பலவின் பெயராகும் மே–நன்–280***

*என்றும் கள்விகுதியை இருதிணைப் பன்மைக்கும் உரித்தாக்குகிறார். மாடு வந்தது, மாடு வந்தன - என்று கள்விகுதி பெறாமலேயே அல்திணைப் பன்மையை வினைமுற்றால் உணர்த்தலாம் என்றும் கூறுவர். (நன்.281. தொல். எச்ச-65) அதனால் அஃறிணைப் பன்மைப் பெயர்கள் கள் விகுதி பெறாமலும் வரலாம் வினையால் ஒருமை பன்மை அறியப்படும்.*

*சங்கம் மருவிய காலத்தும், பிற்காலத்தும் கள் விகுதி எவ்வாறு வந்து சேர்ந்தது? சொல்லாமல் பரவாது அள்ளாமல் குறையாது என்பது பழமொழி. முன் காலத்தும் கள் விகுதி இருந்திருக்கலாம். தொல்காப்பியரே மக்கள் - என்பது உயர்திணைப் பன்மைப் பெயர் என்கிறார். கிளவியா-1; மர : 33. குறள்-63,410*

*மகன், மகள், மாந்தர், மக்கள் என்பன உயர்திணைப் பெயர்கள். (தொல்.பெய-9) மகவு என்பது மனிதக்குழந்தையைக் குறிக்கும் பெயர். (தொல்.உயிர்.மயங். - 16) தக்கார் தகவிலர் என்பார் குறளில் (114-391) தக என்பது தகவு என்று தொழில் விகுதிபெற்றது. பின்னர் ஆர் அர் சேர்ந்து தக்கார், தகவு இலர் ஆயிற்று. இதே போல மக-என்னும் பெயரும் அன், அள் சேர்ந்து மக+அன், மக+அள் = மகன், மகள் ஆயிற்று. மக-இறுதி அகரம். அன்வருமொழி முதல் அகரம். இரு அகரத்தில் ஒன்று கெடும் (தொல்.புணரி-23-24) மக+கள்*

= மககள் என்றாகி, பின்னர் மக்கள் என்று ஆகியிருந்திருக்கும் என்பதே தேவநேயப் பாவாணர் கருத்து. மா+கள் = மாக்கள் (விலங்குகள்). கல்லா மாக்கள் என்று தொகை நூல்கள் கூறும். கற்றார் மக்கள், கல்லார் மாக்கள் எனப்பட்டனர் போலும் (குறள். 410)

அவ்வாறாயின் கள்விகுதியைச் சங்கத்தார் உயர்திணைக்காகாது என்று ஒதுக்கியதேன் எனில், கள் எனும் சொல் பெயராயும் வினையாயும் வரும்போது இழிமை, கீழ்மையைக் குறிக்கின்றது எனவே உயர்திணைக்குக் கள் விகுதி ஆகாது என்று விலக்கியதோடு அல் திணைப் பன்மைக்கும் கள்ளை நீக்கினர் போலும். இஃது ஆய்வுக்குரியது. நன்னூலாரும் வினையின் விகுதிகளாக அன் ஆன் என்னும் நூற்பாவில் 37 விகுதிகளைக் கூறியவர்கள் விகுதியைத் தொகுப்பில் சேர்க்காமல் தவிர்த்துள்ளார். (நன் 140 கல்லா மாந்தர்- மதுரைக்க்- 420) கல்லா இளையர் - (சிறுபாண் - 83 பொருநர்-100 முல்லைப் - 36 காண்க!)

இனி, கள் விகுதி சேரும் போது நிலை மொழித்திரிபும், வரும் வல்லினம் மிகுதலும் ஆகுமா? என்பதை ஆய்வோம். புணர்ச்சி அல்வழி வேற்றுமை என இருவகை. அல்வழியில் வரும் வலி பெரும்பாலும் மிகலும் நிலைத்திரிபும் இன்றி இயல்பாகவே புணரும். கள் விகுதிசேர் புணர்ச்சி அல்வழியாகும். பெயரொடு பெயரும், பெயரொடு வினையும், வினையொடு வினையும் வினையொடு பெயரும் சேரும்போது இயல்பும் விகாரமும் தோன்றும். புணர்ச்சி என்பதே பெயர், வினையின்பாற்பட்டது என்றே கூறுவர். (தொல். புண-6,30) உருபியல் அனைத்தும் வேற்றுமைப் புணர்ச்சி. கள் விகுதி சேர்தல் அல்வழிப் புணர்ச்சி யாதலின் கள் சேரும்போது இயல்பே தோன்றும். எங்கும் விதிமீறல் உண்டு. புணர்விலும் புறனடை உண்டு. கள் என்பது வல்லின முதன்மொழி.

பெயரும் வினையும் பிரிந்தும் சேரும் புணர்ச்சிகளில் அல் வழியில் வலிவரின் பொதுவாக: 1. உயிர்முன் மிகும் -மிகாது. 2. ணன ஈறு திரியாது இயல்பாம். 3. லள ஈறுகள் திரியும் / உறழும். 4. மகர ஈறு கெட்டு மெலிமிகும். 5. யரழ ஈறு இயல்பும் மிகலும் ஆகும். 6. வன்தொடர்க் குற்று உகரம் வலி மிகும்.

ஆனால் கள் இடைச்சொல். அது பெயரொடு சேரும் அல்வழிப் புணர்வில் முதல் எழுத்து வல்லினம் ஆகலின்:

1. ஆகார ஈற்றின் முன் வலி மிகும்.
2. உகர இறுதிச் குறிலிணை முன் வலி மிகும்.
3. மற்ற உயிர்கள் முன் வலி மிகாது.
4. ணன யரழ ஈறு இயல்பாம்.
5. ல ள ஈறுகள் தனி நெடிலை இருகுறிலை அடுத்து வரின் இயல்பு.
6. தனிக் குறிலடுத்து லள திரியும்.

*7. மகர ஈறு கெட்டு மெலி மிகும்.*
*8. வன்றொடர் கு. உகரம் வலி மிகாது.*

**சான்றுகள்**

1. *ஆக்கள், மாக்கள், கோக்கள், கிடாக்கள், நாடாக்கள், வினாக்கள்*
2. *உடுக்கள், தெருக்கள், புழுக்கள், தருக்கள்*
3. *மற்ற உயிரீறு-நம்பிகள், நங்கைகள், செடிகள், கிளிகள், கனிகள், வரிகள்*
4. *காய்கள், தேர்கள், யாழ்கள், ஆண்கள், மான்கள்*
5. *கால்கள், வாள்கள், ஆள்கள், நாள்கள், தேள்கள், வால்கள், வேல்கள், மடல்கள், அகவல்கள்*
6. *கற்கள், பற்கள், சொற்கள், புட்கள்*
7. *மனங்கள், தடங்கள், குணங்கள், விதங்கள், குளங்கள்*
8. *வாழ்த்துகள், எழுத்துகள், காப்புகள், நாற்றுகள், அடுக்குகள், கச்சுகள், பாட்டுகள்*

*நூற்கடல் = பெயர்+பெயர், உருவகம். நூற்கள் = பெயர்+பெயர் = நூல்பாடிப் பெற்றகள். நூல்+கள் = நூல்கள்- பன்மைப்பெயர். கள் இடைச்சொல், குறிலடுத்து வரும் ல, ள-வும் உ. சாரியை பெற்று கல்லுகள், முள்ளுகள் ஆகும். தெருவும் தெருவுகளாகும். இவை வலி மிகலை திரிபை விலக்கும் முயற்சி. வள்ளுவரும் கற்க என்றவர் சொற்க என்னாது சொல்லுக என்பார் (**200**). எழுத்துக்கள் எழுத்துக்கூலிக்காப் பெற்ற கள். வாழ்த்துக்கள் - வாழ்த்தியதால் பெற்றகள். பெயர்+பெயர். நாட்கள் உண்டு. புறம். **123**. நாட் கொடி நுடங்கும். புறம்-**341**, சிலம்பு **15-217**. நாட்கள்-நாள் தோறும் உண்ணும் புதுக் கள். (புறம். **123**). நாள்தோறும் ஏற்றும் கொடி நாட்கொடி.*

*உயர்திணை அல்திணைப் பன்மைப் பெயர்கள் உலக வழக்கில் பன்மை உணர்த்த கள் விகுதி பெறாமல் எல்லாம் என்னும் பொதுப் பெயரைப் பெற்றும் வரும். ஆடவர் எல்லாம், மா டெல்லாம், பல் எல்லாம், நாமெல்லாம், நீவிரெல்லாம், கல்லெல்லாம் மாணிக்கக் கல் ஆகுமோ என்றும் வரும். எனவே கள் விகுதியைப் பெயரொடு சேர்க்கும்போது கவனமின்றி வலி மிகுத்தால்-கள் என்பது பெயராக மாறும். பனைகள் - பன்மை. பனைக்கள் வேற்றுமைத் தொகை. பனங்கள் அம்சாரியை பெற்றது.*

*உயர்திணையில் ஒதுக்கப்பட்ட கள் விகுதி ஆண்கள் ஆகி, அடிகள் ஆகி அடியார்கள் ஆகி, அடிகளார் ஆகி, விகுதிப் பொருள் விகுதியாக இருந்த கள் தனக்கு ஆர்விகுதி, விகுதியாக ஆகும் அளவுக்கு உயர்ந்து நிற்கிறது. பெருமை சிறுமைக்குத் தம் செயலே கட்டளைக்கல் ஆவது போல், கள் போல் இழிந்து கிடப்பினும் நல்லாருடன் சேர்ந்து பூவொடு நாருமாய் மணம் பெறுவோம். மேலும் ஆய்வோம்.*

# சொல்வலை வேட்டுவன்

**புலவர் பால.பழநி**

*திண்டிவனம், அலைபேசி : 8870704916*

**மாரிப்பித்தியார் :-**

*புறநானூற்றுப் பெண்பாற் புலவர்களில் மாரிப்பித்தியாரும் ஒருவர். அவருக்கு மாற்பித்தியார் என்றும் மரற்பித்தியார் என்றும் பெயர்கள் வழங்கப்பட்டுள்ளன. மழைக் காலத்திலே பூத்து அழகு செய்யும் 'பித்திகம்' என்ற அம்மலரைப் பற்றி அழகு பொருந்தப் பாடலைப் பாடிய சிறப்புக்கு உரியவர் ஆதலால் மாரிப்பித்தியார் என்று பெயர் பெற்றார். பித்திக மலரைப் பற்றி அவர் பாடிய பாட்டு கிடைக்கப் பெறவில்லை என்பது ஆய்வாளர் தரும் செய்தியாகும்.*

*இப்பெண்பாற் புலவர் புறநானூற்றில் இரண்டு பாடல்களைப் பாடியிருக்கிறார் (251, 252) அவ்விரண்டு பாடல்களுமே வாகைத் திணையில் தாபத வாகைத் துறையினைச் சார்ந்தவை.*

**தாபத வாகை :-**

*இத்தாபத வாகை பற்றிய விளக்கத்தை தொல்காப்பியம், புறத்திணை இயலில் பக்கம் 207-இல் "நாலிரு வழக்கில் தாபத பக்கமும்" என்று ஒரு நூற்பாவில் காண முடிகிறது. விளக்கம் விரிவாக அமைந்துள்ளது.*

*அறிவர் கூறிய ஆகமத்தின் வழிநின்று வீடுபேற்றைப் பெற முயல்வார்க்கு எண்வகை மார்க்கங்கள் உரியன என்பார் நூலோர். அந்த எண்வகை மார்க்கங்களும் இரண்டாகப் பிரித்துக் கூறப்பட்டுள்ளன.*

1. *தவம் புரிவோர்க்கு உரியன.*
2. *தவத்தோடு யோகமும் செய்வோர்க்கு உரியன என்பர்.*

**தவம் செய்வோர்க்கு உரியன :-**

*ஊண் நசை இன்மை, நீர் நசை இன்மை, வெப்பம் பொறுத்தல், தட்பம் பொறுத்தல், இடைவரை பொறுத்தல், ஆசனம் வரையறுத்தல், இடையிட்டு மொழிதல், வாய்வாளாமை என்பன அவை எட்டு ஆகும்.*

*இவற்றுக்கு விளக்கம் வருமாறு :- உணவிடத்தும் நீரிடத்தும் சென்ற மனத்தைத் தடுத்தல் (1, 2), ஐந்தீ நடுவிலும் நீர்நிலையிலும் நிற்றல் (3, 4), கடும் மலையும் கடலும் முதலியனவற்றில் நிற்றல் (5), உண்டற்காலை உரையாடாமை (6), தாமரை, ஆம்பல், யாமை முதலிய ஆசனத்து இருத்தல் (7), துறந்தபோது தொடங்கி வாய்வாளாமை (பேசாது இருத்தல்) (8) என ஒழுக்கம் எட்டனுக்கும் விளக்கம் தரப்பட்டுள்ளது.*

மேலும் ஒரு பழம்பாடலில் உள்ள செய்தி :

***"நீஇர் ஆட நிலக்கிடை கோடல்***
***தோல் உடுத்தல், தொல் எரி யோம்பல்***
***ஊர் அடையாமை, உறுசடை புனைதல்***
***காட்டில் உணவு கடவுள் பூசை***
***ஏற்ற தவத்தினர் இயல்பென மொழிப".***
***யோகம் செய்வார்க்கு உரியன :–***

இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி இவை பற்றித் திருமந்திரத்தில் விரிவாகக் காணலாம்.

**பாடல் எழுந்த சூழல் :-**

ஒரு தலைவன் இல்லற வாழ்க்கையில் நின்று ஒழுகி நல்லறம் புரிந்து வாழ்ந்த காலத்தில் அவனைச் சிறப்பித்துப் பாடினார் ஒரு பாட்டு. அவரே பிற்காலத்திலே அதே தலைவனைக் கண்டார். அத்தலைவன் துறவு மேற்கொண்டு காட்டிலே தவம் மேற்கொண்டு தாபத நிலையில் இருந்ததைக் கண்டு, அவனை வியந்து நோக்கி, அத்தலைவனா இவன்? என்று இருவேறு நிலைகளையும் மனக்கண்ணால் பார்த்துச் சிந்தித்தார். அதன் விளைவால் அற்புதமான பாடல் பிறந்தது.

**பாடல் :-**

***"ஓவத் தன்ன இடனுடை வரைப்பின்***
***பாவை அன்ன குறுந்தொடி மகளிர்***
***இழைநிலை நெகிழ்த்த மன்னன் கண்டிகும்***
***கழைக்கண் நெடுவரை அருவி ஆடிக்***
***கான யானை தந்த விறகில்***
***கடுந்திறல் செந்தீ வேட்டுப்***
***புறந்தாழ் புரிசடை புலர்த்துவோனே" – (புறம் 251)***
***திணை :– வாகைத்திணை, துறை :– தாபத வாகை.***

***பெண்பாற்புலவர் மாரிப்பித்தியார் பாடியது***

**பாடற்பொருள் :-**

ஓவியம்போல அழகினை உடைய இல்லம், செயற்கை அழகை வெளிப்படுத்தும் அழகிய பெரிய வீடு, அந்த வீட்டில் கொல்லிப்பாவை போன்ற வடிவுடைய மகளிர் வாழ்ந்தனர். அவர்கள், அந்த அழகிய இளைய ஆண்மகனைக் கண்டபோது அவர்களது கையில் அணிந்திருந்த வளையல்களை அவை நிற்கும் நிலையிலிருந்து நெகிழ்ந்து கழலுமாறு செய்தவன். மகளிர்தம் மனத்தைக் கவர்ந்த மன்மதன் போன்ற அழகனாய் அவன் விளங்கினான் என்பது குறிப்பு.

அத்தகு அழகிய இளைஞனாய்த் திகழ்ந்த தலைவன், காட்டிலே துறவறம் மேற்கொண்டிருப்பதையும் கண்டார், மனம் நெகிழ்ந்தார் மாரிப்பித்தியார்.

அத்தலைவன் அருவியில் நீராடினான். அவனது தலைமுடி சடைக்காடு போல முதுகிடத்தே கிடந்தது. முடியின் சடை ஈரமாக இருந்தது. அதனால் அதனைத் தீயில் புலரச்செய்ய நினைத்தான்.

அருகில் இருந்த காட்டு யானைகள், அவனது தேவை அறிந்து விறகுத் துண்டுகளைக் கொண்டுவந்து அவனது எதிரில் வைத்தன. தலைவனாக விளங்கிய அவன் இப்போது அவ்விறகில் தீமூட்டி, முதுகில் கிடந்த சடையைப் புலர்த்திக் கொண்டிருந்தான்.

**விளக்கம் :-**

புலவர் மாரிப்பித்தியார் அத்தலைவனது இளமைக் காலத்துத் துடுக்கான அழகுத் தோற்றத்தையும், மகளிரை ஈர்க்கும் உடல்வனப்பையும் கண்டவர். அவர் பல காலம் கழித்து அவனை துறவுக் கோலத்தையும் கண்டார். தாபத நிலையில் இரு நிலைகளையும் சுருக்கமாக மாரிப்பித்தியார் பாடினார்.

அவனது தவ வலிமை, யானையும் அவனுக்குத் துணையாய் இருந்து விறகுக் கட்டைகளைக் கொண்டுவரச் செய்தது. அவன் ஒன்றும் கூறாத நிலையிலே, அவை விறகு கொண்டு வந்தன. எனவே தான் புலவர் 'கான யானை தந்த விறகு' என்றார்.

மகளிர் பிறிதொரு உணர்வு ஏதும் இல்லாமல் காமவேட்கையோடு இருந்தனர் என்பது விளங்க அவர்களைப் 'பாவை' என்று குறித்தார்.

**பிற புலவர் தம் ஆர்வம் :-**

இவ்வாறு மாரிப்பித்தியார் சான்றோர் சிலரிடம் அத்தலைவனைப் பற்றிப் பாராட்டிப் பேசினார். அதுகேட்ட சான்றோர், இன்னும் அவனைப் பற்றிய சிறப்புகள் இருப்பின் கூறும் புலவரே! என்று ஆர்வமாகக் கேட்டனர். அப்போது அவர் சிந்தித்து அவனைப் பற்றி ஒரு பாடலைப் பாடினார். அப்பாடல் வருமாறு,

***"கறங்குவெள் ளருவி ஏற்றலின் நிறம்பெயர்ந்து***
***தில்லை அன்ன புல்லென் சடையொடு***
***அள்ளிலைத் தாளி கொய்யுமோனே***
***இல்வழங்கு மடமயில் பிணிக்கும்***
***சொல்வலை வேட்டுவன் ஆயினன் முன்னே" – (புறம் 252)***

என்று மிகவும் சுருக்கமாக அவனது பெருமையைக் கூறினார்.

**அருஞ்சொற்பொருள் :-**

கறங்கு - இழும் எனும் ஓசை, நிறம்பெயர்ந்து - பழைய நிறம் மாறினமை, அள்ளிலை -செறிந்த இலை.

**பாடல் பொருள் :-**

அவன், அருவியில் நாள்தோறும் நீராடுவதாலே அவனது சடை கொஞ்சம் மங்கலாக இருந்தது. எதுபோல? தில்லைத் தளிர்போலப் புல்லென்று பொலிவு குறைந்து காணப்பட்டது. அவன் ஆங்காங்குச் செறிவாக இருந்த தாளி என்னும் இலையைப் பறித்துக் கொண்டிருந்தான்.

இல்லற வாழ்க்கையின்போது, அவன் தன் மனைவியிடம் மிகுந்த காதல் உடையவனாய் ஒழுகினான். சில நன்மைதரும் காரணங்களுக்கு அவளை விட்டுப் பிரியவேண்டிய நிலையும் அவனுக்கு இருந்தது. கல்வி கற்பதற்காகவும், பொருள் தேடற்காகவும், பகை வேந்தர்களைச் சந்து செய்தற்காகவும் (சந்து - சமாதானம்), போர் புரிதலுக்காகவும், மனைவியை விட்டுப் பிரியும் அவசியம் ஏற்பட்டது. அப்பொழுதெல்லாம் மயில் போலும் தன் மனைவியைப் பிணிக்கும்படியான பொருத்தமான சொற்களை இதமாகச் சொல்லிச் சமாதானப்படுத்திப் பிரிந்து செல்வான். அச்சமயத்தில் அவன் ஒரு சொல்வலை வேட்டுவனாக இருப்பான். அத்தகைய திறமைப் பேச்சுடைய அவன் இப்பொழுது துறவு மேற்கொண்டு காட்டில் வாழ்கிறான்.

**சொற்பொருள் விளக்கம் :-**

'மயில்' என்று குறித்ததால் தன் கணவன், அவனை இன்றியமையாதவள் என்று கருதுமாறு அன்போடு ஒழுகினாள் என்பது பெறப்படுகிறது. அந்த மயிலாகிய தன் அன்பு மனைவியைப் பிரிந்து செல்லக் கருதும் தலைவன், தான் அன்போடு கூறும் சொல்லாகிய வலையிலே வீழ்ந்து அகப்பட்டுக் கொள்ளுமாறு செய்தான். எனவே தலைவன் சொல் வலை வேட்டுவன் ஆயினான்.

உணர்த்த உணரா ஊடல் உண்டான போது, அவனுக்குத் தேனும் பாலும் போலச் செஞ்சொல் கூறி (வலை) அவளைத் தெளிவித்தான். அவளும் மனம் தெளிந்து ஏற்று அமைதியானாள், ஊடல் தணிந்திருந்தாள். இத்தகைய சொல்வலை வேட்டுவன் ஆயினன் முன்னே. இப்போது சடையோடு தாளி இலையைக் கொய்வான் ஆயினன் என்றார் புலவர் மாரிப்பித்தியார்.

இல்லறத்தான் ஒருவன் துறவியான நிலையை இருவேறு பாடல்களால் புலவர் சுருங்கச் சொல்லி விளங்க வைத்திருக்கிறார்.

> ***"சொலல் வல்லன் சோர்விலன் அஞ்சான் அவனைஇகல்***
> ***வெல்லல் யார்க்கும் அரிது".***

> ***"கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய்க் கேளாரும்***
> ***வேட்ப மொழிவதாம் சொல்".***

என்னும் குறட்பாக்கள் ஈண்டு ஒப்பிட்டுச் சிந்திக்கத்தக்கன.

# கயிலைமலையும் மயிலமலையும்

**சித்தாந்த இரத்தினம், புலவர் சு. சிவகுமார்**
**தேவிகாபுரம்**

*பராபவன் அருள்சேரும் - பராபவ வருடம், ஆனி மாதம் 29ம் நாள், திருவாதிரை நட்சத்திரத்தில் மயிலம் - பொம்மபுர ஆதீனம் - மயிலமலையில், கொண்டாடப்படும் திருவிழா. நம் திருமடத்தின் முதற் குருநாதர் ஸ்ரீபாலசித்தர் குருபூசைப் பெருவிழா. இவ்விழா ஆண்டுதோறும் சிறப்புற நடைபெற்று வரும் நல்விழா. நம் ஆதீன குருமூர்த்திகளான இருபதாம் பட்டம் ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகளால் நடத்தப்பெறும் அருள்விழா.*

*இவ்விழாவில் நாம் கலந்துகொண்டு மயிலம் முருகன் திருவருளும் - குருமகாசந்நிதானங்களின் குருவருளும் பெறுவதே நாம் பெற்ற பிறவிப்பயனாகும். இந்த நன்னாளில் முதற் குருநாதர் - ஸ்ரீபாலசித்தரின் அற்புதங்களில், ஒரு சிலவற்றை நினைவுகூற முயல்கிறேன். திருவருளும் - குருவருளும் துணை நிற்க.*

*திருக்கயிலைமலையில் இருந்து இந்தப் பூமிக்கு வந்தவர்களில் ஒரு சில அருளாளர்களைப் பற்றி நாம் கண்டு உணர்ந்து பெருமிதம் கொள்வோம்.*

**திருமூலர் பதஞ்சலி வியாக்கிரபாதர்**

*திருமூலநாயனார், அறுபத்து மூவரில் ஒருவராகப் போற்றப்படுபவர். கயிலை மாமலையில் திருநந்திதேவரிடம் மறைபொருளைக் கேட்டு உணர்ந்த (நந்திதேவரின் சீடர்கள்) எட்டுப்பேர். இவர்கள் அனைவரும் மிகச்சிறந்த மாமுனிவர்கள். 1) சனகர், 2) சனந்தனர், 3) சனாதனர், 4) சனற்குமாரர், 5) சிவயோக மாமுனிவர், 6) பதஞ்சலி முனிவர், 7) வியாக்கிரபாத முனிவர், 8) சுந்தரநாத முனிவர் ஆவார்கள். இந்த எண்மரில் (எட்டுப் பேரில்) சிவயோக மாமுனிவர், பதஞ்சலி முனிவர், வியாக்கிரபாத முனிவர், சுந்தரநாத முனிவர் ஆகிய நால்வரும் திருக்கயிலையை விட்டு இந்தப் பூமிக்கு வந்து பல புண்ணிய சிவத்தலங்களைத் தரிசனம் செய்துக் கொண்டு சிதம்பரம் (திருத்தில்லை) அடைந்து இறைவராகிய பொன்னம்பலக் கூத்தனின் ஆனந்த திருநடனத்தைக் காண விழைந்தனர். அங்கு இறையருள் பெற்றுச் சிவயோகியாரும் சுந்தரநாதரும் புறப்பட்டார்கள். பதஞ்சலியாரும் வியாக்கிரபாதரும் இறைவரைப் பிரிய மனமில்லாது சிதம்பரத்திலேயே நிலையாகத் தங்கி இறைவனின் திருநடனத்தை நித்தமும் கண்டு மகிழ்வாராயினர். சிதம்பரத்தில் இருவரும் நிலைபெற்றனர்.*

சிவயோக மாமுனிவர் பல சிவத்தலங்களைத் தரிசனம் செய்து திருக்கயிலைக்குச் சென்றார்.

சுந்தரநாத மாமுனிவரும் பல சிவத்தலங்களைத் தரிசனம் செய்துகொண்டு திருவாவடுதுறையைத் தரிசித்துக் காவிரிக் கரையில் உள்ள சாத்தனூர் என்னும் ஊர் வழியாக நடந்து வந்துகொண்டிருந்தார். அப்போது அங்கு ஓரிடத்தில் பசுக்கள் கூட்டமாக நின்றுகொண்டு கதறி அழுவதைக் கண்டு அந்த இடத்திற்குச் சென்று பார்த்தார். பசுக்களை மேய்க்கும் மூலன் என்னும் யாதவன் இறந்து கிடப்பதைக் கண்டார். இந்த மூலன் மேல் பசுக்கூட்டம் வைத்திருக்கும் அளவிலாத அன்பைப் புரிந்துகொண்டு பசுக்களின் துயர் துடைக்க எண்ணி, தனது உடலை ஓர் இடத்தில் பாதுகாப்பாக இருக்கவைத்து அதிலிருந்து தனது உயிரைப் பிரித்து மூலன் உடலில் செலுத்தினார் சுந்தரநாதர்.

பிறகு மூலன் உடல் உயிர்பெற்று எழ, பசுக்கூட்டம் ஆனந்தமடைந்தது. மூலன் உடல் புகுந்த சுந்தரநாதர் பசுக்களை அவரவர் வீட்டிற்கு அனுப்பிவைத்து மூலனுடைய பசுக்களை அவனது வீட்டில் சேர்த்தார். ஆக மனிதநேயம் மட்டும் கொண்டதல்ல, சைவசமயம் அனைத்து ஆன்மாக்களிடமும் அன்பு செலுத்துவதும் உன்னதநெறியாகும்..

திருமூலர் வரலாறு கூறின் விரியும் இங்கு நாம் காணும் கருத்துகளுக்கு உரியன பார்ப்போம். இப்படி மூலன் உடல்புகுந்து சுந்தரநாதர் தன் உடலைத் தேட அவ்வுடல் இறைவனால் மறைக்கப்பட்டது உணர்ந்து எல்லாம் சிவன் செயல் என்று மூலன் உடலில் இருந்து மூவாயிரம் ஆண்டுகள் வாழ்ந்தார். ஆண்டுக்கு ஒரு பாடல் என்று மூவாயிரம் திருமந்திர , பாடல்களைத் தீந்தமிழில் நமக்காக அருளினார். இப்படி மூலன் உடலில் இருந்தவர் சுந்தரநாத மாமுனிவர் ஆதலால் இவரைச் சுந்தரநாத முனிவர் என்று அழைப்பதைத் தவிர்த்துத் திருமூலர் என்று அழைக்கப்பட்டார். இவ்வாறு பூமி வந்து திருமந்திர நூல் அருளி மீண்டும் கயிலாய நாதனை அடைந்தார் திருமூல நாயனார் என்பது வரலாறு ஆகும். இவ்வரலாற்றின் விரிவைத் திருமூலர் வரலாற்று நூலிலும் - பெரியபுராணத்திலும் காணலாம்.

***நந்தி அருள்பெற்ற நாதரை நாடின்***
***நந்திகள் நால்வர் சிவயோக மாமுனி***
***மன்று தொழுத பதஞ்சலி வியாக்கிரமர்***
***என்றிவர் என்னோடு எண்மரும் ஆமே.*** – *திருமந்திரம் 67*

**ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள்**

திருக்கயிலை மலையில் சிவபெருமானுக்கு அனுக்கத் தொண்டராக இருந்தவர் சுந்தரர். ஆலகால விடத்தைத் திரட்டி ஒரு நெல்லிக்கனி போல் தன்

PRGI No.TNTAM/25/A4155

*கரத்தில் ஏந்திச் சிவனாரிடம் அளித்ததால் ஆலாலசுந்தரர் எனப் பெயர் பெற்றார். இறைவர் திருவருளால் கயிலைமலையிலிருந்து பூமிக்கு வந்து திருநாவலூரில் அவதரித்தார். இவருக்கு நம்பியாரூர் என்னும் திருநாமம் சூட்டப் பெற்றது. இவரின் திருமணத்தின்போது சிவபெருமான் வந்து தடுத்தாட்கொண்டு பிறகு பரவையார், சங்கிலியார் என்னும் இருவரைத் திருமணம் செய்து வைத்தார். அழகில் மிகுந்த இவரைச் சுந்தரர் என்றே எல்லாம் அன்பாக அழைத்தனர்.*

*சுந்தரர் பல அற்புதங்களைச் செய்து, தேவாரப் பாடல்கள் பல பாடிப் பல தலங்களைத் தரிசித்துத் தமிழ்த்தொண்டும் சைவத்தொண்டும் ஆற்றினார். சிவனாரைப் பரவையாரிடம் இருமுறை தூது அனுப்பியது. முதலை உண்ட பாலகனை மீட்டதும் இப்படிப் பற்பல அற்புத நிகழ்வுகளைச் செய்த பெருந்தகையார் திருத்தொண்டத் தொகையைப் பாடி அறுபத்துமூவரின் சிறப்பினை உலகறியச் செய்தருளினார். இப்படிக் கயிலையிலிருந்து புவி வந்து அருந்தொண்டுகள் பல புரிந்த ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள் சிவபெருமான் அனுப்பி அருளிய வெள்ளை யானை மீது அமர்ந்து தேவரும் மூவரும் போற்றத் திருக்கயிலை மலையை அடைந்தார்.*

*கயிலையிலிருந்து மண்ணுலகம் வந்து ஆன்மாக்களுக்குப் பல நல்வழி காட்டியருளி மீண்டும் கயிலை மலையடைந்தார். ஸ்ரீ சுந்தரமூர்த்தி நாயனார் வரலாற்றின் விரிவைப் பெரிய புராணத்தில் விரிவாகக் காணலாம்.*

***இந்திரன் மால்பிரமன் எழிலார்மிகு தேவரெல்லாம்***
***வந்தெதிர் கொள்ளஎன்னை மத்தயானை அருள்புரிந்து***
***மந்திர மாமுனிவர் இவன்ஆரென எம்பெருமான்***
***நந்தமர் ஊரனென்றான் நொடித்தான்மலை உத்தமனே"***
***– (ஸ்ரீ சுந்தரர் தேவாரம் 4)***

**பரஞ்சோதி முனிவர்**

*நம் சைவசமய ஞான குருமார்களை நாம் இரண்டு நிலைகளில் வைத்துப் போற்றுவது மரபு ஆகும். 1) திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள், ஸ்ரீ மாணிக்கவாசகர் இவர்களைச் சமயக்குரவர் என்றும், 2) மெய்கண்ட தேவர், அருள்நந்தி சிவம், மறைஞானசம்பந்தர், உமாபதி சிவம் இவர்களைச் சந்தானக் குரவர் என்றும் நாம் போற்றி வருகிறோம். குரவர் என்னும் சொல்லுக்கு ஞான ஆசிரியர் (ஞானாசிரியர்) என்பது பொருளாகும்.*

*சமயகுரவர் நால்வரும் இறைவனிடம் நேரே அருள் பெற்றவர்கள். சந்தானக் குரவர்கள் என்னும் சொல்லுக்கு வழித்தோன்றல் அதாவது வழி வழியாகக் குருவின் மூலமாக ஞானம் பெற்றவர்கள் என்பதாம்.*

*திருக்கயிலை மாமலையில் சிவபெருமானிடம் ஞானஉபதேசம் பெற்றுத் திகழ்பவர் நந்தியெம் பெருமான். அந்தத் திருநந்தித் தேவரிடம் ஞான உபதேசம் பெற்றவர்களில் சனற்குமாரரும் ஒருவர். சனற்குமாரிடம் ஞான உபதேசம் பெற்றவர் சத்திய ஞான தரிசினிகள் என்னும் மாமுனிவர். சத்தியஞான தரிசிகனிடம் ஞான உபதேசம் பெற்றவர் பரஞ்சோதி முனிவர்.*

*1) திருநந்தி தேவர்*

*2) சனற்குமார்*

*3) சத்தியஞான தரிசினிகள்*

*4) பரஞ்சோதி முனிவர்*

*இந்நால்வரும் அகச் சந்தான குரவர் என்று போற்றப்படுபவர்கள். இவர்கள் திருக்கயிலாயத்திலே இருப்பவர்கள். இவர்களில் பரஞ்சோதி முனிவர் ஒருமுறை கயிலாய மலையிலிருந்து ஆகாய வழியாகத் தெற்கு நோக்கிச் சென்று கொண்டிருந்தார். அப்படி அவர் செல்லும்போது பூமியில் உள்ள புனிதத்தலமான திருவெண்ணெய்நல்லூருக்கு நேரே வரும்போது அவ்வூர் வீதியில் குழந்தைகள் விளையாடிக் கொண்டிருந்தன. அந்தக் குழந்தைகளில் ஒரு குழந்தை மட்டும் பரஞ்சோதியருக்குச் சிவஞானக் குழந்தையாகத் தெரிந்தது. உடனே திருவெண்ணெய் நல்லூர் வீதியில் இறங்கித் தன் உள்ளம் கவர்ந்த அந்தக் குழந்தையைத் தன் ஞானக்கண்ணால் நோக்கி நயனதீக்கை அருளினார். அக்கணமே அந்தக்குழந்தை சிவஞானியாகியது. அக்குழந்தைக்கு ஞான உபதேசம் செய்துவைத்துப் பரஞ்ஜோதி முனிவர் திருக்கைலையைச் சேர்ந்தார். அந்தக் குழந்தையே மெய்கண்ட தேவர். இவரிடம் உபதேசம் பெற்றவர் அருள் நந்திசிவம். அருள்நந்தி சிவத்திடம் மறைஞானசம்பந்தர் உபதேசம் பெற்றார்.*

*மறைஞானசம்பந்தரிடம் உமாபதிசிவனார் ஞானஉபதேசம் பெற்றார். இந்த அருள் குருமார்கள் வாயிலாகச் சைவ சித்தாந்தம் தோன்றியது. திருமுறைகளும், சாத்திர நூல்களும் சைவ சமயத்தின் இரு கண்கள் என்பர். ஆகக் கயிலாய மலையிலிருந்து இந்தப் பூமிக்கு வந்து மெய்க்கண்டாருக்குச் சிவஞான உபதேசம் செய்து சைவமும் தமிழும் தழைக்கச் செய்து மீண்டும் கயிலையை அடைந்தவர் பரஞ்சோதி முனிவர் ஆவார்.*

*நம் சைவசமயத்தின் முற்குருவாகப் போற்றப்படுபவர் திருநந்திதேவர். இவரைத் துதிக்கும் பாடலை நாமும் பாடி மகிழ்வோம்.*

***அங்கணன் கயிலை காக்கும்***
***அகம்படித் தொழின்மை பூண்டு***
***நங்குரு மரபிற் கெல்லாம்***
***முதற்குரு நாத னாகிப்***

*பங்கயந் துளவும் நாறும்*
*வேத்திரப் படைபொ றுத்த*
*செங்கைஎம் பெருமான் நந்திச்*
*சீரடிக் கமலம் போற்றி"*

- *காஞ்சிபுராணம் சைவசமய வரலாறும், பன்னிரு திருமுறை வரலாறும் என்னும் நூலில் சமய சந்தானக் குரவர்களின் வரலாற்றை விரிவாகக் காணலாம்.*

**ஸ்ரீ பாலசித்தர்**

*சிவம் வேறு வீரசைவம் வேறு அல்ல. சிவலிங்கப் பெருமானை ஓரிடத்தில் வைத்து வழிபாடு செய்வது சைவம். சிவலிங்கப் பெருமானைத் தன் அங்கத்தோடு வைத்துக்கொண்டு இமைப்பொழுதும் நம் உடலை விட்டுப் பிரியாதபடி அங்கலிங்கமாக வைத்துக் கொள்வது, அப்பெருமானை நித்தமும் வழிபாடு செய்வது வீரசைவம்.*

*ஒருமுறை திருக்கயிலை நாதனாகிய சிவபரம்பொருள் கயிலைமலை மேற்குதிசைக் காவலராக விளங்கிய பூதகணங்கள் ஒருவராகத் திகழ்ந்த சங்கு கன்னரை அழைத்து, 'சங்குகன்னா, தென்னாட்டு வீரசைவ செந்நெறி தழைத்தோங்கவும், சித்தர் கொள்கை வலுபெறவும், மெய்ஞானம் ஓங்கவும் ஆன்மாக்கள் உய்வுபெறவும், நீ பூமியில் சென்று இருப்பாய்' எனக் கட்டளையிட்டருளினார்.*

*சங்குகன்னரும் இறைவன் கட்டளையையேற்று பூமியில், கருவழித் தோன்றாமல், திருநீறு, உருத்திராக்கம், கல்லாடை, இட்டலிங்கம் அணிந்த மார்பு, செஞ்சடை, குண்டலமணிந்த செவிகள், சின்முத்திரையுடன் கூடிய வலக்கை, திருநீற்றுப்பை, மந்திரக்கோல், வீரசைவ ஆகமம் கூறும் திருவாய், திருவைந்தெழுத்து ஓதும் திருநாக்கு ஆகியவற்றுடன் கூடிய திருக்கோலத்துடன் பத்து வயது நிரம்பிய பாலகனாகத் தோன்றினார். பொம்மையபாளையத்தை அடுத்துள்ள பெருமுக்கல் என்னும் மலையில் கடுந்தவமும் இயற்றியும் பொம்மையபாளையத்தில் ஒரு திருமடம் அமைத்தும் சிவபெருமானையும் முருகவேளையும் வழிபட்டு, தன்னை நாடி வருபவர்களின் துன்பங்களையும் துயரங்களையும் துடைத்தருளி நல்வாழ்வு மலரச் செய்தும் இப்படிப் பல அற்புதங்கள் நிகழ்த்தி வாழ்ந்து வந்த சங்குகன்னரை, நாரதர் சந்தித்து 'சங்குகன்னரே, நீர் மயிலமலைக்குச் சென்று முருகக்கடவுளை நோக்கித் தவம் இயற்று அவர் உனக்கு நல்லருள் புரிவார்' என்று கூறினார்.*

*சங்குகன்னராகிய பாலசித்தர், மயிலமலையில் பலகாலம் (**32** ஆண்டுகள்) முருகப்பெருமானை நோக்கிக் கடும் தவம் செய்தார். கந்தக்கடவுள் காட்சி தராமையால் வள்ளியம்மை, தெய்வயானை அம்மையை வேண்டித் தவமிருக்க, வள்ளி-தெய்வயானை இருவரும் முருகனிடம் முறையிட்டனர். குமரக்கடவுள்*

PRGI No.TNTAM/25/A4155

தேவியர் இருவரையும் பாலசித்தரிடம் செல்ல அனுமதிக்க, இருவரும் சித்தக் கன்னியர்களாகத் தோன்றிப் பாலசித்தரிடம் சென்றனர்.

ஸ்ரீ பாலசித்தரும் சிந்தக்கன்னியரைப் பார்த்து 'நீங்கள் யார்?' என்று வினவ, 'நாங்கள் உங்களைத் தேடிவந்தோம் எங்களைத் தங்களது புதல்வியாக ஏற்றுக்கொள்ளுக' என்றனர். அவ்வவாறே இருவரையும் தன் புதல்விகளாக ஏற்று வாழங்கால் தன் மகள்களுக்கு மயிலமலையிலே ஒரு மாளிகையை அமைத்து அதில் அவர்களைக் காத்துவந்தார். காலம்கனிந்தது கருணையே வடிவான கந்தக் கடவுள் மயில மலைக்கு வந்து சித்தக்கன்னியரை மணக்க எண்ணி அவர்களை வற்புறுத்தப் பாலசித்தர் வந்திருப்பது முருகன் என்பது அறியாது அவருடன் போரிட்டார். முருகப்பெருமான் ஒரு அரசவேடத்தில் வந்தமையால் பாலசித்தர் கடுங்கோபத்துடன் போரிட்டார். யாரோ ஓர் அரசன் என்று நினைத்தார் சித்தர். முருகனுக்கும் சித்தருக்கும் தொடர்ந்த போரில், முருகப்பெருமான் பாலசித்தரை வென்றார்.

பிறகு, முருகப்பெருமான் திருக்காட்சி கொடுக்க, பாலசித்தர் காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி 'ஐயனே, அடியேன் தங்களையா எதிர்த்துப் போரிட்டேன்' என்று வருத்தமுற்றார். கந்தப்பெருமான் 'சித்தரே கவலை வேண்டாம் யாம் உன்னுடன் விளையாடினோம், உனக்கு வேண்டிய வரம் யாது' என்று கேட்க, பாலசித்தர் 'பெருமானே தாங்கள் என் புதல்வியராகிய வள்ளி, தெய்வயானையை மணந்து இந்த மயிலமலையில் மணக்கோலத்துடன் எப்போதும் திருக்காட்சியளிக்க வேண்டுமென்றார்'. முருகப்பெருமான் அவ்வாறே தேவியர் இருவரையும் மணந்து மயிலமலை மீது குடிகொண்டு அருள்புரிகிறார். பிறகு, பாலசித்தரை நோக்கி, 'சித்தனே, நீயும் என் அருகில் எப்போதும் இருப்பாய்' எனத் திருவருள்புரிந்தார் முருகர். பாலசித்தரும் முருகனருளால் இன்றும் - என்றும் மயிலமலையில் ஜீவசமாதியாகி இஷ்டலிங்க வடிவில் காட்சி அருள்கிறார்.

முருகப்பெருமானிடம் 'இறைவா, என் சீடராகிய சிவஞான பாலயனுக்கும், வழிவழியாக வரும் பரம்பரை (குருபரம்பரை) சிவஞானிகளுக்கும், தாங்கள் உபதேசம் செய்தருள வேண்டுமென வேண்டினார் கந்தப்பெருமான் அவ்வாறே உன்பரம்பரைச் சீடர்களுக்கு உபதேசம் செய்வோம்' என்றருளினார் (திருமடவரலாற்றில் விரிவாகக் காணலாம்).

1. கயிலையிலிருந்து பூமிவந்து நிலைத்தவர்கள் (சிதம்பரத்தில்) இருவர் - பதஞ்சலி, வியாக்கிரபாதர்.
2. கயிலைமலையிலிருந்து பூமியில் வந்து திருமூலராகி - திருமந்திரம் தந்தவர் - சுந்தரநாதர்.

3. *கயிலைமலையிலிருந்து பூமிவந்து அடியார் வருகையைத் தந்தவர் - சுந்தரர்.*

4. *கயிலைமலையிலிருந்து பூமிவந்து மெய்கண்டாருக்கு அருளியவர் - பரஞ்சோதியார்.*

5. *கயிலைமலையிலிருந்து மயிலமலை வந்து நிலைத்தவர் பாலசித்தர். தான் மயிலமலையில் நிலைபெறுவது மட்டுமின்றி அண்டசராசரத்திற்கும் ஆதாரமான முருகப்பெருமானுக்குத் திருமணம் செய்வித்து அவரும், தம்பதி சமேதராக என்றும் மயிலமலையில் இருக்கச் செய்தவர் பாலசித்தர்.*

*கயிலாயமலை முனிவர் திருமூலர் தெய்வத்தமிழ் அருளினார். கயிலாயமலை சுந்தரர் தேவாரம் திருத்தொண்டர்தொகைத் தீந்தமிழ் அருளினார்.*

*கயிலாயமலை பரஞ்சோதியார் சைவசித்தாந்தச் செந்தமிழ் அருளினார். கயிலாய சங்கு கன்ன பாலசித்தர் முத்தமிழின் வடிவான முருகனையே மயிலாசலத்தில் குடிகொள்ளச்செய்து நமக்கெல்லாம் நல்லருள் புரிந்தார்.*

***கயிலைமலை கண்ணுதல் வாழும் மலை***
***மயிலமலை மயிலவன் வாழும் மலை***
***கயிலையின் கண்வாழ்பவன்***
***மயிலையின் கண் வாழ்கிறான்.***
***ஆகவே கயிலைமலைக் காணவரும் இன்பம்***
***மயிலமலைக் காணவருமே.***
***மயிலமலை யாத்திரை கயிலைமலை யாத்திரையே.***

**குருமரபு வாழ்த்து**

*பரசிவமார் திருக்கயிலைப் பரம்பரையின்*
*வீரசைவ பரமே காட்டப்*
*பரனருளால் பொம்மைபுரக் கடலுதித்த*
*சங்குகன்ன பால சித்தர்*
*வரமயிலார் முருகனுப தேசமுடன்*
*வந்து குருவாகி யாண்ட*
*திறமிகுபேர் சிவஞான பாலயநற்*
*குருமரபு சிறந்து வாழி.*

**திருச்சிற்றம்பலம்**

PRGI No.TNTAM/25/A4155

# குரு மேன்மை

**முனைவர் நீ. காஞ்சனா**
உதவிப் பேராசிரியர், தமிழாய்வுத்துறை
ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் தமிழ், கலை
அறிவியல் கல்லூரி - மயிலம்

அறியாமையை அகற்றி, ஆன்மீக அறிவையும் வாழ்க்கைப் பாதையையும் காட்டுபவர் குரு. குரு என்றால் "இருளை நீக்கும் ஒளி" என்று பொருள். வாழ்வை உயர்த்தும் நற்பண்புகளையும் ஞானத்தையும் அளிப்பவர் குரு. மாதா, பிதா, குரு, தெய்வம் என்று நமது மரபு கூறுகிறது. தாய் தந்தைக்குப் பிறகு, தெய்வத்தை விட குருவே உயர்ந்தவர் என்று ஞான நூல்கள் கூறுகின்றன.

மனிதர்கள் அனைவரும் அறிவைப் பெற்றிருந்தாலும் சிலரே அதனை முழுமையாகப் பயன்படுத்தும் ஆற்றலைப் பெற்றிருக்கிறார்கள். அப்படி சிலர் தாம் பெற்ற அனுபவத்தை மற்றவர்களும் பெற வேண்டும் என்ற உயரிய நோக்கால் அறிவு செம்மைப்படாதவர்களையும் கூட செம்மைப்படுத்தி உயர்ந்த நிலைக்கு அழைத்துச் செல்கிறார்கள்.

ஓரிடத்தில் ஆள் எட்டிப் பார்க்க முடியாத உயரமான அகண்ட பாத்திரம் வைக்கப்பட்டிருக்கிறது. அதன் மேல் ஏணி ஒன்று சாய்த்து வைக்கப்பட்டிருக்கிறது. ஏறத்தெரிந்து கொண்ட சிலர் அதன் மேல் ஏறிப் பாத்திரத்தில் என்ன இருக்கிறது என்று எட்டிப் பார்த்து சுவையான பாயாசம் இருப்பதைக் கண்டு அதில் எட்டிக் குதித்து அமிழ்ந்து விடுகிறார்கள். அதைச் சுவைத்த சிலர் தான் அனுபவித்ததை மற்றவர்களும் அனுபவிக்க வேண்டும் என்ற உயரிய நோக்கில் கீழே இறங்கி வந்து மற்றவர்களிடமும் சொல்லி, முடியாதவர்களுக்கு வலிவு கொடுத்து ஏறச்செய்து பாத்திரத்தில் உள்ள சுவையான பாயாசத்தை அனுபவிக்கச் செய்கிறார்கள். அவர்கள் தான் போற்றுதற்குரிய "குருமார்கள்" என்று ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்சர் விளக்குகிறார்.

சில கோயில்களில் மூர்த்தி சிறப்பு. அதேபோன்று தலமும் சிறப்பாக விளங்கும். அங்குத் தீர்த்தமும் சிறப்பாக அமைந்துவிட்டால் அதன் மகிமை சொல்லற்கு அறியது. அப்படி மூன்று விசேஷமாக விளங்கும் தலத்துக்குச் சென்று இறைவனை முறையாக வழிபட்டு வந்தால் அவர்களுக்கு நல் வார்த்தைகளைச் சொல்லி வழிநடத்தும் குரு வாய்ப்பார் என்கிறார் தாயுமானவர். இதனை,

*"மூர்த்தி தலம் தீர்த்தம் முறையாய்*
*தொடங்கினாருக்கு வார்த்தை சொல்ல*
*சற்குருவும் வாய்க்கும் பராபரமே"*

என்னும் பாடலடிகள் உணர்த்தும்.

**குருவால் மேன்மை பெற்றவர்கள்**

**அர்ச்சுனன்**

துரோணாச்சாரியார் மகாபாரதத்தில் பாண்டவர்களுக்கும் கௌரவர்களுக்கும் ஆயுதக் கலை கற்றுத் தந்த குருவாக இருந்தவர். அர்ச்சுனன் தன் குருவான துரோணாச்சாரியாரை மிகவும் மதித்து, அவரின் கட்டளைகளை முழுமையாகக் கடைப்பிடித்தான். குருவின் மீது முழு நம்பிக்கையும் மரியாதையும் வைத்திருந்தான். குருவின் அறிவுரைகளைப் பின்பற்றி கடுமையாகப் பயிற்சி செய்ததால் உலகப் புகழ் பெற்ற வில்லாளனாக உயர்ந்தான்.

**சந்திரகுப்த மௌரியர்**

சந்திரகுப்த மௌரியர் சிறுவயதிலிருந்தே திறமையும் தைரியமும் கொண்டவராக இருந்தார். அவரது திறமையை அறிந்த சாணக்கியர் அவரைத் தனது மாணவராக ஏற்றுக் கொண்டார். அவருக்கு அரசியல், போர் நுணுக்கம் மற்றும் நிர்வாக திறன்களைக் கற்றுக் கொடுத்தார். பின்னர் மௌரியப் பேரரசை நிறுவி இந்திய வரலாற்றின் சிறந்த மன்னராக விளங்கினார். சாணக்கியரின் சிறந்த வழிகாட்டுதலும் அறிவுரைகளும் சந்திரகுப்த மௌரியரை ஒரு சாதாரண இளைஞரிடம் இருந்து மாபெரும் பேரரசராக உயர்த்தின.

**திருக்கச்சி நம்பிகள்**

திருக்கச்சி நம்பிகள் பூவிருந்தவல்லியில் அவதரித்தவர். அவர் காஞ்சி பூர்ணர் மற்றும் கஜேந்திரதாசர் என்றும் அழைக்கப்பட்டார். இவர் தினமும் காஞ்சி பெருமாளுக்குத் திருவாலவட்டம் வீசும் கைங்கரியம் செய்து வந்தார். அந்தக் கைங்கரியத்தில் ஈடுபட்டிருக்கும் அதே சமயம் பெருமாள் மற்றும் தேவித் தாயாருடன் உரையாடவும் வல்லவர்.

ஒருமுறை திருக்கச்சி நம்பிகள் தனக்கு முக்தி கிடைக்க என்ன செய்ய வேண்டும் எனக் கேட்ட போது, பெருமாள் முத்தியடைய குருவைச் சரணடைய வேண்டும் என்று அருளினார். அதன்படி திருக்கச்சி நம்பிகள் ஸ்ரீ வைணவ ஆச்சாரியரான ஸ்ரீ ஆளவந்தாரைக் குருவாக ஏற்றுக் கொண்டு "பேரருளாளதாசர்" என்ற திருநாமத்தைப் பெற்றார்.

**ஆனந்தாழ்வான்**

திருப்பதி ஏழுமலையானுக்குத் தொண்டு செய்யுமாறு இராமானுசர் இட்ட கட்டளையைச் சிரமேற்கொண்டு திருமலையில் அரிய நந்தவனத்தை உருவாக்கினார். குரு இராமானுசரின் திருவடி நிலைகளை (பாதுகைகளை) தனது நந்தவனத்தில் வைத்து அவற்றைக் குருவாகவே பாவித்து நித்திய பூசைகள் செய்தார். ஒரு முறை நாகம் தீண்டிய போதும் குரு கைங்கரியத்திற்கு இடையூறு ஏற்பட்டு விடக்கூடாது என்பதற்காக அதை பொருட்படுத்தாமல் தனது மலர் பறிக்கும் பணியைத் தொடர்ந்தார். தெய்வத்தை விட குருவே உயர்ந்தவர் என்பதைத் தன் வாழ்நாள் முழுவதும் செயலில் காட்டியவர்.

**மதுரகவி ஆழ்வார்**

வைணவ சமயத்தின் பன்னிரு ஆழ்வார்களுள் மதுரகவி ஆழ்வார் ஒரு தனித்துவமான மற்றும் உன்னதமான இடத்தைப் பெறுகிறார். மற்ற ஆழ்வார்கள் அனைவரும் பெருமாள் மீது தாங்கள் கொண்டிருந்த தீவிர பக்திக்காகப் போற்றப்படுகையில் மதுரகவி ஆழ்வார் தனது குருவான நம்மாழ்வார் மீது கொண்ட ஒப்பற்ற பக்திக்குச் சான்றாகத் திகழ்கிறார். குருவின் மீதான பக்தியே இறைவனை அடையும் உன்னத வழி என்பதை அவரது படைப்பின் வழி அறிய முடிகிறது.

***நாவினால் நவிற்று இன்பம் எய்தினேன்***
***மேவினேன் அவன் பொன்னடி மெய்ம்மையே***
***தேவு மற்று அறியேன் குருகூர் நம்பி***
***பாவின் இன்னிசை பாடித் திரிவனே***

என்ற பாடலில் நம்மாழ்வாரைத் தவிர வேறு ஒரு தெய்வத்தை அறியேன் என்று பாடி இருப்பது குறிப்பிடத்தக்கது.

**மாணிக்கவாசகர்**

பாண்டிய மன்னனின் அமைச்சராக இருந்த மாணிக்கவாசகருக்கு திருப்பெருந்துறையில் சிவபெருமான் குரு வடிவில் காட்சி தந்து ஞான உபதேசம் செய்தார். அந்த உபதேசத்தால் மாணிக்கவாசகர் இறையருளைப் பெற்று சிவ பக்தியில் முழுமையாக ஈடுபட்டார். குருவின் அருளால் மாணிக்கவாசகர் பெரிய சைவசித்தராக உயர்ந்தார்.

**அருணகிரிநாதர்**

வாழ்க்கையில் துன்பமடைந்திருந்த அருணகிரிநாதருக்கு முருகப்பெருமான் குருவாக அருள் செய்து ஞான உபதேசம் செய்தார். அருணகிரிநாதர் குருவருளால்

PRGI No.TNTAM/25/A4155

*ஞானம் பெற்று திருப்புகழ் போன்ற பக்தி இலக்கியங்களை இயற்றினார்.*

**விவேகானந்தர்**

*விவேகானந்தர் தனது குருவான ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்சர் மீது அளவற்ற பக்தியும் மரியாதையும் கொண்டிருந்தார். குருவின் அறிவுரைகளை முழுமையாக ஏற்று வாழ்க்கையில் பின்பற்றினார். குருவின் மறைவுக்குப் பிறகும் அவரது போதனைகளை உலகம் முழுவதும் பரப்பியதால் சிறந்த குரு பக்தராய் விளங்கினார்.*

**நல்லாற்றூர் சிவப்பிரகாசர்**

*"குருவருள் இன்றேல் திருவருள் இல்லை" என்னும் வாக்கிற்கேற்ப திருமடங்களில் குருவாக எழுந்தருளி, தன்னிகரற்ற தொண்டுகளைச் செய்து வந்தனர். அவ்வகையில் இன்றும் சமயத் தொண்டு சமுதாயத் தொண்டு எனத் தொடர்ந்து செய்து வரும் சிறப்புக்குறியது மயிலம் பொம்மபுர ஆதீனம். இவ்வாதீனத்தின் முதற்குரவர் ஸ்ரீ பாலசித்தர் ஆவார். அவரைத் தொடர்ந்து ஆதி சிவஞான பாலய சுவாமிகளின் அருளாட்சியில் அவரது சீடர்களுள் முதன்மையாக விளங்கியவர் கற்பனைக் களஞ்சியம் ஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகள் ஆவார்.*

*'மானுடரைப் பாடேன்' என்றிருந்த நல்லாற்றூர் சிவப்பிரகாச சுவாமிகள் முருகப்பெருமானுடைய ஆணையின்படி அக்காலத்தில் சிவாநுபூதிச் செல்வராய் பொம்மபுரத்தில் விளங்கிய ஸ்ரீ சிவஞான பாலய தேசிகரைத் தம் ஞானகுருவாகக் கொண்டார். அவர்கள் மீது நெஞ்சுவிடு தூது, தாலாட்டு, பிள்ளைத்தமிழ், கலம்பகம், திருப்பள்ளி எழுச்சி ஆகிய ஐந்து நூல்களை இயற்றியருளி யுள்ளார்கள்.*

**முடிவுரை**

*குருவருள் பெறின் திருவருள் வரும் என்பதற்கிணங்க ஸ்ரீ பாலசித்தர் குருபூஜையாகிய இந்நன்னாளில் இருபதாம் பட்டம் குருமகா சந்நிதானம் அவர்களின் திருவடிகளை வணங்கி வாழ்வில் உயர்வோமாக!.*

# பாலசித்தர் வெண்பா மாலை

**முனைவர் அ. சதீஷ்**
உதவிப் பேராசிரியர், தமிழாய்வுத்துறை
ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் தமிழ், கலை
அறிவியல் கல்லூரி - மயிலம்

**காப்பு**

*பூத கணநாதன் பொம்மபுர ஆதீன*
*நாதனாம் பாலசித் தன்மீது – ஓதும்*
*அருள்வெண் பாமாலை இன்றமிழில் பாடத்*
*திரட்டுக,நல் ஆனை முகன்.*

பூதகணங்களின் தலைவரும், பொம்மபுர ஆதீனத்தின் முதற்குரவருமாகிய ஸ்ரீ பாலசித்தர் மீது இந்த அருமையான வெண்பா மாலையை இனிய தமிழில் பாடித் திரட்டுவதற்கு, நல்லானை முகத்தைக் கொண்ட விநாயகப் பெருமான் துணை நிற்பாராக.

**நூல்**

1 *கயிலாய வெற்பின் கதிர்மேற்கு நாதன்*
*மயிலாரும் பூத கணத்துச் – செயலாரும்*
*சங்குகன் னன்பரமன் சாற்றப் புவிமீதே*
*மங்களப் பாலனாய்த்,தோன் றினார்.*

திருக்கயிலை மலையில் சிவபெருமானுக்கு மேற்குத் திசைக் காவலராக விளங்கிய பெருமையுடைய பூதகணங்களில் ஒருவர் சங்குகன்னர். அவர் சிவபெருமானின் கட்டளையை ஏற்று, இப்பூவுலகில் நன்மைகள் பெருகும் பொருட்டுப் பத்து வயது பாலகனாக அவதரித்தார்.

2 *ஏழாம்நல் நூற்றாண்டின் எல்லையினில் பொம்மபுரத்*
*தாழார் கடற்கரையில் பாலகனாய் – வாழும்*
*நெறிவளர வீர சைவம் தழைக்க*
*அறிவோ(டு) அவதரித்தார் ஆங்கு.*

ஏழாம் நூற்றாண்டு காலக் கட்டத்தில், மக்கள் வாழ வேண்டிய நன்னெறி வளரவும், வீரசைவ நெறி தழைக்கவும், பொம்மபுரத்தின் ஆழமான கடற்கரையில் பேரறிவோடு ஒரு பாலகனாக அவர் அவதாரம் செய்தார்.

3 *கடலருகே தோன்றிடுமக் காரிகையார் பாலன்*
*அடலேறு போன்ற அடியார் – திடமுடனே*
*ஆகமத்தின் நுண்பொருளை ஆய்ந்துணரச் செய்தாரே*
*மோகமதைத் தீர்க்கும் முனி.*

கடற்கரையில் தோன்றிய அந்தப் பாலசித்தர், ஆண்சிங்கம் போன்ற வலிமை மிக்க அடியார்கள் பலரும் ஆகமங்களின் நுட்பமான பொருள்களைத் திண்ணமாக ஆராய்ந்து உணருமாறு செய்தருளினார். அவர் உலகப் பற்றை அறுக்கும் முனிவர் ஆவார்.

4 ***பத்து வயதிளப் பாலகராய்த் தீவினைகள்***
***முத்திறமும் தீர்க்கும் முனிவராய்த் – தத்துவமாய்***
***மண்ணிலவர் செய்த பலசித்து மாந்தர்தம்***
***கண்ணிலுறு நோய்துடைத்த காப்பு.***

பத்து வயதுப் பாலகனாகத் தோன்றி, மக்களின் மூவகை வினைகளையும் தீர்க்கும் முனிவராக விளங்கிய அவர் செய்த அற்புதங்கள் (சித்துக்கள்), மனிதர்களின் அறியாமை என்னும் அகக்கண் நோயைத் துடைத்துக் காக்கும் அரணாக விளங்கின.

5 ***பாலனெனச் சித்துக்கள் பாரினில் செய்துயர்***
***சீலமுடன் வாழும் தவசினன் – நாளும்***
***ஈசன் வழியொழுகி இன்பக் கடல்மூழ்கும்***
***மாசிலா ஞான மணி.***

இள வயதிலேயே பல சித்துக்களைச் செய்து காட்டி உயர்ந்த ஒழுக்கத்துடன் இவ்வுலகில் 'பாலசித்தர்' என்னும் நல்ல திருநாமத்தைப் பெற்று வாழ்ந்த தவச்சீலர். அவர் எந்நாளும் இறைவன் காட்டிய வழியில் நடந்து, பேரின்பக் கடலில் மூழ்கிய குற்றமற்ற ஞானமணியாவார்.

6 ***பொம்ம புரத்துத் திருமடத்தில் பேரன்பால்***
***செம்மல் முருகன் கழலினையே – நம்மவர்போல்***
***ஆறாப் பெருங்காதல் கொண்டு தினமுமே***
***மாறா(து) உருகினார் மன்.***

பொம்மபுரத் திருமடத்தில் தங்கியிருந்த காலத்தில், நம்மைப் போன்ற சாதாரண மனிதர்களின் உலகப் பாசம் போலல்லாது, முருகப் பெருமானின் திருவடிகளின் மீது தணியாத பெருங்காதல் கொண்டு நாள்தோறும் மனமுருகி வழிப்பட்டு வந்தார்.

7 ***எப்படியும் கந்தன் எழில்கோலம் காண்பதற்குத்***
***தப்பிலா எண்ணமவர் தாங்கொண்டே – ஒப்பில்லாப்***
***பொம்ம புரமடத்தை விட்டே புறப்பட்டுச்***
***செம்மல் நடந்தார் சிறந்து.***

எப்படியாவது முருகப் பெருமானின் பேரழகு வாய்ந்த திருக்காட்சியைக் காண வேண்டும் என்ற உறுதியான எண்ணத்தைக் கொண்டு, ஒப்பற்ற பொம்மபுர மடத்திலிருந்து புறப்பட்டு அந்தத் தூயவர் பாதயாத்திரையாகத் தவம் செய்ய நடந்தார்.

PRGI No.TNTAM/25/A4155

8 முருகன் தரிசனம் முன்னி,வட மேற்கே
பெருகும் பெருமுக்கல் வெற்பில் – உருகி
நெருநல் தொடுத்தவப் பாசமிலா நல்ல
அருந்தவமே செய்தார் அவர்.

முருகனின் காட்சியையே நோக்கமாகக் கொண்டு, வடமேற்கில் உள்ள பெருமுக்கல் மலைக்குச் சென்றார். அங்குத் தன் மனமுருகி, உலகப் பாசங்களை அறுத்தவராய், போற்றத்தக்க அத்தகு கடுந்தவத்தைச் செய்து முடித்தார்.

9 தங்கியே மாமுக்கல் வெற்பினில் பாலசித்தர்
பொங்கு தவங்கள் புரிகையிலே – எங்கும்
ஒலித்த அசரீரி ஓசையினைத் தங்கண்
செவிமடுத்தார் சிந்தை தெளிந்து.

பெருமுக்கல் மலையில் தங்கிப் பாலசித்தர் வீரியமிக்க தவங்களைச் செய்து வரும்போது, ஆகாயத்தில் எங்கும் ஒலித்த அசரீரி (தெய்வவாக்கு) ஒலியைக் கேட்டுத் தன் மனம் தெளிவடைந்து, அதனைத் தன் காதுகளால் ஏற்றுக்கொண்டார்.

10 தென்மேற்கு நோக்கியே சீர்மயில மாமலைக்கு
நன்முனிவர் வந்து நயந்தேதான் – தின்பதற்குக்
கள்ளி,நற் பாலைக் கனிந்துண்டு நோற்றாரே
தெள்ளுதமிழ்க் கந்தன் சினந்து.

தென்மேற்கே உள்ள மயில மலைக்குச் சென்றால் முருகனைக் காணலாம் என்ற நாரதரின் அசரீரி வாக்கின்படி மயில மலைக்கு வந்து, கள்ளிப் பாலையே உணவாகக் கொண்டு, தூயத் தமிழ் வடிவான கந்தனின் திருவருளுக்காகக் கடுமையான தவம் புரிந்தார்.

11 கள்ளிவெண் பாலையே காரமுதா உட்கொண்டே
வள்ளல் முருகன் மலரடிக்காய் – அள்ளுறும்
முப்பத் திரண்டாண்டு செய்த கடுந்தவத்தால்
ஒப்பில் அருள்வாரா ரே.

கள்ளிப் பாலைப் பிரசாத அமுதமாக உட்கொண்டு, வள்ளல் முருகனின் திருவடி தரிசனத்திற்காக அன்பு பொங்க முப்பத்திரண்டு ஆண்டுகள் அவர் செய்த கடுந்தவத்தின் பயனாக, ஒப்பற்ற இறை அருள் அங்கே வரத் தொடங்கியது.

12 அருள்தாராக் கந்தன் செயலால் அனல்சூழ்
மருளிலா வள்ளிதெய் வானை – இருவருமே
கன்னியராய்ப் பாலசித்தன் நற்பாதம் போற்றிடவே
நன்மயிலை வந்தாரே காண்.

பாலசித்தருக்குத் தவம் கனிந்த போதும் நேரடியாக காட்சி தராத முருகன், தன் திருவிளையாடலால், குற்றமற்ற வள்ளியையும் தெய்வானையையும் இரு கன்னியர் வடிவில் அனுப்பிப் பாலசித்தரின் திருவடிகளைப் போற்றி மயிலமலைக்கு அடைக்கலமாக வந்தனர்.

13 தேடிவந்த கந்தன்தான் தேவிமாரைக் கேட்கவே
நாடிமறுத் தாரே நன்முனிவர் – கூடவே
வில்லவன் பாலசித் தரோடு வேலவனும்
மற்போரே செய்தார் மகிழ்ந்து.

தன் தேவியர்களைத் தேடி வந்த வேடன் (முருகன்) அவர்களைத் தருமாறு கேட்க, அதற்கு முனிவர் மறுத்தார். இதனால், வில்லேந்திய வேடன் வடிவிலிருந்த முருகனும் பாலசித்தரும் ஒருவரோடு ஒருவர் மகிழ்வோடு மற்போர் புரிந்தனர்.

14 மற்போரின் எல்லைதனில் மாமுருகன் தன்சுவட்டால்
நற்பால சித்தர்க்கே நல்கினான் – அற்புதமாம்
தொட்டுத் தரும்ஸ்பரிச தீட்சையினால் நல்வடிவுக்
கிட்ட மணக்கோலங் காண்.

மற்போரின் முடிவில் முருகப் பெருமான் தனது திருவடிச் சுவட்டினைப் பாலசித்தருக்குத் தந்து, அற்புதமாய் அவரைத் தொட்டு ஸ்பரிச தீட்சை அளித்தான். அதன் விளைவாக, தூய வடிவினரான பாலசித்தருக்கு முருகனின் திருமணக் கோல வழிபாட்டுக் காட்சி கிட்டியது.

15 தனக்குக் கிடைத்த திருக்காட்சி பாரில்
அனைவருக்கும் கிட்டவே எண்ணி – மனமுவந்து
மயில மலையினிலே மாமணக் கோலமதாய்
ஐயனை நிற்கவேண்டா(ர்) ஆங்கு.

தனக்குக் கிடைத்த இந்த அற்புதத் திருமணக் கோலத் திருக்காட்சி இவ்வுலகில் உள்ள மக்கள் அனைவருக்கும் கிடைக்க வேண்டும் என்ற கருணையோடு, மயில மலையிலேயே அதே மணக்கோலத்தில் எழுந்தருளியிருக்குமாறு முருகனிடம் பாலசித்தர் வேண்டிக் கொண்டார்.

16 மக்கள்பே றில்லா மனக்கவலை யோடு,வந்த
தக்கவம்மை யாரும் கணவனுடன் – மிக்கநல்
பாலசித் தன்பாதம் பற்றிப் பணிந்துநின்றார்
ஞாலத்தின் இன்பம் நயந்து.

பிள்ளைப்பேறு இல்லாத பெரும் மனவருத்தத்துடன் வந்த தகுதிமிக்க அம்மவை என்னும் பெண்மணி, தன் கணவனுடன் வந்து பாலசித்தரின்

*திருவடிகளைப் பற்றி, உலகியல் இன்பமான குழந்தைப்பேறு வேண்டிப் பணிந்து நின்றார்.*

***17 சித்தர் அளித்த செழுங்கள்ளிப் பாலமுதை***
***நித்தமும் உண்டந்த நேரிழையாள் – ஒத்த***
***கருவுற்று நல்ல கனிமகவைப் பெற்றாள்***
***குருவருளால் இன்பம் குயிற்று.***

*அங்ஙனம் வேண்டிய அம்மவைக்குப் பாலசித்தர் கள்ளிப்பாலின் பிரசாதத்தை அளித்தார். அதனை நாள்தோறும் உண்ட அந்தப் பெண், குருவருளால் இன்பம் பெருகக் கருவுற்று ஒரு நல்ல ஆண் மகவைப் பெற்றெடுத்தாள்.*

***18 பெற்ற மகவைத் தவமுனிவன் ஞானமுடன்***
***உற்றே உபதேசம் தானளித்து – நற்றவத்தின்***
***சீடனாக்கிக் கொண்டார் சிவஞான பாலயனாய்***
***ஆடல் முருகன் அவன்.***

*அப்படிப் பிறந்த குழந்தைக்குப் பாலசித்த முனிவர் தகுந்த ஞான உபதேசம் செய்து, தனது முதன்மைச் சீடராக ஆக்கிக் கொண்டார். அவரே 'சிவஞான பாலய சுவாமிகள்' ஆவார். அவர் முருகனின் அம்சமாகவே தோன்றியவர்.*

***19 கந்தனே வந்திங்கு காசினியைக் காப்பதற்குச்***
***சந்தமே வுற்ற சிவஞானி – அந்தமில்லாக்***
***கோலமுடன் தோன்றிக் குருபரம்,ப ரைவளர்த்த***
***பாலசித் தன்சீடன் காண்.***

*முருகப் பெருமானே இவ்வுலகைக் காப்பதற்காகச் சிவஞானியாகத் தோன்றி, எல்லையற்ற ஞானக் கோலத்துடன் குருபரம்பரையை வளர்த்தெடுத்தார். அவரே பாலசித்தரின் அரும்பெரும் சீடர் ஆவார்.*

***20 சந்நியா சம்,தந்து நல்லுப தேசமுடன்***
***நன்னெறியும் காட்டி நயமுடனே – தன்வழியில்***
***ஓரமிசம் சேர்ந்திடச் செய்தாரே பாலமுனி***
***சீரமிசம் பெற்ற குரு.***

*தன் சீடருக்குத் துறவறம் (சந்நியாசம்) தந்து, நல்வழியைக் காட்டி, தனது தெய்வீக அம்சத்தில் ஒரு பகுதியை அவரிடம் பதியச் செய்து, 'சிவஞான பாலய தேசிகன்' என வாழ வாழ்த்திய பெருமை பாலசித்த குருவையே சாரும்.*

***21 ஆனித் திருவா திரை,நாளி(ல்) அன்புடையான்***
***மேனி சிலிர்க்கவே மெய்ப்பொருளாம் – ஞான***
***மணக்கோல நாதன் மருகன் வலப்புறம்***
***இணக்கமாய் நின்றாரே நயந்து.***

ஆனி மாதத்துத் திருவாதிரை நன்னாளில், தன் உடல் சிலிர்க்க, தான் பூஜித்து மகிழ்ந்த மணக்கோல முருகப் பெருமானின் திருமுன்னிலையில் (வலப்புறத்தே / தெற்குப் பக்கத்தில்) பாலசித்தர் இணக்கமாகச் சிவயோக சமாதி கூடினார்.

*22 பாலசித்த மாமுனி பாத மலரிணையை*
*ஞாலமக்கள் நாளும் தொழுதிடின் – சீலமுடன்*
*வேதனை தீரும்; வினையாவும் மாய்ந்துபோம்;*
*சாதனை சேரும் தகைந்து.*

பாலசித்த மாமுனிவரின் திருவடித் தாமரைகளை உலக மக்கள் நாள்தோறும் வணங்கி வந்தால், அவர்களின் மனவேதனைகள் யாவும் நீங்கும்; தீவினைகள் அழியும்; வாழ்வில் சாதனைகளும் நற்பண்புகளும் வந்து சேரும்.

*23 தெய்வமொன்றே யென்றே செகத்தா(ர்) அறிந்திடச்செய்(து)*
*உய்ய வழிவகுத்த ஓங்குஞான– மெய்யன்நல்*
*பாலசித்த நாதனைப் பற்றினால் நெஞ்சமே*
*சாலப் பெரும்புகழ் காண்.*

"தெய்வம் ஒன்றுதான்" என்ற உண்மையை உலகத்தார் அறியச் செய்து, அவர்கள் நல்வாழ்வு பெற வழிவகுத்த மெய்ஞ்ஞானியாகிய பாலசித்தரை நெஞ்சாரப் பற்றிக் கொண்டால், நமக்கு மிக உன்னதமான புகழும் நன்மையும் உண்டாகும்.

*24 பாலை உணவாகக் கொண்டே பரம்பரையாய்*
*ஞாலமதில் நீவாழ்வாய் நாதனே – சீலமுறும்*
*ஸ்ரீமத் சிவஞான பாலய,சு வாமிகள்*
*மாமடமென் றே,திகழும் காண்.*

"நீ கள்ளிப்பாலை உணவாகக் கொண்டு சீடப் பரம்பரையோடு வாழ்வாயாக; இத்திருமடம் 'ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் திருமடம்' என வழங்கும்" என்று பாலசித்தர் அருளியபடியே இத்திருமடம் இன்றும் திருக்கயிலாய பரம்பரை மயிலம் பொம்மபுர ஆதீனமாகச் சிறப்புற்றுத் திகழ்கிறது.

*25 ஆதி சிவஞானி யென்றே அகிலமெல்லா(ம்)*
*ஓதிப் புகழு(ம்) உயர்குருவாம் – தீதில்*
*இரண்டாம் பட்டத்(து) குருமகா,சந் நிதானம்*
*பரமனென்று நெஞ்சே நினை.*

'ஆதி சிவஞானி' என்று உலகமெல்லாம் போற்றப்படும் பெருமை வாய்ந்த, குற்றமற்ற இரண்டாம் பட்டத்து குருமகா சந்நிதானம் வேறு யாருமில்லை

பரம்பொருளாகிய சிவபெருமானே என்பதை நெஞ்சமே நீ எப்போதும் நினைப்பாயாக.

*26 அருமரபில் தோன்றி அறந்தழைக்க இன்றும்*
*தரும நிருவாகம் தாங்கிப் – பெருமையுடன்*
*ஆட்சி புரிகின்றார் இருபதாம் பட்டத்துச்*
*மாட்சிமிகு ஞான குரு*

இந்த அரிய குருபரம்பரை மரபில் தோன்றி, அறநெறிகள் தழைக்கும் பொருட்டு, தர்ம நிருவாகப் பொறுப்பேற்றுப் பெருமையுடன் அருளாட்சி புரிந்து வருகிறார் தற்போதைய மாட்சிமை பொருந்திய ஞானகுருவாகிய இருபதாம் பட்டத்து குருமகா சந்நிதானங்கள் அவர்கள்.

*27 தொன்மை மரபினிலே தோன்றி யருளாட்சி*
*நன்மையுடன் செய்யும் நயவாணன் – நன்மைசேர்*
*இருபதாம் பட்டமாம் ஈசன் குருமகா*
*சந்நிதானம் வாழ்க தழைத்து.*

தொன்மையான இந்த ஆன்மீக மரபில் தோன்றி, மக்களுக்கு நன்மைகள் பல செய்து வரும் நயமிக்க சிவபெருமானின் திருவடிவமாக வீற்றிருக்கும் இருபதாம் பட்டத்து குருமகா சந்நிதானம் அவர்கள் பல்லாண்டுக் காலம் வாழ்க வாழ்க என வாழ்த்துகிறோம்.

*28 சீர்சால் இருபதாம் பட்டத்துச் சாமிகளால்*
*பாரில் புகழப் படுகின்ற – பேரார்ந்த*
*'பாலசித்தர்' மாத இதழும் வெளியாகிக்*
*காலமெல்லாம் காக்கும் கலந்து.*

சிறப்புமிக்க இருபதாம் பட்டத்துச் சுவாமிகளின் முயற்சியால், உலகமே போற்றும் வண்ணம் 'சங்குகன்ன பாலசித்தர்' என்னும் ஆன்மீக மாத இதழ் வெளியாகி, வாசகர்களின் நெஞ்சோடு கலந்து அவர்களைக் காலமெல்லாம் நல்வழியில் காத்து வருகிறது.

*29 நாதனாரின் 'சங்குகன்ன பாலசித்தர்' மாதஇதழ்*
*ஓதுபவர் நெஞ்சில் உவகையூட்டும் – தீதகற்றி*
*மெய்ஞ்ஞானப் பாதையினை மேதினியில் காட்டுமே*
*எஞ்ஞானம் நல்கிடும் ஈது.*

குருமகா சந்நிதானங்கள் வழங்கும் 'சங்குகன்ன பாலசித்தர்' மாத இதழானது, அதனை வாசிப்பவர்களின் மனதில் பேரானந்தத்தை ஊட்டும்; தீமைகளை நீக்கி, உலகிற்கு மெய்ஞ்ஞானப் பாதையைக் காட்டி எல்லா அறிவையும் நமக்குத் தரும்.

*30 கயிலைக் கணநாதன் சங்குகன் னன்,தன்*
*மயிலை அவதார மாண்பை – உயிருருகிப்*
*பாடுமவர் நெஞ்சில் பரமசிவன் வந்தமர்வான்*
*கூடுமேதான் பேரின்பக் குன்று.*

கயிலை நாதனின் பூதகணமான சங்குகன்னரின் மயிலை அவதாரப் பெருமைகளை (பாலசித்தர் வரலாறு) எவர் மனமுருகிப் பாடுகிறாரோ, அவர் நெஞ்சில் சிவபெருமான் குடிபுகுவார்; பேரின்பப் பெருவாழ்வு சித்திக்கும்.

*31 ஈதமர்ந்த பொம்மபுரத்(து) ஆதீன முதற்குரவர்*
*பாதமலர் போற்றிப் பரவினால் – ஓதரிய*
*சித்துகளால் தீவினைகள் தீர்த்துநமைக் காப்பாரே*
*முத்திறமும் வாழ்த்தும் முனி!*

பொம்மபுர ஆதீனத்தின் முதல் குருவாகிய பாலசித்தரின் திருவடித் தாமரைகளைத் துதித்துத் தொழுகின்றவர்களின் தீவினைகளை, அவர் தமது அரிய சித்துக்களால் போக்கி நல்வாழ்வு தருவார். அவர் மூவுலகும் போற்றும் முனிவராவார்.

*32 மயிலத் திருமடத்து மாமுனிவர் பாதம்*
*நயமுடன் போற்றும்,நன் னாளில் – துயரகற்றும்*
*பாலசித் தர்,குரு பூசையினை ஏத்துவார்க்குக்*
*கால பயமிலையே காண்.*

மயிலம் திருமடத்து மாமுனிவர்களின் திருவடிகளைப் போற்றும் இந்த நன்னாளில், நம் துயரங்களை நீக்கும் பாலசித்தரின் குருபூசைப் பெருவிழாவைக் கொண்டாடி வழிபடுபவர்களுக்கு எம பயம் (மரண பயம்) நீங்கும்.

*33 வாழ்க குருபூசை; வாழ்க திருமடத்து*
*நாதனாம் பாலசித் தர்,நாமம்; – சூழ்க*
*இருபதாம் பட்டத்து நாத(ர்) அருளாட்சி;*
*தருகவே ஆன்ம தவம்.*

ஸ்ரீ பாலசித்தரின் குருபூசை வைபவம் வாழ்க! திருமடத்து முதல்வராகிய பாலசித்தரின் திருநாமம் வாழ்க! தற்போதைய இருபதாம் பட்டத்துக் குருமகா சந்நிதானத்தின் அருளாட்சி எங்கும் சூழ்க! அது நமக்கு ஆன்ம தவத்தின் பயனைத் தருவதாக!

# சிவஞானி முழக்கும் சிறுபறை

**முனைவர் க. இலட்சுமிதேவி**
உதவிப் பேராசிரியர், தமிழாய்வுத்துறை
ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் தமிழ், கலை
அறிவியல் கல்லூரி - மயிலம்

*கடவுள், அரசர், வள்ளல்களில் ஒருவரைக் குழந்தையாக உருவகப்படுத்திப் பாடுவது பிள்ளைத்தமிழ் என்னும் சிற்றிலக்கியம். இவ்விலக்கியம் ஆண்பாற் பிள்ளைத்தமிழ், பெண்பாற் பிள்ளைத்தமிழ் என இரு வகைப்படும். சிறுபறை என்பது ஆண்பால் பிள்ளைத் தமிழில் வரும் பருவங்களில் ஒன்று. குழந்தை தன் மென்மையான கைகளைக் கொண்டு அளவில் சிறிய பறையை அடித்து ஒலியெழுப்பி மகிழ்ந்து விளையாடும் பருவத்தைக் குறிக்கிறது. இக்கட்டுரை சிவஞானி என்னும் ஞானக்குழந்தை மயிலமலையில் இருந்து சிறுபறையை முழக்கி விளையாடும் ஆடலானது சிறுபிள்ளைகளின் விளையாட்டாக அமையாமல் வீரசைவ கொள்கைகளை முழக்குவதை எடுத்துரைக்க முயல்கிறது.*

**மயிலமலை படிகள் கூறும் மந்திரம்**

*ஓம் என்னும் பிரணவத்தின் பொருளைத் தன் தந்தைக்கு உபதேசித்தவர் முருகப் பெருமான். அவர் கலியுகத்தில் மக்களின் மனக் கவலைகளை நீக்குவதற்காகவே நிலைத்த சிறப்புடைய உயர்ந்த மயிவமலையில் எழுந்தருளியுள்ளார். " மயிலத்து முருகா நீ மனத்தகத்துள் வந்திடுவீர் " என்று கந்தகுரு கவசத்தில் பாடிமகிழ்கிறார் சாந்தானந்த சுவாமிகள்.*

*அடியார்களும் பக்தர்களும் தமது உடல் பிணியும் உள்ளப் பிணியும் நீங்க பிறப்பிலியாகிய முருகப்பெருமானை வணங்குவதற்காக மயிலமலையின் படிகட்டுகளில் ஏறிச்செல்ல முற்படுகின்றனர். அப்பொழுது அவர்களது செவிகளுக்கு ஒவ்வொரு படியும் "சரவணபவ" என்னும் ஆறெழுத்து மந்திரத்தைப் பக்தியோடு உச்சரித்துக்கொண்டிருக்கும் ஒலிகேட்கிறது. அவர்கள் மேற்கொண்டு படிகளில் ஏறிச்செல்லாமல் தமது அறியாமையையும் படிகளின் ஞானத்தையும் கண்டு அஞ்சி அம்முருகப்பெருமானையே அழுதபடி வணங்கி நின்றனர். அப்பொழுது முருகப்பெருமான் பேரருளோடு, பக்தர்களின் உள்ளத்தில் கருணை வடிவமாக அதாவது சிவஞானியாகிய குருநாதரின் வடிவத்தில் எழுந்தருளி தனது வீரக்கழல் அணிந்த திருவடிகளைப் பக்தர்களின் நெஞ்சில் ஆழப்பதித்து ஆட்கொண்டான். அன்று திருப்பெருந்துறையில்*

மாணிக்கவாசகர் தலைமீது சிவபெருமான் தமது திருவடி வைத்து ஆட்கொண்டது போலவே நாயினும் கடையனாகிய என்னை தடுத்தாட்கொண்ட இந்த உன்னத நிலைக்குப் பிறகு வாழ்வில் வேறு எதுவும் தேவையிருக்காது.

**ஆறுபடை வீடுகளை வெல்லும் மலை**

நீர்வளம் சூழ்ந்த திருத்தணிகை மலை, மேகங்கள் தவழ்ந்து விளையாடும் திருப்பங்குன்றம், குரங்கினங்கள் கொஞ்சி மகிழும் பழமுதிர்ச்சோலை, கடலும் முருகனின் புகழ்பாடும் திருச்செந்தூர், தவம் நிறைந்த பழனிமலை - தந்தைக்கு உபதேசம் செய்த சுவாமிமலை ஆகிய ஆறுபடைவீடுகளையும் பக்தர்கள் தேடிச் சென்று போற்றி வழிபட அவர்களுக்கு விரைவாகக் காட்சி தருவதற்காகவே, மயில்மீது ஏறிவரும் முருகப்பெருமானே தாமாக முன்வந்து தொன்மையான புகழ்மிக்க எல்லா படைவீடுகளையும் விட இக்கலியுகத்தில் ஆன்மீக ஆற்றலால் பகையைக் கடியும் பெருமை மிக்க மயிலமலையில் வீற்றிருக்கும் 20 - ஆம் பட்டம் சிவஞானியாகிய குருவின் திருவடிகளையே துணையாகக் கொள்வீர்களாக என்று பக்தர்களுக்கு வழிகாட்டினான். அத்திருவாக்கின் படியே பக்தர்கள் குரு சிவஞானியின் திருவடிகளைத் தஞ்சமெனக் கொண்டு வேண்டிநிற்கிறேன். நீயே எனக்கு என்றும் துணையாவாய் !

**திருமாலும் பிரம்மனும் வியக்க வினையறுக்கும் சிவஞானி**

உயிர்களின் தலையெழுத்தை எழுதும் பிரம்மனும், காக்கும் கடவுளான திருமாலும் வியக்கும் வண்ணம் பக்தர்களின் வினையினை வேரறுக்கும் மயிலமலைமுருகனும் அடியார்கள் தவறிழைக்கும் போதெல்லாம் உள்ளத்தில் நுழைந்து தடுத்தாட்கொள்ளும் பாலசித்தரும் மிக விரைவாக என்னுள் புகுந்து மனதளவில் வீற்றிருக்கிறார்கள்.

அடியவர்களைப் பாசக்கயிறுகொண்டு கட்டி இழுத்துச் செல்லக் கோபத்துடன் வரும் கூற்றுவனும் இவர் எமனைத் தன் காலால் உதைத்துத் தள்ளிய சிவபெருமானின் அடியவர் என்று அஞ்சி நெருங்கி வராமல் சென்றுவிடுவார். சிவஞானியே துணையாக இருக்கும் காரணத்தால் எங்களுக்குத் துன்பம் ஏதும் வருவதில்லை. உன்னைத் தியானித்து மதிக்கும் சான்றோர்களின் நெஞ்சமாகிய கோயிலில் உதித்தருளும் பரம்பொருளே ! உமது திருக்கரங்களால் திருநீற்றினை அள்ளி வழங்கி எங்களது பிறவி வினைகளை அறுத்தருளும் மாணிக்கமணியே நீ சிறுபறை முழக்கியருள்வாயாக.

**வீரசைவ முழக்கம்**

*பிறப்பொழிய படியேற படிகளெலாம் ஆறெழுத்தை*
*பெருமையுடன் செப்பதன்றோ*

***மறப்பிலியான் படிதனிலே பதம்வைக்க அஞ்சியேநான்***
***மனமுருகித் திகைக்கலுற்றேன்***
***மயிலவனைப் பணிந்தேதான் விழிநீரும் பொங்கிடவே***
***மலரடியைத் துதித்துநிற்க***
***கறப்பிலியாம் பெருமானும் கனிவுடனே என்னஎ்ளே***
***கருணியுன்றன் வடிவாக***
***கழலடியைப் பதித்தானே கதிவேறும் உண்டோதான்***

என்ற பாடலில் மயில மலையில் உள்ள கல்லும்,மண்ணும் கூட இறையுணர்வு பெற்று முருகப்பெருமானின் ஆறெழுத்து மந்திரத்தைச் சொல்கிறது என்றால், குறைந்த வாழ்நாளும் பல் பிணிகளும் உடைய மனிதர்கள் தமது வல்வினையைப் போக்கிட இறைவனையும், குருவையும் வணங்க வேண்டும். வணங்கினால் கருணை வடிவாக உள்ள சிவஞானி தம்மையே தந்து அருள்வான் என்பதை பறையறைந்து முழக்குகிறார்.

திருச்செந்தூரில் மண்ணாகவும், பழமுதிர்ச்சோலையில் மரமாகவும், திருத்தணிகையில் கருங்கல்லாகவும், சரவணப் பொய்கையில் பூவாகவும் பிறக்க வேண்டும் என்பது முருக அடியார்களின் விருப்பம். ஏனென்றால் முருகப்பெருமானுக்குரிய ஆறுபடைவீடுகளும் ஒவ்வொரு வகையிலும் தனித்துவமானவை. மனிதர்களின் அகத்தில் பற்றி படர்ந்து இருக்கும் அறியாமையை வேரோடு அறுத்து எறியும் திருச்செந்தூர், உயிர்களுக்கு ஞானத்தை வழங்கும் பழனி மலை பிரணவ உபதேசம் கிடைக்கும் சுவாமிமலை உலக இன்பங்களைத் துறந்து மன அமைதியைத் தரும் திருத்தணி மாங்கல்ய வாழ்வு தரும் திருப்பரங்குன்றம் முருகனின் திருவிளையாடல்கள் நடந்தேறிய பழமுதிர்ச்சோலை. இங்கெல்லாம் பக்தர்கள் இறைவனைத் தேடிச்சென்று வழிபட்டு முருகப்பெருமானின் அருளைப்பெறுகின்றனர். ஆனால் சிவஞானி எனும் குழந்தையோ எல்லா மலைகளையும் தம் ஆன்மீக ஆற்றலால் வெல்லும் மலை மயிலமலை. அங்கு அருளாட்சிசெய்து வரும் 20 - ஆம் பட்ட சிவஞானியின் திருவடிக்கமலங்களையே தஞ்சமெனகொள்ளுங்கள். அப்படி செய்தால் வாழ்வில் வெற்றி பெறலாம் இது உறுதி என்று பறையறைந்து அறிவிக்கிறார். இதனை

***“தொல் புகழால் என்றனையே***
***வெல்லும் மலை மயிலமலை***
***வெற்றிமலர்த் திருவடிகள் துணைகொளச் சொன்னானே“***

என்ற பாடல் அடிகள் உணர்த்தகின்றன. பிரம்மனும் திருமாலும் தன்னிலை மறந்து மயங்கும் அளவுக்கு நறுமணம் நிறைந்த சோலைகள் சூழ்ந்த அழகிய

மலை மயிலமலை. அம்மலையில் குடியிருக்கும் வேலவரும், உயிர்கள் செய்வதறியாது திகைக்கும் பொழுதும் தடம் மாறித் தவறிவிழும் போதும் தடுத்தாட்கொண்டு அருள்பாலிக்கும் பாலசித்தரும், அவர்வழி வந்த 20 - ஆம் பட்ட சிவஞானியும் விரைந்து பக்தர்கள உள்ளத்தில் புகுந்து விடுவர். எனவே கொடிய கூற்றுவனும் இங்குவரும் பக்தர்களது தலைவன், எமனையே காலால் உதைத்துத் தள்ளிய சிவபெருமான் ஆகையால் இவர்களிடத்தில் நமது ஆட்டம் பலிக்காது என்று ஓடிப்போய் விடுவான் என்று கூறுவதிலிருந்து 20 - ஆம் பட்டம் சிவஞானி மரணபயத்தைப் போக்கி நிறைந்த ஆயுளைத் தருவார். அவரது திருக்கர திருநீற்றினைப் பெற்று வாழ்வில் பயமின்றி வாழுங்கள் என்று பறையறைந்து முழக்குகிறார்.

## மயிலம் திருத்தலப் பாடல்

*வளம் கொள் பொம்மமா புரத்தினில் அமைந்தநன்*
*மடாலயத்து இடைவைத்துக்*
*கிளர்ந்த இத்தலம் பிரமமாபுரம் எனக்*
*கிளர்க என்று உரைத்து அப்பால்*
*விளங்குபாலசித்தன் தனோடு அருள்மயில்*
*வெற்பில் வந்து ஒருசூரன்*
*உளங்களிக்க ஆடியபடி தேவிமார்*
*உடன் அமர்ந்தனன் மாதோ*

*– மயூராசல புராணம், சிவஞான தேசிக பிரதாபம்.14*

பொம்மபுரத் திருமடத்தில் இனிதுறைந்த பாலசித்தரோடு அருள் மயில மலையில் வந்து சூரபதுமனின் உள்ளம் மகிழும்படி வள்ளி தெய்வானையருடன் இனிதமர்ந்த மயிலம் முருகப்பெருமானைப் போற்றி வணங்குகிறேன்.

அதாவது முருகப்பெருமான் பொம்மபுரத்தை 'பிரமமாபுரம்' என வாழ்த்தி, பாலசித்தருக்கு அருளி, பின்னர் சூரபத்மன் மகிழுமாறு மயில் வாகனத்தில் ஆடி, வள்ளி-தெய்வானையுடன் மயிலம் திருமடத்தில் மணக்கோல மாமுருகனாக வீற்றிருந்து அருள்பாலிக்கின்றார் என்பது இப்பாடலின் பொருளாகும்.

# கருணை வடிவான கந்தா.

**கலைமாமணி, பாவலர் கோ. கலியபெருமாள்,**
பெத்துசெட்டிப்பேட்டை, புதுச்சேரி - 8
தொடர்பு எண் 8248219029

*அலைகடலில் துரும்பாகி அலைக்கழிக்கப் பட்டாலும்*
*அன்றாடம் முருகனையே தொழவும் உற்றேன்.*
*விலைகொடுத்து வேண்டியன பலபெற்றேன் என்றாலும்*
*வினையகலத் திருவடியைத் தொழவும் நின்றேன்.*
*வலைவிரித்துப் பல கொண்டேன் என்றாலும் முருகோனே!*
*வயப்பட்ட தீமைதனில் வீழ்ந்து ஒன்றேன்.*
*நிலைகுலையும் செயல்புரிந்தேன் என்றாலும் மணவாளா,*
*நினதருளால் திருத்தமுறு வழியும் கண்டேன்.*

*கலைபலவும் மலிந்துவளர் கண்ணியத்தார் போற்றுகின்ற*
*கவின்மயிலத் தமர்ந்திட்ட கந்த வேலோய்!*
*சிலைவடிவாய் மணாளனாகச் சீர்கூட்ட அமைந்திட்ட*
*சிற்பஜோதி யாய்நின்ற. மங்கை பாகா!*
*தலையாய தத்துவத்தைத் தந்தைக்கே உபதேசித்த*
*தகப்பன்சா மியெனும்பெ யருற்ற கந்தா!*
*நிலைத்தஅன்பும் நீள்பரவும் புகழாலும் நிலைக்கக்காண்*
*நின்றோங்கும் சுவாமிமலை காணும் தேவே!*

*அமரரிடர் தீர்த்திடவே அமர்புரிய அம்பிகைக்கை*
*அருள்வேலைப் பெற்றுவென்சிங் கார வேலோய்!*
*குமரனிவன் என்ன செய்வான் என்றெண்ணும் அசுரரவர்*
*குன்றுமதி ரக்குமையக் காண்நின் றோனே*
*இமயகிரி வாசனின்பு தல்வாபா வசித்தருமே*
*இருந்து கண்ட மயிலாச னப்பெம் மானே!*
*கமழ்கின்ற வீரசைவம் காக்கஇரு பதாம் பட்டம்*
*கருத்துடைய திறத்தாலே யெய்யும் சீரே!*

# மாமயில வேலவன் திருப்பள்ளியெழுச்சி

**தா. வேலூர். கோ, சீதாராமன்,**
திருவண்ணாமலை மாவட்டம். தொடர்பு எண் 9443886196, 6369064909.

எண்சீர் ஆசிரிய விருத்தம்

1. *அன்பே சிவமென ஆகிய ஈசனார்*
*அருளிய மகவே! அறுபடை தலைவனே!*
*இன்பே அருளிடும் இயல்சிவ ஞானியர்*
*எழில்தரும் மலைமேல் எழுந்துள முருகே!*
*நன்பே ராதவன் நலம்தர எழுவான்*
*நனிகதிர் உலகு ஒளிபடும் முன்னே,*
*பொன்னே! மயிலம் தமிழ்தரும் வேளே!*
*போற்றினோம் பள்ளி எழுந்தரு ளாயே!*

2. *அடியவர் யாவரும் அரகரா என்றிட,*
*ஆதவன் அம்புலி சிவசிவ என்றிட,*
*பிடியவர் வள்ளி தெய்வானை தன்னுடன்*
*பிடிபடா பிரணவ பொருளுரை வேலவா!*
*கடிமலர் வண்டுகள் மொய்த்திடும் முன்னே*
*களிதார் அணியும் மயில தயாபரா!*
*அடியவர்க் கருளிட ஆலயம் எழுக!*
*அண்ணலே! பள்ளி எழுந்தரு ளாயே!*

3. *வாணி ஒருபால் இன்னிசை மீட்டிட,*
*வண்டுகள் ஒருபால் மலர்மிசை பாடிட,*
*காணிய கதிரவன் ஒளிமிசை மீட்டிட,*
*கங்கை காவிரி புனல்கொடு பாடிட,*
*மாணிய பண்புகள் மனமிசை மீட்டிட*
*மங்கல பாலயர் உன்னருள் வேண்டிட,*
*பேணிட எழுகவே மயிலவேள் பெரும!*
*பெரியோய்! பள்ளி யெழுந்தரு ளாயே!*

4. *குயில்கள் பாடுது கோழிகள் கூவுது,*
*குணதிசை கதிரவன் செவ்வொளி பரவுது,*
*மயில்கள் ஆடுது மந்திகள் குதிக்குது,*
*மாவினம் துள்ளுது சிவவொளி பரவுது,*
*பயிலும் மயிலம் அரகரா ஒலிக்குது*

*பரமா! முருகா! எழிலா! வேலவா!*
*உயிருளம் நிறைய உன்னருள் வாய்த்திட*
*ஓங்குசேய் பள்ளி யெழுந்தரு ளாயே!*

5. *துன்பம் அறுத்துநல் தூய்மையை விதைப்போய்!*
*துயர்படா ஞான ஒளிதனைச் செலுத்துவோய்!*
*அன்புடன் பண்பும் ஆன்றபல் லொழுக்கமும்*
*ஆற்றலின் கல்வியும் அளித்திட வல்லோய்!*
*என்பால் மும்மல அழுக்கினை அகற்றி,*
*இதயம் வந்தருள் மயிலவேள் பெரும!*
*உன்பால் உள்ளம் ஒன்றிடச் செய்து*
*ஓங்கிடப் பள்ளி யெழுந்தரு ளாயே!*

6. *உயர்திணை அஃறிணை வானவர் நரகர்கள்*
*உலகதும் கோள்களும் சுற்றும் வலம்வரும்!*
*பெயர்சொலி அழைக்கும் பித்துபோல் ஆடிடும்;*
*பொம்ம புரத்துச் சங்கு கன்னரும்,*
*உயர்மலை மயிலம் உன்னுடன் கலந்து,*
*உன்பணி பேணுவார்க் குறுதுணை ஆவதால்,*
*துய்யனே! அடியார்த் தொண்டனே! முருகே!*
*தொடர்ந்திடப் பள்ளி யெழுந்தரு ளாயே!*

7. *அருண கிரியார் பாடிய எழிலனே!*
*அணிமயில் விட்டுபோய் அருளிய முருகனே!*
*உருகிடும் மெழுகென வள்ளலார் துதித்தவா!*
*உயர்மலை குன்றுவாழ் சிவன்சேய் இளையவா!*
*பெருகிய சிந்தையில் பாலயர் பரவிடும்*
*பேரருள் மயிலம் எழுந்தகல் யாணனே!*
*அருகினில் யான்வர உனைத்தொழத் துரிதமாய்*
*அறுமுகா! பள்ளியெழுந்தரு ளாயே!*

8. *ஓதுவார் இன்னிசை ஓங்கி ஒலித்திடும்;*
*ஓங்கு மலையெலாம் காவடி ஆடிடும்;*
*காது வள்ளையர் திருப்புகழ் பாடிடும்*
*கல்யாண நல்லிசை எங்கும் எழுந்திடும்;*
*சூது அகற்றிடும் சொர்க்கமாம் மயிலம்,*
*சுவைதரும், ஈகையாய் அருள்தரும், வேலால்,*
*தீது போக்கிடும், தென்றலாம் முருகே!*
*துதிக்கவே பள்ளி யெழுந்தரு ளாயே!*

9. *தெள்ளிய செந்தமிழ் துள்ளிட புரக்கும்*
*தெளிந்தநல் அறிவராம் பாலயர் மயிலம்*
*அள்ளிட அருளை அடியார்க்கு ஈந்து*
*ஆதியும் அந்தமும் இல்லா ஈசர்போல்,*

கள்ளியின் பாலும் சிவகணர்க் கமுதாய்க்
கனிந்திடச் செய்த உன்புகழ் வியப்பை
வள்ளலே எண்ணினேன் வந்தெனக் கருளி
வலம்பரப் பள்ளி யெழுந்தரு ளாயே!

10. மானிடப் பிறவியை மண்மீது காணும்யான்
மங்கல உன்முகம் கண்டிட வேண்டுவன்!
ஆனிப்பொன் மேனிகாண் அழகனே! மயிலம்
ஆண்டிடும் வேலனே! உன்திரு வடியை
ஊனினன் யான்தான் உலகுள காலம்
உன்னருள் பெற்றிடப் பணிகுவேன் என்னை,
ஆனினக் கன்றுபோல் காத்தருள் சரணம்
அளிக்கவே பள்ளி யெழுந்தரு ளாயே!

**மயிலவேலன் திருவெம்பாவை**

வெண்டளையான் வந்த எட்டித்தரவுக் கொச்சகக் கலிப்பா.

1. அன்பே சிவமென ஆகிய ஈசனின்
இன்பப் புதல்வன் எழிலோன் முருகனை
அன்பரும் தொண்டரும் தாள்தொழும் வேளினை
மன்னிய மாமயிலம் பாலய சித்தரின்
தன்னுளக் கோவில்கொள் பன்னிரு கையனை
இன்னேயாம் பாட எழுந்திராய்ப் பாங்கியே!
நன்னோ எழுதி! விரைகயென் பொன்னேநீ!
நின்னேதாள் வேண்டு! பரிசேலோர் எம்பாவாய்!.

2. ஆற்றல் அளவிலான் ஆதியந்தம் தாமிலான்
தூற்றலும் போற்றலும் உள்ளீடான், தொல்மயிலம்
ஏற்றுசங்கு கன்னர் எழுப்பிய நற்கோவில்,
கூற்று விரட்டும் சிவன்மகன் சேயோனும்
ஆற்றன் அறுமுகன் ஆக்கும் பரமகுரு
ஊற்றனை உள்ளுரைப்பார், ஏற்றனை ஆஷயாம்
காற்றனை, எழிலனை வைகாகி நல்விசாகிப்
போற்றனை ஏற்றுப் பரிசேலோர் எம்பாவாய் !

3. இன்னல் அறுத்து எழும்மயிலம் தான்நின்று
பன்னூல் பலகற்க பாரதிக்கும் மேலோங்கித்
தன்னூல் பிரணவம் தானறியா நான்முகனை
நன்விரல் சென்னிகொட்டி நானடக்கி வன்சிறையில்
என்னென்று வாண்மண் வியப்பெய்த செய்குருவன்
தன்புகழ்த் தானறியாய்! வாட்தடங்கண் மாதே நீ
நன்னனைத் தானறிந்து ஆறுமுகம் கண்டுதொழ
இன்னேசெல்; நல்ல பரிசேலோர் எம்பாவாய்!

PRGI No.TNTAM/25/A4155

4. ஈகை மறவாத நன்மனதும், எங்கெங்கும்
வாகை தனைச்சூடும் வீரமதும், கொல்லாமை
போகை மனம்விரட்டும் பைந்தமிழ் மாமயிலம்
வைகைவேல் தாள்பணிவாய் வள்ளல் முருகுதனைப்
போகை வருமுன்னே புந்திதனைத் தூயதுசெய்!
ஆகையான் ஆறுமுகன் கண்டு மகிழ்ந்திடுக!
தோகை மடமாதே! துள்ளும் மனமடக்கி
ஆகைதான் கைகொள்! பரிசேலோர் எம்பாவாய்!

5. உண்டில்லை என்று உலகவர்கள் ஓலமிட,
பெண்டுதன் பிள்ளை எனும் மாயை பித்ததனால்
உண்டு களித்து ஒருவேள் மயிலமலை
பண்டு சிவஞான பாலயர் திருமடத்தில்
மண்டு பிணிபோக்கும் கல்யாண வேல்முருகைக்
கண்டுதான் மாயை மலமறுக்கும் சேயோனை
வண்மை வழங்குகை பத்திரண்டு கொண்டவனைத்
தொண்டால் பரவு! பரிசேலோர் எம்பாவாய்!

6. ஊன்கொண்ட ஆவியவன் உள்ளோடும் எண்ணமவன்
தேன்கொண்ட இன்பமவன் தீம்பால் சுவையுமவன்
வான்கொண்ட ஏற்றமவன் வாழ்வுக்கு ஃகையவன்
தான்விட்டப் பண்பனவன் தாய்மயிலம் சேயுமவன்.
மான்கையன் பிள்ளைசேய் மங்கலத்தான் வேல்முருகன்
நான்விட்டார் தம்தொண்டை நாடுகின்ற அன்பனவன்
கூன்விட்டார் போற்றுவானை நீவிடுதல் ஆகாவே!
பொன்னேநீ போய்காண் பரிசேலோர் எம்பாவாய்!

7. எல்லாம் படைத்தழித்துக் காத்துத் தொழில்மூன்றும்
வல்லான் எனச்செய்யும் ஆதியந்தம் இல்லானின்
நல்லான் சிவன்மகனை நன்மயிலம் வாழ்மணியை
எல்லோரும் எண்ணி அறுமுகனைத் தாள்தொழுதுப்
பொல்லாத வாழ்வில் புனிதநிலை மேற்கொள்ளச்
சொல்தமிழில் கோடிபல நூல்முதற்குக் காரணமாம்
தொல்முருகை, நீராடிப் பங்குனிப்போய்ப் பார்ப்பாய்!
இல்லென்று கூறான் பரிசேலோர் எம்பாவாய் !

8. ஏணிவைத்து வானத்து ஏறிடுவேன் என்றெண்ணும்
ஆணிவேர் அற்ற அகவாழ்வு கொண்டவர்கள்
தூணி குறுகிடாராய், மெய்ஞானம் தானுணர்ந்தும்
காணிய பௌவக் கலங்கரையாம் சேய்தன்னைப்
பேணி நமைக்காக்கும் பெம்மானை மாமயிலம்.

வாணிவந்து யைந்தமிழை வாசிக்கும் குன்றுவிட்டுக்
கேணித் தவளையாய் வாழ்வாழ்வு நன்றாமோ?
பேணிப்போய்க் காணே! பரிசேலோர் எம்பாவாய்!

9. ஐந்தடக்கல் ஆற்றியபின், நான்குசால்பு தூண்நிறுவி,
காந்தும் மலம்மூன்றும் தானகற்றி, சேரிரண்டு
மாந்தும் வினையகற்றி மங்கலவேள் மாமயிலோன்
போந்து மகிழ்நீறு ஞானபால யர்பால்நீ
சாந்து அணிந்து சிவசண் முகத்தானின்
நீந்துதுணை கொண்டால்பின் ஒப்பேது முக்கண்ணன்
தீந்துகண் நெற்றிப் பொறிபிறந்தான் கண்டுய்க!
மாந்துதேன் பண்ணே! பரிசேலோர் எம்பாவாய் !

10. ஒன்றுள தெய்வமது நன்றுளது என்றறிய
ஒன்றிடுக! நன்மனம் ஓம்பிடுக! மாமயிலம்
பொன்றிடுக! புண்ணியன் கல்யாணன் மங்கலன்
என்றென்றும் வந்தருள செஞ்சேவல் மாமஞ்ஞை
தன்னிரு நற்றுணை ஒன்றுசேர் வேள்தன்னை
மன்னி மலர்த்தாள்தான் எண்ணித் தொழுதிட்டு
வன்னி அவன்தூய்மை வாய்க்கப்போம் வையமது
நின்னே அருள பரிசேலோர் எம்பாவாய்!

11. ஓங்காரம் எண்ணி, சரவணஓம் உள்வைத்து
ஆங்காரம் அற்று, அரகராஓம் என்றிட்டால்,
ரீங்காரம் இட்டு, மயிலவேல் வந்திட்டுப்
போங்காரம் போக்கிப் புகழ்நிலை நாட்டிநம்
தூங்காரம் வீட்டுத் துலங்கநன் நெஞ்சத்து
மாங்காரம் போக்கும் மகிழ்ந்திடுவாய்! போய்ச்சேர்ந்து
சாங்காரம் ஆசைச் சகடமது விட்டேகத்
தாங்காரம் காணும் பரிசேலோர் எம்பாவாய்!

12. ஔவை தமிழ்பெற்றான், சுட்டசுடா சொன்னவேள்,
கௌவை தமிழ்ஒலிக்கும் குன்றாம் மயிலமலைப்
பாவை இருவருடன் பைந்தமிழின் சாறருந்தும்
கைவை கனகவேல் நாட்டிக் களிக்குமிடம்,
தைவை தமிழ்ப்பொங்கல் காணும் முனிவரிடம்,
வைவை மனம்வைத்து வேள்தன் சரண்கேட்டுப்
பௌவை எழுந்தபொம்ம சித்தர் துணைகொள்ளின்
ஆவை அமுதாய்ப் பரிசேலோர் எம்பாவாய் !

13. காக்கும்நல் வேலேந்தும் கந்தவேள், துன்பமெலாம்
போக்கும்நல் வேலேந்தும் மாமயில ஞானவுச்சி

ஆக்கும்நல் அன்னைவேல் அம்கைகள் ஏந்துவேல்தான்
பூக்கயிவ் வையம்தான் காக்கத்தான் பூத்துளானை
நோக்கும்நல் கோடு மயிலம் நெடிதுசென்மின்!
ஆக்கும் அழித்தும் காக்கும்முக் கண்ணீசன்
வாக்கினைச் சொல்லியேபோ! வானழகுப் பொன்னேநீ!
தேக்காய்வுன் சோம்பல் பரிசேலோர் எம்பாவாய்!

14. பச்சைமால் காப்போனும் பார்படைக்கும் நான்முகனும்
மெச்சிடும் முக்கண்ண மேலோனும் ஆணவத்து
அச்ச அசுரர் பிசாசுபேய் அஃறிணையும்,
உச்சிகொள் ஞானி உயர்திணையர் எல்லாமும்,
கச்சைகொள் வள்ளிதெய்வா காந்தனின் மாமயிலம்
உச்சனை உள்ளத்துக் கொண்டு உயர்த்திகை
இச்சகம் தான்வணங்கப் பைங்கிளியே சென்றுநீ
மெச்ச வரம்கேள்! பரிசேலோர் எம்பாவாய்!

15. எட்டென்னும் திக்கும் அடரண்ட கோள்களோடு
வெட்டும்வான் மின்னல் இடியுடன் ஆழிதானும்
தொட்டுவேல் மாமயில சக்திவேல் மிக்கெதழச்
சட்டென்று பாயநனி சாகும் கொலைகளவும்;
கெட்டவாம் கள்ளும்பொய் காமமும் ஐந்தெலாம்
சிட்டென ஓடும்மிவ் சிற்றுயிர்க் குற்றதுணை
மட்டுத்தேன் கல்யாண மங்கலவேள் ஆம் நம்பு!
விட்டிடாய்! போய்காண் பரிசேலோர் எம்பாவாய்!

16. உத்தமன் ஓங்கும் மயிலம் உயர்கோடு
பித்தனின் சேயுளான் கல்யாணக் கோலத்தே
அத்தனை பாலயர் ஆக்கிய கோவிலில்!
சித்தம் தெளிவாக்கிச் செப்பு அரகராவே
முத்தையன் வந்து முழுக்காட்சி நெஞ்சினில்
வித்திட ஞான விருட்சமும் தோன்றுமவண்
பத்தினிப் பெண்ணே! சிவபிரம்மப் பொன்னே!
உத்தமனைக் காண்போய் பரிசேலோர் எம்பாவாய்!

17. செப்பிடச் சேய்பெருமை ஏழ்பிறப்புக் கொண்டாலும்
செப்பிடத் தானியவா செம்மயில மாமுருகன்
ஒப்பரிய ஓங்குபுகழ் உண்மை உலகறியும்!
அப்பெரிய அண்ணல் கணத்துள் அருளுகின்ற
இப்பெரிய ஞாலம் எழுகடல், கோள் யாவையும்
சுப்பன் படைப்பான் அடியவர்க்குச் சொர்க்கமதும்

தப்பாது தான்படைத்துக் காத்தருளும் வேள்பெரியன்
இப்புவிப் பாடும்! பரிசேலோர் எம்பாவாய்!

18. பற்றறுக்க! ஆசையே அல்லல் பிறப்புதனைப்
பற்பலவாய் உண்டாக்கும்! ஆதுபோய் வீடுபெற
பற்றுவைக்க நம்பரமன் சேய்மீதுப் பார்வாழ்வில்:
நற்றமிழ்வாழ் மாமயிலம் சித்தாந்தம் செப்புதல்காண்
குற்றம் குறைகளையும் கல்வி ஒழுக்கநெறி
வற்றா சிவஞானச் சித்தசங்கு கன்னரருள்
பெற்றுவேள் பற்றுபெண்ணே! பாவம்போம்! பாவாய்நீ
ஏற்று! எழும்போ! பரிசேலோர் எம்பாவாய்!.

19. கங்கை தலைகொண்டான், கார்மேக வண்ணனாய்ச்
சங்கைகை கொண்டான், பிரணவம் சொல் பெம்மானை
அங்கமெனும் பங்கயம் ஆவியாம் சேயோனைத்
திங்கள் முகத்தானை ஆறுமுக அன்பரசை.
பொங்கமுது தங்கு மயிலத்தை ஆள்வோனை:
அங்கயற்கண் ஆரணங்கே! அல்லல் களைந்திடநீ
இங்கு மயிலவேள் தன்னைத்தான் வேண்டிச்செல்
அங்குச் சரண்கொள்! பரிசேலோர் எம்பாவாய்!

20. அஞ்சேல் எனவபயம் அன்பர்க்கு யாமிருக்க
நெஞ்சில் பயம்ஏன்? என்அன்பர் உள்ளருளும்
அஞ்சனக்கண் சக்திமகன் அம்மயிலம் கல்யாணன்
மஞ்சம் மகிழ்வள்ளி தெய்வானை நாயகனைத்
தஞ்சம் அடைந்திடுவாய்! தங்க மகளே நீ
சஞ்சலங்கள் போக சிவஞான பாலயரின்.
கொஞ்சும் நல் நீறணிந்து அக்னீ குளம்குளித்து
விஞ்சு பலன்காண் பரிசேலோர் எம்பாவாய்!

21. பண்பாடும் நற்றமிழின் பாட்டும் நல் கூத்ததுவும்
விண் காணும் மாமயில வேலாட மஞ்ஞையும்
வெண்பா கலிவஞ்சி ஆசிரிய நன்பாக்கள்
தண்ணென் மருட்பாவும் தான்பாட வேள்மயிலம்
பெண்பாவே நீகலந்து, நான்கலவா நெஞ்சத்தால்
வண்மை மிகவுடைய வள்ளிதெய்வா நாயகனின்
கண்ணசைவை நீகாணக் காமுற்று நீராடி
அண்ணல் அருள்கேள்! பரிசேலோர் எம்பாவாய்!

22. கந்தன் முருகன் மயிலமலை கல்யாணன்
சிந்தை சிவம்வைத்த பாலயர்க்குத் தானன்பன்,
சுந்தரவேல் கையன் விழிகள் கரங்களதும்

எந்தைகுப் பன்னிரண்டாம்; ஆறு முகம்படைத்து,
சுந்தர நல்க  ணபதியின் தம்பியாகி,
உந்து மயிலமலை வேள்வரப்பி ரஸ்தாதி
மந்திரனை நீசென்று போற்றுப் பெண்ணணங்கே!
இந்தே எழுதி! பரிசேலோர் எம்பாவாய் !

23. அம்மான் வருகின்றான் கைமான் மகனவனே!
அம்மான் நீயும்தான் ஏதுறங்கல் பெண்மானே!
தம்மானும் வள்ளிதெய் வானைத் துணைமான்கள்
செம்மான் மயிலம் சிவமுருகை கொண்டதனால்
பெம்மான் அருள்பெற்றுப் பேறுநலம் பெற்றிடவே
வம்மான் எனவாகாய்! வாழ்வுவரம் நீபெறவே
வெம்பாவை வேல்விழியே! வைகறை கண்விழி!
செம்மை வரம் காண் பரிசேலோர் எம்பாவாய்!

24. மன்னிய தெய்வம் மதிசூடி தன்மகனை
நன்மை மயிலந்து நாயகனை, பாலயரின்
பொன்னுள்ளம் ஞானம்தான் பாய்ச்சுகின்ற தூயவனை
அன்னை தமிழமுது அங்குண்ணும் பாவலனை
என்னே? எனவெண்ணா இல்லினது பைங்கொடியே!
உன்னே எதுவேண்டும் ஊனுறக்கம் விட்டுஎழு!
நன்னோநீ! நீராடி நற்காலை ஓடிச்செல்!
துன்பம்போம்! வேண்டு! பரிசேலோர் எம்பாவாய்!

25. சேய்கடவுள் போற்றி, பயம்அறுத்துச் சிந்தையில்
தோய்கடவுள் தன்னைச் சரவ ணபவவென்று
வாய்மணக்கப் பன்முறை சொல்லி மெருகேற்றித்
தாய்ப்போல்நீ வந்தென்னைத் தாங்கு எனவேண்டப்
பேய்த்தூக்கம் நீக்கிப் பிழையோட்டி நீராடித்
தூய்மை உடல்மனம் தான் துலக்கி வெண்கலம் போல்
வேய்த்தோளி! வேள்மயிலம் வேல்வேண்டு, மின்னல் போல்
சாய்க்கும் துயரம் பரிசேலோர் எம்பாவாய்!

26. பார்த்திடுவாய்! செம்பொன்போல் மேனி; முகம் நெற்றிச்
சார்த்துத் திருநீறு; கண்கருணை, ஊற்றுதமிழ்ச்
சேர்த்தும்வாய்; கைவேல் கதிரொளி, வான்நீலம்
கோர்த்திடு மஞ்ஞை, அனல்சேவல், கோபுரத்து
ஆர்த்திடும் அண்டதேவர், ஞானவொலி, இங்குசித்தர்
கூர்த்திடும் சித்து, சிவஞான போதமெல்லாம்
நேர்கொண்டு மாமயிலம் சீர்காண், எழுந்துபோது!
தார்காண் தனம்காண் பரிசேலோர் எம்பாவாய்!

27. வல்ல கிரௌஞ்சம் வாய்ப்பிளக்க, வன்னசுரர்
பொல்லார்கள் மார்பிளந்து, சூர்தடிந்து வேல்கொண்டான்
கல்மனத்துச் சூரபன்மன் மார்பிளந்தான், செஞ்சேவல்
வெல்கொடியான், மஞ்ஞைஞதன் வாகன மாமயிலோன்
இல்மனதில் மண்டுமிருள், பைங்கொடியே! ஃதுணர்ந்து
அல்நீங்க, எல்தோன்ற மயிலவேள் சென்றடைவாய்த்
தொல்லை பிறப்பறுக்கும் தூயமணிச் சேயோனை
நல்காலை போய்காண் பரிசேலோர் எம்பாவாய்!

28. செவ்வேள், அவன்கைவேல் சக்தியுமை தன்னருள்வேல்
அவ்வேல் துணையிருந்தால் அண்ட சராசரத்தும்
எவ்வெவர் தன்பகையும் என்செய்யும்; அஃதன்றி
வெவ்விடமும் வாட்டுபகை சூனியமும் ஏவலதும்,
கவ்வுமுயிர் காலனவன் மாபயமும் என்செய்யும்;
செவ்வேள் மயிலமலை வீற்றிருக்கப் பொற்கொடியே
அவ்வேள் அடிபணிய அஃதோடும்; நீராடி
செவ்விபோ! செல்சேர் பரிசேலோர் எம்பாவாய்!

29. வாழ்க! மயிலமமர் வள்ளிமண வாளனே!
வாழ்க! அமைதிதரும் தெய்வமகள் வேந்தனே!
வாழ்க! சிவஞானர் சிந்தைவாழ் வேலனே!
வாழ்க! அருணை சிவஞான செல்வனே!
வாழ்க! உமைமகனே! வான்மயிலம் முத்தமிழே!
வாழ்க! கலியுகக் கண்கண்ட தெய்வமே!
வாழ்க! எனப்போற்றி வாழ்மகளே! நீராடி
வாழ்த்து வணங்கு! பரிசேலோர் எம்பாவாய்!

30. வள்ளல் முருகை வளர்மயிலப் பைந்தமிழை
வள்ளி மணவாள மங்கலனை மாமருகை
உள்ளம்வை ஓம்என்று சொல்லிவை வேல்நெஞ்சில்!
வெள்ளிபோல் பங்குனியில் நன்னீரை மெய்யூற்றி
அள்ளியள்ளி மேனியெலாம் முத்துநீர் சிந்திவிழ,
கள்ளவிழி தான்குளிர மங்கை சிறுமகளே!
வெள்ளிநிலா பங்குனியில் நீராடி உத்திரம்போ.
அள்ளும் வரம்கொள் பரிசேலோர் எம்பாவாய்!

# செந்தமிழ்ச் சேவகர் சிவஞானி பிள்ளைத்தமிழின் ஒரு பாடலும் உரைச் சிறப்பும்

**சைவநெறிச் செம்மல், சித்தாந்த ரத்தினம் பா. அசோக்குமார்,,**
மதிப்பியல் தலைவர்,
திருப்பாதிரிப்புலியூர்ச் சித்தாந்தச் சைவநெறி மன்றம்,
கடலூர். அலைபேசி: 99949 29899

*மானுடம் செழிக்க, அறநெறிகளைக் கடைப்பிடித்து அன்பர்கள் வாழ்ந்திட விண்ணிலிருந்து இறங்கி மண்ணில் வந்துதித்த அருட்கருணையாளரே ஸ்ரீ பால சித்தர் ஆவார்.*

*அவருக்குச் சேவை செய்வதையே தமது கடமையாகக் கொண்டு வாழ்ந்த குழந்தைப் பேறற்ற ஒரு தம்பதியினருக்குத் தாம் உண்ட கள்ளிப்பாலின் சேடத்தால் ஓர் ஆண்மகவு பிறக்க, அக்குழந்தையைத் தமது முதன்மைச் சீடராய்த் தமக்குப் பின் வீரசைவத் திருமடத்தை நிர்வாகம் செய்யும் தகுதி உடையவராக ஆக்கினார். அவரே சிவஞான பாலய சுவாமிகள் எனும் தீட்சா நாமத்தோடு இரண்டாம் பட்டம் குருமகா சந்நிதானங்களாகப் பொம்மபுரம் ஆதீனத்தை அருளாட்சி செய்தார்கள். அதன்பின் வழிவழியாக அருளாட்சி கண்ட குருமகா சந்நிதானங்கள் அனைவரும் சிவஞான பாலய சுவாமிகள் என்னும் திருநாமத்தோடு சமயப் பணியைத் தொடர்ந்து செய்து வருகிறார்கள்.*

*அவ்வழியில் தற்போது அருளாட்சி செய்து வரும் இருபதாம் பட்டம் சுவாமிகள் தம் அருளாட்சி மணிமகுடத்தில் ஒரு வைரக்கல்லாக **28.05.2023** அன்று தில்லியில் நடைபெற்ற புதிய பாராளுமன்றம் திறப்பு விழாவில் பாரதப் பிரதமர் மாண்புமிகு திரு. நரேந்திர மோடி அவர்களிடம் சுதந்திரச் செங்கோல் வழங்கிய ஆதீனங்களுள் ஒருவராய்த் துருவ நட்சத்திரமாய் ஒளிர்ந்தார்கள். அத்தகு தனிச்சிறப்பு வாய்ந்த இருபதாம் பட்டம் குருமகா சன்னிதானங்களின் தனிப்பெரும் சிறப்பை மயிலம் பொம்மபுர ஆதீனப் புலவர் தேவிகாபுரம் அருட்கவி க. சிவக்குமார் அவர்கள் 'செந்தமிழ்ச் சேவகர் சிவஞானி பிள்ளைத்தமிழ்' என நூறு பாடல்களில் பிள்ளைத்தமிழ் பாடி, சுவாமிகளின் பொன்னார் திருவடிகளில் சமர்ப்பித்து உள்ளார்கள். ஜாடிக்கேற்ற முடியாய் அந்நூலுக்கான உரையை மயிலம் சி.பா.சு.தமிழ், கலை, அறிவியல் கல்லூரி முதல்வர் முனைவர் ச. திருநாவுக்கரசு அவர்கள் அருமையாக வரைந்துள்ளார்கள்.*

*நூறு முத்துக்களால் கோர்த்த முத்துச்சரமான இப்பிள்ளைத்தமிழில் ஒவ்வொரு முத்தும் நல்முத்து எனினும் ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு*

பதம் என்பது போல் ஒரு முத்தான பாடலைப் பிள்ளைத் தமிழின் மூன்றாவது பருவமான தாலப் பருவத்தின் நிறைவுப் பாடலை நாம் இங்குச் சிந்திப்போம்.

*சத்தியாம் கௌரி மனோன்மணி வந்து*
*சந்ததம் தாலாட்ட*
*சகலக் கலைகள் தந்திடும் அந்த*
*சரஸ்வதி தாலாட்ட*
*அத்திரு மலராள் இலக்குமி அன்பாய்*
*அழகுற தாலாட்ட*
*அந்தர மாதரும் சொந்தமாய் நின்னை*
*அருமையாய்த் தாலாட்ட*
*முத்தமிழ்ச் சுவையாய்ச் செந்தமிழ்ச் சேவக*
*முழுமையாய்த் தாலாட்ட*
*முத்தமும் சொரியும் வங்கக் கடலும்*
*முனிவற தாலாட்ட*
*சத்ததாம் மயில பொம்ம புரத்தாய்*
*தாலே தாலேலோ*
*தண்மணி இருபதாம் சிவஞானக் கொழுந்தே*
*தாலே தாலேலோ.*

ஒவ்வொரு மனிதனின் வாழ்க்கைக்கும் கல்வி, செல்வம், வீரம் எனும் மூன்றும் அவசியமானவை. கயிலாயத்தில் காவல் புரிந்த வீரமிக்க சங்கு கன்னர் பாலசித்தராகத் தோற்றுவித்த திருமடம் என்பதால் வீரம் இங்கே ஆரம்பத்திலேயே வந்தமைவது தெள்ளிதின் புலனாகும். வேதங்களையும் சிவாகமங்களையும் சிவஞானத்தையும் உபதேசித்ததால் கல்வியில் சிறந்து விளங்குவது உள்ளங்கை நெல்லிக்கனியாய்த் தெரிகிறது. சுவாமிகளின் உபதேசங்களைப் பெற்ற சீடர்கள் திருமடம் அமைவதற்கும் மற்றும் அவர்களது சமயப் பணிகளைத் தொடர்வதற்கும் மனமுவந்து அளித்த இடமும், நிலமும், பொன்னும், பொருளும் செல்வத்தின் குறியீடாக நாம் கொள்ளும்போது பொம்மபுர ஆதீனம் கல்வி, செல்வம், வீரம் எனும் மூன்றிலும் ஓங்கிச் சிறந்து விளங்குவதைத் தெரிந்துகொள்ளலாம்.

கல்வி, செல்வம், வீரம் என மூன்றுக்கும் அதிதெய்வங்களான கலைமகள், அலைமகள், மலைமகள் என முத்தேவியருமே தாலாட்டு பாடுவதாகச் சிறப்பான கற்பனையில் அமைந்த பாடல்தான் இது.

சக்தி (மலைமகள்) கௌரி மனோன்மணி தாலாட்டு பாடுகிறாள். சகல கலைகளையும் தந்திடும் சரஸ்வதியும் தாலாட்டுகிறாள். செல்வத்தின் அதிபதியாம் திருமகள் இலக்குமியும் அன்போடு தாலாட்டுகிறாள் என முதல் ஆறு வரிகளில் கூறி அதனைத் தொடர்ந்து தேவருலகத் தேவியரும் இயல், இசை, நாடகம் எனும் முத்தமிழின் இனிமையோடு செந்தமிழில் செந்தமிழ்ச்

சேவகரைத் தமது குழந்தையாகப் பாவித்துத் தாலாட்டு பாடுகிறார்கள் என்று வர்ணிக்கிறார் கவிஞர். அது மட்டுமா இயற்கையும் இருபதாம் பட்டம் சுவாமிகளைத் தாலாட்டு பாடுவதாக, முத்தினைக் கொண்டு வந்து கரையில் சேர்க்கும் வங்கக் கடலும் ஓங்காரமாய் ரீங்காரமிட்டு ஆர்ப்பரிப்பு இன்றி அமைதியாய் இனிய இசையில் தாலாட்டு பாடுகிறது என்று கற்பனையை விவரிக்கிறார் கவிஞர். வங்கக் கடல் என்பதால் பாற்கடலில் துயிலும் மாதவனும் தாலாட்டுகிறார் என்பதை உள்ளிடைக் குறிப்பாய் உணரலாம்.

முத்தமும் சொரியும் வங்கக் கடலும் எனும் வரியின் உம் என்ற சொல்லாட்சியை ஆழ்ந்து சிந்திக்கும்போது முத்து மட்டுமல்லாமல் வேறு பல்வேறு நிதியங்களையும் கொண்டுவந்து சேர்க்கும் வங்கக்கடல் எனும் மேலோட்டமான பொருளோடு, குழந்தை, தூளியில் (தொட்டிலில்) உறங்கிக் கொண்டிருப்பதைப் பார்க்கும் பேரார்வத்தில் வங்கக் கடலும் குழந்தை விழித்துக் கொள்ளுமோ என அஞ்சித் தனது ஆரவாரத்தை ஒடுக்கி அமைதியாகக் கரை சேர்ந்து இனிய மெல்லிய இசையுடன் பாடியும் தாலாட்டியும், இந்தச் சீரான இடைவெளியில் அலைகள் தொடர்ச்சியாக வந்து வந்து அழகான குழந்தையின் கன்னத்தில் முத்தங்களை வரிசையாகப் பதித்தும் செல்கிறது. மேலும் பிற உயிர்களிடத்து அன்பும் கருணையும் காட்டும் தருணத்தில் இயற்கையாக ஊறிச் சுரக்கும் தன்மையைக் குறிக்கும் பால் சொரியும், கண்ணீர் சொரியும் என்பவை போன்று வங்கக் கடலும் அன்பு மீதூர ஞானக்குழந்தைக்கு முத்தம் சொரிகிறது. இன்றும் ஆறாக் காதலினால் அலை அலையாக வந்து கொண்டிருக்கிறது எனும் பொருளைக் கொண்டு கூட்டும் பொழுது பாடலின் சிறப்பு போதவிழுந்து மலராகி மணம் பரப்புவதைப் போல் மென்மேலும் கூடுகிறது அல்லவா.

மறத்திற்கும் (வீரம்) அஃதே (அன்பே) துணை எனும் வள்ளுவர் வாக்கிற்கியைப செந்தமிழ்ச் சேவகராக, சிவஞான குருநாதராகக் கல்வி, செல்வம், அன்பு(கருணை உள்ளம்) என இம்மூன்றும் வரம்பிலி அருளுடைமைத் தன்மையதாய் விளங்கும் அவதார புருடராக அருளாட்சி செய்துவரும் செந்தமிழ்ச் சேவகர் இருபதாம் பட்டம் குருமகா சந்நிதானங்களின் பொன்னார் திருவடிகளைப் போற்றி வணங்கி மகிழ்வோம்.

# வள்ளுவரும் குமரகுருபரரும்

**புலவர் சு. சொக்கலிங்கம்**
தமிழ் விரிவுரையாளர் (பணி நிறைவு)
புதுச்சேரி 8, தொடர்பு :8903140432

அறநூலாம் திருக்குறளை எடுத்தாளாத புலவர் இல்லையென்றே கூறலாம். அவர்களுள் சிலர் குறளை முழுமையாகவும், வேறுசிலர் குறளின் முதலடியையோ, ஈற்றடியையோ தம் பாடலில் கொண்டு வந்திருப்பர், மற்றுஞ்சிலர் குறள் கூறும் உட்பொருளை அல்லது பாடுபொருளைத் தம் பாடலில் கொண்டு வந்திருப்பார். சுருங்கக் கூறின் திருக்குறளின் சுவடுகள் இல்லாத படைப்புகள் இல்லை என்றே கூறலாம். அந்த வரிசையில் குமரகுருபரர் அருளிய திருவாரூர் நான்மணிமாலையில் திருக்குறள் சுவடுகள் பயின்றிருப்பதைக் காணலாம்.

அரண்மனை மாடத்தில் கொடிகள் பறப்பதை இலக்கியங்களில் புலவர் காட்டியிருப்பர். கொடிகள் பறப்பதை அணிநலன் கூட்டியும் கூறியிருப்பர். சிலம்பு பாடிய இளங்கோவடிகள் மதுரை மாநகரின் அரண்மனையில் கொடிகள் பறப்பதைக் கோவலன் கண்ணகி இருவரின் மதுரை வருகையை மறுத்துக் கைகாட்டியதாகக் காட்டியிருப்பார்.

*"போருழுந் தேடுத்த ஆரெயில்*
*நெடுங்கொடி*
*வாரல் என்பனபோல் மறித்துக் கைகாட்ட"*

என்பார். அதுபோலவே கம்பனும் தன் காவியத்தில் இராமன், இலக்குவன் வருகையைக் கொடிகள் வரவேற்பதாகக் காட்டியிருப்பார்.

*செழுமணிக் கொடிகள் என்னும்*
*கைகளை நீட்டி அந்தக்*
*கடிநகர் கமலச் செங்கண்*
*ஐயனை "ஒல்லைவா" என்று*
*அழைப்பது போன்ற தம்மா* *( மிதிலைக் காட்சிப் படலம் 1)*

முன்னது எதிர்மறையாகவும், பின்னது நேர்மறையாகவும் அமைந்துள்ளமையைக் காணலாம். அரண்மனைக் கொடிகளின் இச்செயல்கள் இரண்டும் ஒன்றுக்கொன்று மாறுபட்ட கருத்தினைக் காட்டிய போதிலும்

சுவையூட்டத் தவறவில்லை. இவை இரண்டும் தற்குறிப்பேற்ற அணி வகையில் அமைந்து படிப்போனைப் படைப்புக்குள் அழைத்துச் செல்கின்றன.

ஆனால் குமரகுருபரர் தான் அருளிய திருவாரூர் நான்மணி மாலையில் அரண்மனைக் கொடியின் செயலை வேறு விதமாக் காட்டும் அதே வேளையில் வள்ளுவத்தையும் கையாண்டுள்ளார்.

சான்றோர் பெருங்குணத்தைக் கூற வருகிறார். அதற்கு அரண்மனைக் கொடிகளை உவமையாக எடுத்துக் கொள்கிறார். வான்முட்ட பறந்த கொடிகள் பறக்கும் போது காற்றின் வேகத்தால் அசைந்து, அசைந்து வானின் வயிற்றைக் கிழிக்கும் வகையில் உயர்ந்தும் பறக்கின்றது. அரண்மனைக் கொடியின் இச்செயலின் கொடுமையைத் தாங்க முடியாமல் வானமானது வலியால் நொந்து தவிக்கின்றது. வலியால் தவித்த போதிலும் அக்கொடிகளால் ஏற்பட்ட வலியின் கொடுமையைப் பெரிதாக மனத்தில் கொள்ளாமல் பொறுத்துக் கொள்வதோடு, பறக்கும் அக்கொடிகளின் வெப்பத்தைத் தணிக்கவும் வானம் நினைந்து தன்னுடன் உறையும் குளிர் நிலவைக் கொண்டு அக்கொடிகளைக் குளிரவும் செய்கின்றதாம்.

வானின் இச்செயல் எவ்வாறு இருக்கிறதென்றால், தனக்குத் துன்பம் செய்பவரை வெறுத்தொதுக்காமல் இருப்பதுடன் அவருக்கு நன்மை செய்யவும் நினைக்கும் சான்றோரின் அருஞ்செயல்போல் இருந்ததாம்.

***விண்தொட நிவந்த வியன்துகில் கொடிகள்***
***மண்டலம் போழ்ந்து மதியகடு உடைப்ப***
***வான்நிலா அமுதம் வழங்கிஅக் கொடிகள்***
***வேனிலில் பயின்ற வெப்பமது என்றஆற்றுப்பு***
***கொடியார் எத்தனைக் கொடுமை செய்யும்***
***மதியார் செய்திடு உதவியை உணர்த்தும்***
***பன்மனை மாடப் பொன்மதில்***
***கமலைக் கடிநகர் வைப்பினில் கண்டேன்.*** *(பாடல் 8.10–15)*

இப்பாடலில் வள்ளுவப் பெருமான் வழங்கிய சான்றாண்மை அதிகாரத்தில் மனிதனின் உயர்பண்பைக் கூறும் இன்னா செய்தார்க்கும் இனியவை செய்யாக்கால் என்ன பயத்ததோ சால்பு என்று கேள்விக்குறியோடு நின்ற குறளின் சுவடு படிந்திருப்பதைக் காணலாம்.

மனிதனின் உடலில் வாதம் (ஊதை), பித்தம், சிலேத்துமம் (கபம்) என்ற மூன்றின் அளவு மிகுந்தாலும் குறைந்தாலும் மனிதனை நோய் பற்றும்,

உடலைப் பிணிக்கும் உடலைப் பிணிப்பதாலே நோயைப் பிணி என்ற சொல்லாலும் குறிக்கிறோம். இதனை வள்ளுவர்

***மிகினும் குறையினும் நோய்செய்யும் நூலோர்***
***வளிமுதலாக எண்ணிய மூன்று***

என்பார். இக்குறளை உள்வாங்கிய குமரகுருபரர் அவர்கள்,

***புலத்தலை உயிர்மீன் அலைத்தனன் பிடிப்ப***
***ஐவளி பித்தென வமைத்துவைத் திருந்த***
***முத்தலை தூண்டில் தூண்டி யத்தலை*** ***(பா எண் 13-15)***

என்கிறார். ஐவளி என்பது காற்றைக் குறிப்பதாகும். “ஐ” என்பது ஒரு வியங்கோள் சொல்லாகும்.

ஒருவரின் உடலில் வாதம், பித்தம்,சிலத்துமம் என்ற மூன்றின் அளவானது மிகுந்தாலும் குறைந்தாலும் அவரை நோய்பற்ற, அவர் தூண்டின் மீனைப் போலத் துடிப்பாராம். நோயுற்ற அவரைத் தூண்டினில் அகப்பட்ட மீனுக்கு உவமை காட்டியதுடன் அவனைப் பற்றித் துன்புறுத்தும் நோயைத் தூண்டில் முள்ளுக்கு உவமையாகவும் காட்டியுள்ளார்.

# மயிலம் முருகனும் பாலசித்தரும் ..!!

சித்தாந்த ரத்தினம், கவிஞர். க. இளங்கோவன்
மதிப்பியல் தலைவர்,
திருப்பாதிரிப்புலியூர்ச் சித்தாந்தச் சைவநெறி மன்றம், கடலூர்.

*விழுமிய,*
*விழுப்புரம் மாவட்டம் மயிலத்தில்*
*வீரசைவப் பெரிய திருமடம்..!*
*பழுத்த வீரசைவ நெறிகளோடு*
*சமுதாயப் பணியாற்றும்*
*பெரிய திருமடம் அது..!!*
*ஆம்! அது திருக்கைலாயப் பரம்பரை*
*வழிவந்த ஆதீனம்..!*
*ஒருவகையில் வீரசைவர்கள்*
*அனைவரின் மூலதனம்...!*
*அதன் இருபதாம் பட்டம்*
*சிவஞான பாலய சுவாமிகள்தான்*
*இன்றைய இணையில்லாச் சந்நிதானம்..!!*
*சந்நிதானம் அருளாட்சி செய்யும் இடம்தான்*
*சமயத் தமிழ் மணக்கும்*
*மயிலம் பொம்மபுரம்..!*
*ஆம்! அது தென்னகத்தின் சிவாலயம்..!*
*அதன் கர்த்தாவே*
*பரம்பொருளாம் சிவபெருமான்*
*அம்சமான மகாசந்நிதானம்..!!*
*அச்சந்நிதான ஆதீனத்திற்கு*
*ஆதி வரலாறு ஒன்று உண்டு..!*
*ஆதி நாளில் சிவபெருமானின்*
*கயிலை காவலராம்*
*சங்கு கன்னருக்குப் பெருமான்*
*பெரியதொரு கட்டளையிட்டார்..!*
*தென்னாட்டில் வீரசைவம்*
*தழைத் தோங்கச் செய்திடுவாய்..!*
*என்றைக்கும் ஐந்தெழுத்தை*
*உபதேசமாக ஒலித் திடுவாய்..!!*
*எம்பெருமானின் கட்டளையை*
*இட்டலிங்கமாய்ப் போற்றிச்*

*சங்கு கன்னர் ஏற்றிட்டார்..!*
*கீழைக்கடலில் பத்துவயது*
*பாலனாய்ப் பொம்மபுரமாம்*
*பிரமபுரத்தில் அவதரித்தார்..!*
*பெருமுக்கல் தானடைந்து*
*பெருந்தவம் மேற்கொண்டார்..!*
*பலரும் பாராட்ட முருகன்வாழ்*
*மாமயிலம் வந்தடைய*
*விதிவசத்தால் வள்ளி தெய்வானை*
*சித்த கன்னியராய்ப்*
*பால சித்தர் தமையடைந்தார்..!*
*மனம் மகிழ்ந்து இருவரையும்*
*மகளாய்ப் பாவித்து*
*காலம் கனிந்திடவே*
*காதல் போராட்டத்தால்*
*முருகனுக்கே மணமுடித்தார்..!!*
*அதனால் மயிலம்*
*மணக்கோல மாமுருக*
*மாமயில மானதுவே.!*
*கள்ளிப்பால் உண்டுவந்த*
*பாலசித்தர் வேண்டுதலால்*
*வீரசைவ வீறு விளங்க*
*முருகன் அருள் பெற்ற*
*சிவஞானி தோன்றியதும்*
*முருக சந்நிதி வலம்பால்*
*ஆனித்திரு வாதிரையில்*
*வானில் வளர் சந்திரனாய்ப்*
*ரிபூரணம் பெற்ற நாளே*
*பெரிய குருபூசையாய்ப்*
*பொலிந்ததால் அதை வணங்கி நாளும்*
*நல்லருள் பெறுவோமாக..!!*

PRGI No.TNTAM/25/A4155